அசு. 183

புககுசுமம்

PRESENTED BY: ... K... ...CHETTIAR ...

கா. ஆலாலசுந்தரம் பிள்ளை.

விலை அணா இரண்டு.

மாவட்ட நூலக ஆணைக்குழு

ஸ்ரீ ஸாம்பசிவாய நம:

சிவ[illegible] வித்து அம்சம்.

முதலாவது அத்தியாயம்.

* ஜைகிஷவ்ய ஸ்கந்த சம்வாதம்.

கணபதி ஸ்தோத்திரம்.

சோமாத்மஜம் சாமஜ வக்திர மாத்யம்
கணேச சாமஸ்துதி விக்ந வைத்யம்
ஆத்யம் சுராணும் நிகிலைஸ்ச வந்தியம்
வந்தே சதாஹ்ருத்ய தமம் த்வமேபத்யம்,

ஸாம்பசிவபுத்திரரும், முதன்மையானவரும், தனது சம்பந்தமான (சாமத்தினால் தன்னைத் தோத்திரத்திஞ்செய்வோரது விக்கினமென்னும் வியாதிக்கு வைத்தியரும் தேவர்களுக்குத் தலைவரும், யாவராலும் வணங்கப்படுகின்றவரும், எப்பொழுதும் (அன்பர்களுடைய மனதில்) மிகவும் உதிக்கின்றவரும், ஒருவராலும் இடர் செய்யப்படாதவருமான, யானையினது திருமுகத்தைப்படைத்த விநாயகக்கடவுளை நமஸ்கரிக்கின்றேன்.

ஓ மஹாசாம்பவர்களாகிய மஹருஷிகாள்! ஸ்ரீகைலாயத்தில் ஸ்கந்தருடைய சந்நிதானத்தில் முனிவர்கள் கூடியிருக்கும்பொழுது அவருள் ஜைகிஷவ்ய முனிவரென்பவர் எழுந்திருந்து சுப்பிரமணியக்கடவுளை வணங்கி ஆதிசேஷனால் சொல்லப்பட்ட சஹஸ்ரநாமத்தை அடியேனுக்கு உபதேசிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய சுப்பிரமணியக்கடவுள் உபதேசிக்கத் தொடங்கியமுறைமையைக்கூறுகின்றேன் கேட்பீர்களாக வென்று சூதபகவான் சொல்லலுற்றனர்.

ஓ சவுநகாதிமுனிவர்களே! ஓர் காலத்தில் ஸ்ரீகைலாயத்தில் ஸ்கந்தருடைய மஹா சந்நிதானத்தில் பிரமதகணங்களுந் தேவ கணங்களும் முனிகணங்களுங் கூடிச் சிவகதாப்பிரசங்கத்தில் ஆசையுடையவர்களாய் ஒவ்வொருவரும் பிரசங்கஞ் செய்யும்பொழுது அவர்களுள் மஹா சிவபக்தாக்ர கண்யராயும், பரசிவ பாதார விந்தத் தியானத்தினு லுண்டாகும்

---

* ஜைகிஷவ்யர் ஸ்கந்தரை வினவுதல்.

உ சத்தில் ரமித்திருக்கும் மனமுடையவராயும், சந்தனம்போல் குளிர்ந்துள்ள சொன்மகிமை யுடையவராயும், மஹாத்மாவாயும் உள்ள ஆனந்தஷவ்யரென்னுமஹாமுனிவரெழுந்து திரிபுராந்தகருடைய புத்திரரும் ர்ச்சியுநாசுரனுக்குப் பகைவருமான சுப்பிரமண்யக்கடவுளை அஷ்டாங்க பஞ்ஜைகிக திரியாங்க ஏகாங்கமுறையாகப் பலமுறைவணங்கிக் கண்ணீரரும்பி தாரார்ப்புளகங்கொண்டு இருகரங்களையுஞ் சிரமேற்குவித்து எதிரே நின்று சாராழைக்கனிபோன்ற இனியமொழிகளாற் ஓ சத்துருசங்காரா! எம்பெருமானும் திரிபுராரியுமாகிய பரமசிவனுருடைய பிரேமைக்குப் பாத்திரா! தாரகாசுர சம்ஹாரா! ஸ்கந்தா! அடியேன் தேவரீருடைய சந்நிதானத்தில் ஒரு சிறிய விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் ஆவலுடையவனு யிருக்கின்றேன். அதனைத் திருச்செவியேற்றுத் திருவுளத்துட் கொண்டு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனர்.

அஃதென்னையெனின், சங்கரராகிய சிவசந்நிதானத்தில் முன்னர் கூறிப்போந்த எட்டாவது அம்சத்தினிறுதியில் ஆதிசேஷனுடைய ஆயிர முகங்களாலும் பரமசிவத்தினுடைய ஆயிரந் திருநாமங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்தச் சஹஸ்ரநாமம், ஏனைய பல சஹஸ்ரநாமங் களுக்குள் திவ்யமாகிய சஹஸ்ரநாமமென்று திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றீர். அதனையே இப்பொழுதுகேட்கவேண்டுமென்று விரும்புகின்றேன். ஆகையால் தேவரீருக்கு என்பால் கருணையுளதாயின் அந்த ஆதிசேஷபகவானியற்றிய சிவசஹஸ்ரநாமத்தை அவசியமாய் அனுக்கிரகஞ் செய் வேண்டும். மாந்தளிரை யுண்கின்ற குயில் மற்றொரு தளிரை விரும்பாது அந்த மாந்தளிரையே விரும்புவதுபோல், அடியேனும் வேறொரு கதா சாரத்தைக்கேட்க விரும்பாமல் சிவகதாசாரத்தையே கேட்க விரும்பு கின்றேன்.

அன்றியும் பரமசிவனுருடைய பாதாரவிந்தமானது என்னுடையமனதில் குடிகொண்டிருக்கிறபடியினுலும் தேவரீருடைய கிருபாவசத்தினுலும் அடியேன் நிர்மலஞானனுதலால் துச்சமாகிய வேறு வர்ணுஶ்ரம தருமங் களைக்கூறும் பகுதிகளாகிய நூல்களில் அடியேன் மனம் ரமிக்கிறதில்லை. (ஆயின்) சிவகதையானது அளவுட்படாத சமுத்திரம்போலு மிருப்பதாயிற்றே அதனை நீ கேட்க முடியுமோவெனின் அதைத்தான் கேட்டு முடிக்க வேண்டு மென்னும் ஆசையுண்டாகிறதே யொழிய அளவிடற்குறிய வேறு வர்ணுஶ்ரம தர்மங்களைக்கேட்க விருப்பமுண்டாகிறதேயில்லை. அறம் பொரு ளின்பங்களைப்பற்றிய விவரணங்களைக்கேட்க விருப்பமில்லையோ வெனின் அந்த விவரணங்களைத் தேவரீர்முன்னரே சொல்லக்கேட்டிருக் கின்றேன்.

ஆகலான் ஆதியில் சிவசஹஸ்ர நாமங்களுக்குள் ஆதிசேஷனல் சொல்லப்பட்ட அனுதியாகிய சஹஸ்ரநாமஞ் சிறந்ததென் றருளியபடி யால் அதனையே இப்பொழுதுகேட்க விரும்புகின்றேனென்று விண்ணப் பஞ் செய்தனர்.

பின்னர் சுப்பிரமணியக்கடவுள் அம்முனிபுங்கவருக் குபதேசித்த முறையைக் கூறுகின்றேன், கேட்பீர்களென்று சூதமுனிவர் சிவத்தியான பரராய் ஆனந்தபாஷ்பஞ் சொரிந்து சவுநகாதிமுனிவர்களை நோக்கித் திருநோக்கமென்னுந திக்ஷைசெய்துசொல்லத்தொடங்கினர்.

ஓ சவுநகாதி முனிவர்களே! ஷண்முகக்கடவுள், திருநீறுசண்ணித்த திருமேனியுடையவராயும், மன்மதனென்னும் யானையைச் சுட்டெரித்த காமதகனனை இதய கமலத்தில்தியானிப்பவராயும், அனவரதமும் சிவலிங் காராதனஞ்செய்பவராயுமுள்ள ஜைகிஷவ்ய முனிவரைநோக்கித் தாம்திரு வாய்மலர்ந்தருளப்போகிற சிவகதாமிருதத்தைக் கிரமமாய்க்கூறத் தொடங்கினர்.

ஓ ஜைகிஷவ்யமுனிவரே! நீர் பரமசிவனுடைய பாதாரவிந்தத்தைப் பூசிப்பதில் மிகவும் மனவூக்கமுள்ளவராகையால் ஆதிசேஷன் தன் ஆயிரநாவினுலுஞ் சொன்ன சஹஸ்ர நாமத்தைக் கேட்கவிரும்பினீர். ஆகலான் நீரே முனிசிரேஷ்டர். பிரமதகணங்களும் தேவகணங்களும் முனிகணங்களுங் கூடியிருக்கின்ற இந்த மஹா சபையிற் கேட்டபடியால் யாவருந் தன்யராவர். அதனுல் நீருந் தன்யரானீர். ஏனென்றால் சஹஸ்ர நாமத்தால் பூஜிக்கப்பட்ட சிவலிங்காராதனத்தின் பெருமையையும் சிவ கதையின் பெருமையையும் முன்னர் சில கூறுகின்றேன் கேளும். பாதாள லோகவாசியாகிய ஹாடகேஸ்வரரை மானிடர்கள் பூசிப்பாராயின் அது பிறவிக்கடலைக் கடத்தற்கு ஓர் புணையாகும். சம்சாரமென்னுந் தாபத்தினுல் தகிக்கப்பட்டவன் அச்சிவகதை யென்னுங் கடலிலுண்டாகும் ஆனந்தமாகிய அலையின்றுளி செவியிற் படப் பெறுவானாயின் அது அவனுள்ளத்தைக் குளிரச்செய்யும். அச்சிவகதை குளிரச்செய்வதுபோல் மகாபரிசுத்தையாகிய * கங்கை குளிரச்செய்யுமா? கங்கை சிவமூர்த்தியின் முடியில் தலைமையாகச் சிறந்திருக்குஞ் சிறப்புடைத்தாயினும் மூழ்கும் ஆன்மாக்களுடைய பாவமொன்றையே போக்குவதன்றி அவர்களை முத்திகாந்தையோடு சேர்ப்பிக்குமா? சிவகதையானது பரமசிவனுருடையபாதாரவிந்தத்தைத் தன்னுள்ளே நினைக்கச்செய்து நினைத்தமாத்திரத்தில் ஐஸ்வரியங்களை யுண்டாக்கும். சிவபெருமானுரும் சந்தோஷிப்பார். அவர் சந்தோஷிப்பதனுல் யாவரும் சந்தோஷிப்பார்கள். அதுவேயுமன்றிச் சகல பாபங்களு நீங்கி விடும், அவை நீங்கவே சகலவிடர்களும் அவனிடம் வருவதற்கு இடர்ப்படும். ஆகலான் எப்பொழுதும் பரமசிவனைச் சந்தோஷகாத்தோடு சிவகதையின்வழியாகத் தியானிப்பவன் முத்தியை யடைவன் இதிற் சந்தேகமில்லை.

---

* இதனுல் பரமசிவனுடைய திருவடியை நினைக்கச்செய்வதும், அதனுல் ஐஸ்வர்ய முண்டாக்குவதும், பரமசிவனைச்சந்தோஷிப்பிப்பதும் அதனுல் யாவருக்குஞ் சந்தோஷ முண்டாக்குவதும், சகல பாவங்களைப் போக்குவதும், அதனுல் இடர்கள் இடர்ப்படுவதும், பரமசிவனைச் சந்தோஷத்தோடு தியானிக்கச்செய்வதும், அதனுல் முத்தியை யடையச் செய்வதும்,"

இத்தகைய சிறப்புவாய்ந்த சிவகதையையே நீர் கேட்க விரும்பினீ ராகையான் மகாகோப முடையவர் என்று சொல்லப்பட்ட பரமசிவனு ருடைய பிரசாதத்திற்கு நீரே உரியவர், நீரே பூசிக்கத்தக்கவர். ஏனென் ருல் யாதொரு சித்தமானது சதாசிவத்தினுடைய பாதாரவிந்தத்திலிருக் கின்றதோ அந்த சித்தந்தான் சித்தமென்றும் மற்றவிடத்தி லிருக்கின்ற சித்தங்களெல்லாஞ் சித்தவிகாரங்களென்றுஞ் சொல்லப்படும். யாதினுலெ ன்னில், சிவபாதாம்புஜமாகிய செல்வத்தைச் சிந்திக்காத சித்தங்கள் பொ ருட்செல்வத்தைச்சிந்திப்பித்துப் பிரபஞ்சப்பிராந்தியையுண்டுபண்ணி அந் தப் பிராந்தியினுல் இருதயத்தில் தாபத்தை யுண்டுபண்ணுகின்றது. இந்த வுண்மையை யறியாமல் உலகில் பாமரரென்றழைக்கப்பட்ட அந்தகராகிய சமுசாரிகள் சிவஞான மென்னும் அமிர்தத்தைவிட்டு ஐம்புல வாசையெ ன்னும் பள்ளத்தில் விழுந்து சித்தத்தை விகாரப்படுத்துகின்றுர்கள். இது மட்டோ, தேவநதியாகிய கங்கையைச் சடையிற்றரித்தவராயும், யானைத் தோலை ஆடையாக வுடையவராயு முள்ள பார்வதிநாதனைச் சிந்திப்பதை விட்டுப் பயனில்லாத விஷயமோகத்தை யடைந்து அதனுல் யமபுரத்துக் குப்போய் துன்பமுறுவதற் குரியவராகின்றுர்கள். இந்தப் பிரபஞ்சிகளை யன்றிச் சாந்த சமதமாதி குணமுள்ள நல் விருத்தியையுடையவரும் கலியு கத்தில் நரகானுபவத்துக்கேதுவாகிய கேள்விகளிலேயேமுயலுகின்றுர்கள். ஆகையால் நீர் சித்தவிகாரத்தை யடையாது சித்தசுத்தியை யடைந்து சிவ கதாரசத்தைக்கேட்க விரும்பினீராகையால் யாம் உம்மைப் பரசிவப் பிர சாதத்துக் குரியவரென்றும் பூசிக்கத்தக்கவரென்றுங் கூறியதென்க.

இன்னமும் யாம் உம்மிடத்திற்கண்ட சிலவிசேடங்களைக் கூறுகி ன்றும். என்னையெனின், நீர்மகாபுத்திமான், சிவஞானசித்திக்கு நேரே பாத்திரமானவர். ஏனென்றுல் திரிநேத்திரதாரியாகிய பரமசிவனுடைய தி வ்யசரித்திரங்களுக்குள் இரண்டு மூன்று சரித்திரங்களைக் கேட்டிருக்கின் றீர், யாவரையுங் கேட்கவுஞ்செய்தீர்.

பெரியோரென்று சொல்லப்படுவோர், பரமசிவனுருடைய கதைகளை க்கேட்கிற காதுகளும் அவரைக்காண்கின்ற கண்களும் ஆகிய இவைகளையே ஆபரணமாகவுடையவர். அத்தகைய பெரியோருடைய பாதார விந்தங்க ளையே சேவிக்கின்ற உமக்கு எல்லாச்சித்திகளும் உண்டாகும். அச்சித்திக ளெல்லாம் உமக்குண்டாகாமல் மற்றையாருக்கு உண்டாகப்போகின்றன. அன்றியும் ஞானமென்பது இருதயத்திலுள்ள அஞ்ஞானவிருளைப்போ க்கும், அவ்விருளொழிந்தவரே முத்தராவார். ஆகலான் அந்தமுத்தத்த ன்மையையுடையவரு நீரே, காலாந்தகரை யாரொருவர் பூசிக்கின்றனரோ அவரே காலனைக்கடந்து விடுவார். ஆகலான் காலனைக்கடந்தவரு நீரே,

---

ஆகிய இவையெல்லாம் சிவகதையைக்கேட்ட அளவையானே உண்டாவ தாகலான் கங்காமகிமையினும் சிவகதாமகிமை சிறந்ததென்று எடுத்துக் கூறியதாம்.

காமதகனரை யாரொருவர்காண்கின்றனரோ அவரே யமபுரத்தைக்காணார், அவரே வெற்றியையும் அழிவில்லாத ஐஸ்வர்யமு முடையவராவர். ஆகலான் யமபுரத்தைக் காணாதவரு நீரே, வெற்றியையும் ஐஸ்வர்யத்தையும் உடையவரு நீரே, பிறவினையடைந்திருக்கின்ற மானுடர்களுக்குப் பரசிவபாவனையும் அவருடைய பாதாரவிந்த பூசையும் உண்டாகுமாகில் அவர்களுக்குப் பிறவி எப்போதும் உண்டாகாதென்பதில் சந்தேகமே கிடையாது. ஆகலான் பிறவியற்றவரும் நீரே என்பதற்குச் சந்தேகமேயில்லை.

பாவித்துப் பூசிப்போர்க்குப் பிறவியையொழிக்கவல்ல அந்தப் பரமசிவனார் அணுவுக்கணுவாயிருந்தாலும் அவர் மகத்துக்கு மகத்தாயிருப்பவர். இருபிறப்பாளரென்றுரைப்பதற்குக் கூடாதவராயினும் இருபிறப்பாளருக்குக்கடவுளாயுள்ளவர், அந்த அந்தண ஸ்ரேஷ்டராகிய பரசிவனார் அந்தணர்களுக்கரசனாகிய சந்திரகலையைச் சடையிற்றரித்தபடியினால் அந்தச் சிவபெருமானாரே அந்தணரென்று சொல்லப்படுவார். யாவராலுஞ் சேவித்துத் தியானிக்கத்தக்கவருமாவார். அங்ஙனந் தியானிக்கத்தக்கவராய்த் திரிநேத்திரதாரியாய் உமாசஹாயராய் விளங்கும் அவ்விஸ்வேசரே பிரபஞ்ச துக்கத்தைப் போக்கடிக்கின்றவர், எல்லாவுயிர்களுக்குந் தாரகமாயிருப்பவர்(சனனமரண துக்கத்தினின்றுந் தாண்டச்செய்கின்றவர்) சங்கரர் (எல்லாருக்குஞ் சுகத்தைச்செய்கின்றவர்)அந்த சங்கரருக்குப் பூசுரர்களும் அசுரர்களும் ஆகிய யாவரும் கிங்கரர்களே (அடிமையாட்களே) ஆகலான் அப்பரமசிவனாருக்கு மெய்யடியரா யிருப்பவரு நீரே.

திரிநேத்திரதாரியாகிய சங்கரரே பந்தாத்மாக்களை எப்பொழுதுந் துக்கத்தினின்றும் விடுவிக்கின்றவரென்று வெளிப்பட்டபடியினால் அவரைமிகவும் பரிசுத்தமாயும் தளிராகியுமுள்ள இரண்டுமூன்று வில்வங்களினாலாவது நாடோறுந்தவறாமல் இலிங்கமூர்த்தியில் பூசிக்கவேண்டும். ஆகலின் அப்பூசனையுடையவரு நீரே.

அங்ஙனம் பூசிப்பவன் சரீரமுற்றும் பஸ்மத்தினால் உத்தூளனமும் திரிபுண்டரதாரணமுமுடையவனாயும், அங்கங்கடோறும்விதிப்படி உருத்திராக்கமணி தரித்தவனாயும், ஆனந்தசித்தமுடையவனாயுமிருந்து, உன்னதமாயும் அங்கஹீனமில்லாமல் சாங்கமுடையதாயுமுள்ள உத்தமசிவலிங்கத்தில் சிவபெருமானாரை நன்றாய்ப்பூசிப்பனாயின் அவனுக்குப்பாவங்கள் எவ்வளவு மிகுந்திருந்தபோதிலும் அவைகளையெல்லாம் அவனுக்குத்தெரியாமலே அச்சிவபெருமானார் போக்கடித்து அவனைப்புறம்போகவொட்டாது தமக்கு அந்தரங்கபக்தனாயிருக்குந் தன்மையைக் கொடுக்கிறார். இவ்வாறு அரியசெயலைச் செய்கின்றாராகலின் அப்பெருமானாரே பூசிக்கத் தகுந்தவர். ஆகலின் பூசாங்கமெல்லா நிறையப் பெற்றவரும், அந்த நிறைவால் பாவம் போகப்பெற்றவரும், அதுபோகப்பெற்றதனால் மெய்யடியாரானவரு நீரே.

சிவபெருமானுரே பூசிக்கத்தக்கவரென்று துணிந்த ஒருவன் இவ்வுலகில் பஸ்மதாரியாய் இலிங்கத்தினுடைய சிரசின்மேல் கங்காதீர்த்தத்தால் அபிஷேகஞ்செய்து குற்றமில்லாததாகியும் நீளமாயுமுள்ளவில்வத்தினுலும் அதுபோலுங் குற்றமற்ற தாமரை அலரிமுதலான மலர்களாலும் அருச்சிப்பாளுயின் அவன் மலமுத்தனுப்ச் சிவசாரூப்யத்தையும், சிவசாயுச்சியத்தையும் அடைகிருன். ஆகலான்-சிவபெருமானுரே பூசிக்கத்தக்கவரென்று துணிந்து கங்கை வில்வ முதலியவற்ருல் பூசித்தவரும் சிவசாரூப்ய சிவசாயுச்யங்களுக் குரிமையானவரு நீரே.

எவனெருவன் சிவலிங்கமூர்த்தியின் முடியில் சந்தனமணிந்து மூன்றுதளத்தோடு கூடிய வில்வங்களால் அர்ச்சிக்கின்ருனே அவன் ஆகண்டலனென்னும் பெயருடைய இந்திராதி தேவர்களால் பூசிக்கப்பெற்றுப் பின்னர் சோடசகலைக்குரியனுயிருக்கின்ற சந்திரனை யணிகின்ருன். எனவே, சிவசொரூபத்தை யடைவான்.

இவ்வத்தியாயத்தினுல் கேட்க விரும்பினுல் சிவகதையையே கேட்கவேண்டுமென்பதையும், அச் சிவகதையைக்கேட்பது தீர்த்த ஸ்நானத்திலுஞ் சிறந்த தென்பதையும், கேட்பதினுல் வரும் பயன்களையும், பயனுணர்ந்த பின்னர் சிவலிங்காராதனஞ் செய்யவேண்டுமென்பதையும், வில்வத்தின் மகிமையும், அகண்ட வில்வம் நீலோற்பலம் முதலானவைகளைக்கொண்டு ஆராதனை செய்தால்வரும் போக மோக்ஷங்களையும் எடுத்துக் காட்டிய தென்க.

முதலாவது அத்தியாயம்-

ஜைகிஷவ்ய ஸ்கந்த சம்வாதம்

முற்றிற்று.

உ

ஸ்ரீசாம்பசிவாயநம:

இரண்டாவது அத்தியாயம்.

சிவசஹஸ்ர நாம கதனம்.

ஆடகேச ருத்திரமூர்த்திக்குக் கடகம்போலிருக்கின்ற ஆதிசேடன் தன்னுடைய ஆயிரநாவினுல் எந்த சகஸ்ரநாமம் சொல்லப்பட்டதோ அதை நானுனக் குபதேசிக்கின்றேன். அது தன்னியமாயும், மதிக்கத்தக்கதாயும், பரமேஸ்வரருக்குப் பிரீதிகரமாயும் உத்தமமாயுமுள்ளது. அதனை நீ கேட்டல்வேண்டும். பரமேஸ்வரருடைய இருதயத்துக்குப் பிரீதியாயுள்ள அதனைப் பிறர்க்குச் சொல்லலாகாதென்கிற நியம மிருந்தபோதி

லும் நீர் அந்தப்பரமேஸ்வரருடைய ஹ்ருதயத்துக்குப் பிரீதியுள்ள பக்தியுடையவராகையால்உமக்கு † "கங்காதராயநம:" என்னும் நாமத்தைமுதலாகவும் "ஹராயநம:" என்னு நாமத்தை இறுதியாகவுமுள்ள அந்த உத்தமமாகிய சகஸ்ரநாமத்துக்குரிய ருஷி சந்தஸு தேவதை தியானம் முதலியவைகளைக் கூறுகின்றேன். இந்த மந்திரம் பரிசுத்தமாயும். புண்ணியகரமாயும், அற்புதமாயும் கேட்டமாத்திரத்தில் சகல பாபங்களையும் நிவிர்த்திபண்ணுவதாயும் புகழைக் கொடுப்பதாயுமுள்ள தாகலான் சம்புவினுடைய சஹஸ்ரநாமமாகிய அதைத்திடசித்தமுடையவராய்க் கேட்பீராக.

தியானம்—சந்திரசேகரராயும், சோம சூர்யாக்னிகளை நேத்திரமாகப் படைத்தவராயும், விஷ்ணுவைப் பாணமாகவுடையவராயும், வேதங்களைக் குதிரையாக வுடையவராயும், பிரமனைச்சாரதியாக வுடையவராயும், பூமியை ரதமாக வுடையவராயு மிருக்கின்ற சிவபெருமானுரைப் பார்வதியாரோடு நானுவிதமாகிய காமகலா விலாசத்தோடுங்கூடிய இந்தப்பிரபஞ்சானந்தத்தை யடையும்பொருட்டுத் தியானிக்கிறேன்.

ஓ முனிவரே! இவ்வண்ணம் தியான முதலியவைகளைச்செய்து சகஸ்ரநாமங்களால் பரமேஸ்வரரை நீர் ஆராதிப்பீராக. இது மிகவும் உம்முடைய அபீஷ்டத்துக்குச் சாதனமாயுள்ளது. கங்காதரருடைய ஆக்ஞாவசத்தால் பரமபதத்தை யடைய விரும்பும் தேவகணங்களாலும் ருஷிகணங்களாலும் சிவகணங்களாலும் தியானித்து வழிபடத்தக்கது.

ஆகையால், மாநுடனுனவன் பஸ்ம ருத்திராக்ஷாலங்கிருதனுய் மகேஸ்வரரைத்தியானித்து நியமவானுய் உத்தமமான இந்தச்சகஸ்ரநாமங்களினுல்பரமேஸ்வரருடையஅநுக்கிரகம்சித்தியாதற் பொருட்டும், எந்தக்காமங்களை மனதிலுத்தேசிக்கின்முனே அவ்வ சித்தியாதற்பொருட்டும், மிருதுவாகிய வில்வ பத்திரங்களாலும், தாமரை மலர்களாலும்,கருநெய்தல்களாலும், லிங்கமூர்த்தியை அருச்சிக்கவேண்டும். எவனொருவன் கிருஷ்ணுஷ்டமியிலாவது, கிருஷ்ண சதுர்த்தசியிலாவது, பருவகாலங்களிலாவது சிவபெருமானுரை விசேடமாகப் பூசித்து இந்தவருச்சனையைச் செய்கின்முனே அவனெண்ணிய காமங்களை யடைவான்.

கன்னிகையானவள் இந்த சகஸ்ரநாமத்தைப் பாராயணஞ் செய்வாளாயின் * க்ஷயத்வீரராகிய பரமேஸ்வரருடைய அனுக்கிரகத்தினுல் தான் விரும்பிய பதியையடைவாள். தனத்தைவிரும்பினவன் தனத்தை யடைவான்,ஜயத்தை விரும்பினவன் ஜயத்தை யடைவான்.

இரண்டாவது அத்தியாயம்.

சிவசகஸ்ரநாமகதனம்-முற்றிற்று.

---

† இந்த சஹஸ்ரநாமத்தையும் ருஷிமுதலியவற்றையும் வடமொழியில் விரிவாய்க்காணலாம்.

* தம்மை எதிர்க்கவரும் வீரருடைய பராக்கிரமத்தை யழிக்கின்றவர்.

ஸ்ரீசாம்பசிவாயநம:

மூன்றாவது அத்தியாயம்.

○ முனிவாக்கியம்.

ஜைகிஷவ்யமுனிவர் சுப்பிரமணியமூர்த்தியைப் பணிந்து, தாரகனைச் சங்கரித்த பெருமானே! ஆதிசேஷனுற் செய்யப்பட்டதும், சகலபாவங்களைப் போக்கடிக்க வல்லதும், சிரேஷ்டமானதுமான சிவசஹஸ்ரநாமத்தைத் தேவரீரால் நன்றாய்க்கேட்கப் பெற்றேன். அந்தச் சந்தோஷத்தினல் தேவரீரிடத்தில் இப்பொழுது சில விண்ணப்பஞ் செய்வதாயிருக்கிறேன். அவைகட்கு விடைதரல்வேண்டும். என்னையெனின், சகல தருமங்களையும் பிரகாசிப்பிக்கச்செய்கின்றகிருதயுகமுதலிய மூன்றுயுகங்களிலுமேமகாதேவரிடத்திற் பக்தியுண்டாகிறது அரிதென்றால் பாபகரமாயும் தரும சூன்யமாயுமிருக்கின்ற கலியுகத்தில் அந்தச் சிவபக்தி எப்படியுண்டாகப் போகிறது. ஏனெனில் கலியுகத்திற் பெரும்பாலும்பிறக்கப்போகின்றவரெல்லாம் சாங்கரசாதியராயும்,* சாரகராயும்,† துர்ப்பீஜத்தவராயும்,இவர்கள்ன்றி வருணாச்சிரம தருமத்தினின்றுந் தவறினவராயும் அறிவிலிகளாயும் இருப்பர். ஓ சிவகுமாரரே! அவர்களுக்கெல்லாம் சாக்ஷாத்காரமாகிய முத்தியைக் கொடுக்கின்ற பக்தியும், அடியார் நடுவுளிருக்கும் அருளும் எப்படி யுண்டாகும். ஏனெனில் அளவிறந்ததவத்தினு லுண்டாகத்தக்க பக்தியானது பாவபுத்தி யுடையவர்களுக்கு எப்படியுண்டாகும்? எந்தப்புருஷன் மகாதேவரால் அநுக்கிரகிக்கப்பட்டவனே அந்தப்புருஷன்றான்பக்தர்களோடு கூடிக் கலந்திருப்பதை யடைவான்.

அந்தச் சிவபக்தியானது தரும (அக்னிஷ்டோமாதியாக)ங்களாலும் தபசு (மந்திரஜபங்) களாலும் உண்டாகத் தக்கதோவென்றால் உண்டாகத்தக்கதன்று. இவைகளை அநுட்டிக்கின்றவர்களைக் காட்டிலுமேலானவர்களாகிய யோகிகளாலும் அடையத்தக்கதோவென்றால் அடையத்தக்கதன்று. அன்றிச் சிறந்த கஜதானங்களாலும், பூதானங்களாலும், ஆயிரம் விருஷபதானங்களாலும், அஸ்வதானங்களாலும், பதினுயிரம் ரததானங்களாலும்,சுவர்ன முதலிய தானங்களாலும்,○ரொக்கதானங்களாலும், வஸ்திரதானங்களாலும்,துலாதானங்களாலும்,பத்துக்கோதானங்களாலும், அறுசுவையோடுகூடிய அன்னதானங்களாலும்தண்ணீர்வார்த்தலாகியதீர்த்த

○ ஜைகிஷவ்ய முனிவர் ஸ்கந்தரைநோக்கிக்கூறுதல்.

* சாரகர்-தன்கணவனிருக்க அவனைவிட்டுத் தனக்கொத்த சாதியராகிய வேறு புருடரிடத்தில் கூடிப்பெற்ற சந்தானத்தார். † துர்ப்பீஜர்-இழிந்தசாதியரைக் கூடிப்பெற்ற சந்தானத்தார். ○ அவ்வக்காலங்களில் ஏற்படும் அரசர்களாலுண்டாகும் நாணயமாகிய பணங்கள்.

தானங்களாலும், கிராம தானங்களாலும் அந்தச் சிவபத்தியானது வரு மோவென்றால் ஒருபொழுதும் வரமாட்டாது.

அன்றித் தடாகப்பிரதிஷ்டை, மண்டபப் பிரதிஷ்டை யாதிகளாலும் சாலையில் நிழல்தரவல்ல விருக்ஷங்களை வைத்தல், நதி முதலியவற்றிற்குப் பாலங்கட்டுதல் முதலியவற்றாலும் அச்சிவபக்தியானது உதிக்குமோவெ ன்றால் உதியாது.

வருணாச்சிரம தருமங்களாலும், ஆசார தருமங்களாலும், ஆபிஜாத்திய (அசாஸ்திரியமான அதிக ஆசாரதரும)த்தாலும், அச் சிவபக்தியானது லபிக்குமோவென்றால் லபிக்காது.

ஆனால் அந்தப்பக்தி எவனாலடையப்படுமெனின், எந்தப்புருஷன் மஹாதேவருடைய பாதாரவிந்தத்தியானத்தாலுண்டாகும் ஆனந்தமொன் றிலே மூழ்கியிருக்கின்றானோ அவனால் அந்தச் சாக்ஷாத்காரமாகியமோக்ஷ த்தைக்கொடுப்பதாயிருக்கின்ற அச்சிவபக்தி யடையப்படும்.

ஒருவனுடைய அறிவானது வேதாங்முதலிய சாஸ்திர வாதங்களி லும், வியாகரண சாஸ்திர விற்பத்திகளிலும், பூர்வ மீமாம்சை உத்தர மீமாம்சைமுதலிய சாஸ்திர பாண்டித்தியங்களிலுஞ்சென்று பண்டிதத் திறத்தையடையுமேயன்றி அந்தப்பக்தியில்மாத்திரம்சென்று அறிந்து நிற் கும்படியான சக்தியைப் பெறுமோவெனின் பெறமாட்டாது.

மஹாதேவர் எந்தப் புருஷனைக் குறித்துப் பாசபந்தத்தினின்றும் விடு தலை செய்யவேண்டுமென்று சங்கற்பிக்கின்றாரோ அந்தப் புருஷனுக்குத் தான் அனுக்கிரகமுண்டாகிறது. அவனுக்கே பரமேஸ்வரரிடத்தில் பக்தி யுண்டாகிறது. தயாமூர்த்தியாகிய பரமேஸ்வரர் - தியானத்திலிருக்கின்ற வனைப் பக்தி என்கின்ற செல்வத்தினுடைய பாரத்தைத் தாங்குமாளாய்ச் செய்கின்றார். நீயே யடைக்கலமென்று அடைக்கலம் புகுவோரை ரக்ஷிக்கி ன்றவராயும் பரப்பிரம சொரூபராயுமிருக்கின்ற சிவபெருமானை எவன் நமஸ்கரிக்கின்றானோ அவன் பந்தங்களினின்றும் விடுபட்டு முக்தனாகிறான்.

அங்ஙனம் † நமஸ்கரிக்கின்றவன் பிராஹ்மணனாயிருந்தாலும் பஞ் சமனாயிருந்தாலும் அவர்களிடத்தில் சிவபெருமானுக்கு இவனுயர்ந்தவன் இவன் றாழ்ந்தவன் என்றெண்ணும் எண்ணமுண்டாகிறதில்லை. ஏனெ னின் சிவமாகிய தன்னைத்தவிர வேறில்லையென் றெண்ணுதலாகியபாவனை யுடையவரிடத்தில் பிரியமுடையவரா யிருத்தலன்றி எல்லாவாத்மாக் களிடத்திலும் சிநேகபாவமுள்ளவராயும், மிகுந்த ஐஸ்வர்யமுடையவ ராயும், சிலர் ஆனவர் சிலர் ஆகாதவரென்கிற வேற்றுமையில்லாதவராயு

† நமஸ்காரமென்பது சிவத்தைவிட்டு ஒருபொருளுமில்லை என்றும், அப்பொருள்களில் தானும் ஒருபொருளென்றுணர்ந்து அச்சிவத்திற்கு ஊடங்கி நிற்றல்.

மிருத்தலாலும், சர்வம்சிவமயம் ஜகத்தென்கிற அருமைச் செம்பொருளா லும் அவ்வெண்ண முண்டாகிறதில்லை. சர்வம் சிவமயமென்பது என்னை யெனின் சுராசுரர்களும் ருஷிகளும் ஏனையோரும் அந்தப் பரமசிவனு ருடைய சுவாதீனத்திலிருக்கின்றவர்களாகவும், பசுக்களாகிய தங்களு டைய பாசத்தை அவரன்றிப் போக்கடித்துக் கொள்ளக்கூடாதவராகவும், இந்தச் சராசராத்மகமாகிய மாயாசொரூபமாயுள்ள வுலகமெல்லாம் அந்த மஹாதேவருடைய அஷ்டமூர்த்தங்களால் வியாபிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தஅஷ்டமூர்த்தங்களுக்குமேல் வேறொருவடிவமில்லாததாகவும், அந்த மஹாதேவராலேயே ஒவ்வொருவரும் சகத்காரியத்தை நடத்துகின்றவர் களாகவுமிருத்தலால் சர்வம் சிவமயம் என்றதென்க. அன்றியும் அந்த மஹா தேவர் சூரியபகவானுடைய அந்தராத்மாவாயிருந்து அந்தச் சூரிய னைப்பிரகாசிக்கச்செய்து நடத்துகின்றதனுலும், அக்கினிதேவனுடைய அந் தராத்மாவாயிருந்து சுவாலையினுல் அந்த அக்னியைப் பிரகாசிக்கச் செய் கின்றதனுலும், சந்திரனுடைய அந்தராத்மாவாயிருந்து காந்தியினுல் கலை யோடு பிரகாசிக்கச் செய்கின்றதனுலும், வாயுவினிடத்தில் அந்தராத்மா யிருந்து அந்தவாயுவை யசைப்பிக்கின்றதனுலும், பிரபஞ்ச சொரூபமாகிய பிரமாவினுடைய அந்தராத்மாவாயிருந்து சிருஷ்டியை நடத்துவிக்கின்ற தனுலும், விஷ்ணுவினுடைய அந்தராத்மாவாயிருந்து யாவரையும் ரக்ஷிக் கின்ற சக்தி யுடையவராகச் செய்கின்றதனுலும், ருத்திரருடைய அந்த ராத்மாவாயிருந்து அந்தத்தில் உலகத்தை யழிக்கச் செய்கின்றதனுலும், இந்திரனுடைய அந்த ராத்மாவாக விருந்து சுவர்கலோகத்தை அனுபவிக் கச் செய்கின்றதனுலும், பூமியினிடத்தில் அந்தராத்மாவாயிருந்து எல்லா வற்றையுந் தரிக்கச் செய்கின்றதனுலும், வருணனிடத்தில் அந்தராத்மா வாயிருந்து அலையோடு கூடியிருக்கச் செய்கின்றதனுலும், தீர்த்தரூபங்களா யுள்ள நதிநதங்களுடைய அந்தராத்மாவாயிருந்து மூழ்குவோருக்கு அவை கட்குரிய புண்ணியபலத்தைக் கொடுக்கின்றதனுலும், சர்வாத்மாக்களுடை ய ஹ்ருதயமாகிய குஹாவாசராய் எங்கும் நிறைந்த புருஷராயிருக்கின்ற தனுலும், இவ்வுலகமெல்லாம் இவ்வாறு அவரால் நிறையப்பட்டுச் செயலு ளதா யிருத்தலாலும் சர்வம் சிவமயமென்றதென்க. இந்த விசாரத்தால் பக்தியானது, அந்தப் பகவானுடைய கிருபையினுல் உண்டாகவேண்டுமே யன்றிப் பிறருடைய இச்சையினுல் உண்டாகத்தக்கதல்லவென் றறியற் பாற்று.

சுதந்தரராயும் ஆசையற்றவராயும் பிநாகபாணியாயும் விளங்காநின்ற மஹேஸ்வரருடைய அநுக்கிரகத்தினுல் பக்தியும்அந்தப்பக்தியினுல் ஞான மும் அந்தஞானத்தினுல் மோக்ஷமு முண்டாகும். இவ்வுண்மையுணராமல் வேதாத்தியயன மொன்றினுல் ஞானமும் மோக்ஷமும் வரமாட்டாது. ஆகலான் அந்த வேதம் பரமேஸ்வரனை ஆத்மகோடிகள் வணங்கவேண்டி யவர்களென்று ஆஜ்ஞையிட்டிருக்கிறது. ஏனெனின் அந்த மஹாதேவரு

டைய சிருட்டியாயிருக்கின்ற தேகத்திலமைந்துள்ள இந்திரியாதிகள் முன் (வெளி) னோக்க முள்ளனவாகவிருத்தலால் அவைகள் உள்நோக்கமாய றியத்தக்க வேதப்பொருளை யறியச்செய்யாது. அதனுணையா யிருக்கின்ற வணக்கத்தைப் பரமேஸ்வரன்பால் செய்யவொட்டாது. இதனை இந்திரியங்களின் வசப்பட்டு அவைகளின் மயக்கத்தால் நானென் றகங்காரங் கொண்டு பரமேஸ்வரரைப் பணிதலை மறந்த ० தேவர்களிற்றலைவனாகிய அக்னிதேவன் முதலியோருடைய சரித்திரங்களால் நன்குணயறியலாம். ஆகையால் சூலபாணியாகிய மகாதேவரைக் காட்டிலும் கடவுள் ஒருவருண்டாகமாட்டார். அவரே எல்லா ஆத்மாக்களிடத்திலும்பற்றில்லாமலிருக்கிற அநாதியாயுள்ள பிரத்யெகாத்மாவாய் அகண்டாகாரமாயிருக்கின்றவர். அந்தப் பகவானால் தன்னை ஆன்மாக்கள் பக்திமார்க்கத்தால் உபாசித்துச் சுலபமா யடையவேண்டிய பக்திலாபத்தின் பொருட்டும், அழிவில்லாமலடையவேண்டிய மோக்ஷலாபத்தின் பொருட்டும் உண்டாக்கப்பட் டுள்ளனவா யுள்ளவை சிலவுள.

என்னை யெனின், அக்னிரிதிமுதலிய மந்திரங்களால் மூன்றுகாலமும் பஸ்மதாரணமும், திரியாயுஷமென்கிற மந்திரத்தினால் திரிபுண்டரதாரணமும், திரியம்பகமந்திரத்தால் ருத்திராக்ஷதாரணமும், பஞ்சாக்ஷர மந்திரத்தினால்ஜபமும்,யஜுஸ்ஸாகையின் அந்தர்க்கதமாயுள்ள ஸ்ரீருத்திரபாராயணமும், மூன்றுகாலமும் சிவலிங்கபூஜையும் சூரியாஸ்தமானகாலத்திலும் பிரதோஷகாலத்திலும், சோமவாரத்திலும், கிருஷ்ணாஷ்டமியிலும், வில்வத்தளிர்களாலும், கிருஷ்ணசதுர்த்தசி அர்த்தராத்திரியில் வில்வத்தளிர்களோடு அபாமார்க்க (நாயுருவி) பத்திரங்களாலும் அருச்சித்தலும், சிவக்ஷேத்திரங்களில் வசித்தலும், அவைகளினுஞ் சிறந்த சீவன் முக்திக்ஷேத்திரங்களில் வசித்தலும், அங்குப் * போகபாக்கியங்களினால் சிவனடியார்களை வழிபடுதலும், உற்சவாதிகளைத் தரிசித்தலும், சிவாலயகயிங்கரியங்களைச் செய்தலும், அம்பாசகிதராயும் நடனமூர்த்தியாயும் திரிநேத்திரதாரியாயும் சந்தரசேகரராயும் நீலகண்டராயும் ஆனந்தமூர்த்தியாயும் நந்திபிருங்கிகளால் சேவிக்கப்பட்டவராயும் கணேசருக்கும் ஸ்கந்தருக்கும் நாயகராயுமுள்ள மகேஸ்வரருடையமங்களத்தியானஞ் செய்தலுமேயாம்.

ஓ ஸ்கந்தரே! கலியிற்பிறக்கப்போகிற மனுஷ்யகோடிகளெல்லா மிகவும் பாபிஷ்டர்களாயும், சாங்கரர்களாயும், துராத்மாக்களாயு மிருப்பாராதலால் அவர்களுக்குள் எப்படிமுன்சொல்லியபக்திமான் இவ்வனுஷ்டானங்களை யுடையனாயிருப்பான். ஓ சங்கரகுமாரரே! இப்போது கலி

---

० அக்னிபகவானை வேதத்திற் சகல தேவர்களுக்கும் முதலானவரென்று கூறுதலாலும், சகலதேவர்களும் அப்பகவான் மூலமாகவேவுணவுகளைப் பெறுதலாலும் அங்ஙனங் கூறியதென்க. *போகம்-வேண்டிய பணிவிடையைச் செய்தல். பாக்கியம்-வேண்டிய பொருளைக்கொடுத்தல்.

யின் சொரூபத்தை யுபதேசியும். உம்மைக் காட்டிலும் ரகசியங்களை யறிந்திருக்கிற குரு எனக்கு வேறொருவரில்லை ஆகையால் நான் கேட்கவெண்ணியிருக்கும்ஐயவினுக்களை உம்மால்போக்கடித்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறேனென்று மகருஷிவேண்ட, சிறந்த மேகதாரையைக்கண்டு களித்துக் கேகா கேகா எனத் தொனிக்கும் சாதகப்புட்போலும் செந்தாமரை போன்ற திருக்கண்வாய்ந்த சிவகுமாரர் மகருஷியின் வாக்யாமிர்தமாகிய அமிர்ததாரையைக்கேட்டு மகிழ்ந்து மிகவும் சந்தோஷகரமாக மகருஷியை நோக்கி யுத்தரஞ்சொல்லத் தொடங்கினர்.

மூன்றவது அத்தியாயம்

முனிவாக்கியம் - முற்றிற்று.

உ

ஸ்ரீசாம்பசிவாயநம:.

நான்காவது அத்தியாயம்.

கைலாசவர்ணனம்.

ஓ ஜைகிஷவ்ய முனிவரே! உம்மால் கேட்கப்பட்ட மனோகரமாகிய இந்தவினுக்கள் சர்வலோகோபகாரமாயிருத்தலால் அவைகட்கு விடைகூறுகின்றேன் கேட்பாயாக. நமது சங்கரருடைய ஆஸ்தானமாகிய ஸ்ரீகைலாயம் ஒரேவகையான ரத்தினங்களாலிழைக்கப்பட்ட மேல்மாளிகைகள் நிறைந்துள்ள விசாலமாகிய பிராகாரங்களால் சூழப்பட்டதாயும், அச்சூழவிடமெங்கும்அநேகவிதமான சிறந்த ரத்தினங்கள் பதித்துள்ளனவாகிய ரத்தின மண்டபங்களை யணியணியாயுடையதாயும்,அவைகளுடைய காந்திகள்திக்குகடோறும்நீங்காது வியாபிப்பதாயும், அம்மண்டபங்களின் மேலிடமெங்கும் வைடூர்ய மாலைகளால் அலங்கரித்திருப்பன வாகலால் அம்மேலிடமெங்கும் வெள்ளியபிரகாசம் மேம்பட்டுப் பரவி வீசுவதாயும், அம்மண்டபத்தின் விசாலமாயுள்ள கீழிடமெங்கும் நீலரத்தினங்களிலிழைக்கப்பட்டுள்ள தாகலால் அவ்விடமெங்கும் நீலவொளி ஆழ்ந்து வீசுவதாயும், கோபுர சிகரங்களிற் பதித்திருக்குஞ் செந்நிறமுடைய ரத்தினங்களுடைய கிரணங்கள் சூரிய கிரணங்களோடு மாறுபட்டெரிப்பதாயும், அவ்விரண்டு கிரணங்களின் மாறுபாட்டை வேண்டாம் வேண்டாமென்று தடுப்பதுபோல் அசைகின்ற கொடிகளையுடையதாயும், அக்கொடிகளசைதலைக்கண்ட அழகுள்ள அன்னப்பக்ஷிகள் அசைத லிவ்வாறுகுமென்று அக்கொடிகளறிய நடித்துக் காட்டல்போல் பூமியதிர நடிக்கின்றனவாயுங் கண்டோர்க்குக் காட்சிகொடுத்து விளங்குஞ் சிறப்பினையுடையது.

இனி அக்கைலாயத்தின் மத்தியிலமைந்துள்ள பிராகார கோபுர மண்டபங்களோடு கூடிய ஆலயாதிகளுடைய சிறப்பு எத்தன்மைத்தென், பதித்திருக்கும் நீர்த்தாரையுள்ள ரத்னங்களுடைய பிரகாசத்தால் விலக்கப்பட்ட இருளையுடையதாகிய கோபுரசிகரங்களால் பிரகாசிக்கின்றதாயும், அந்த ரத்னமயமாகிய கோபுரசிகரங்களின் இடை இடையே நடுநாயகமாய் விளங்குகின்ற மாணிக்கங்களுடைய வுருவங்களால் மனோகரத்தைச் செய்கின்ற அலங்காரத்தை யுடையதாயும் விளங்கும். அக்கைலாய நாயகமாகிய ஆலயத்தினுள் கைலாயநாயகமாய் விளங்கும் உன்னதமாகிய மகாலிங்கமூர்த்தி தேஜோரூபியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பர். அவ்வாலயத்தின் முன்னுள்ள பஞ்சகங்கை-ரத்னங்களிழைக்கப்பட்டுள்ள படிகளாலும் அப்படிக்கரைகடோறும் சிவலிங்ககோடிகளாலும் பிரகாசிக்கும். அவ்வம்பிகாநாதனுடைய ஆலயம் முன்கூறிய சிறப்புடனிருப்பதன்றி அதிகசிறப்புடன் வைத்திருக்கின்ற பூர்ண கும்பங்களுடைய காந்திகளினால் பிரகாசிக்கின்றதாயும், நந்திகேஸ்வரர் முதலிய கணாதிபர்களால் முழக்கப்பட்ட அநேகவாத்திய கோஷங்களோடு கூடியதாயும், கணபதி ஸ்கந்தர் முதலியோர் வீற்றிருக்கின்ற ஆலயங்களைச் சிகரத்திலுடையதாயும், உருத்திரகோடிகள் அவர்களுடைய சக்திகளாகிய ரௌத்திரிகோடிகள் இவர்களுடைய ஆஸ்தானங்களைத் திக்குகடோறு முடையதாயும், தகத்தகாயமா யலங்கரிக்கப்பட்ட அவ்வாலயங்களின் ஓர் புறத்தில் நக்ஷத்திரம்போல் ஒளி வீசுகின்ற மாணிக்கங்களால் பிரகாசிக்கின்ற மேலிடத்தை யுடைத்தாகியும், ஓர் புறத்தில் பர்வதங்கள்போலும் மேலோங்கிப் பிரகாசிக்கின்ற உப்பரிகைகளை யுடைத்தாகியும், ஓர் புறத்தில் இந்திர நீல ரத்னங்களுடைய நீலநிறமாகிய காந்திகளால் கருமையாகக் காணப்படும் மேலிடத்தை யுடைத்தாகியும் பிரகாசிக்கும்.

இவ்வாலயங்களைச் சூழ்ந்து ஆனந்தமயமான அநேக நந்தனவனங்கள் சூழ்ந்துள்ளனவாகியும், அவைகளைச்சூழ்ந்து நறுமணங்கமழும் சந்தனவிருக்ஷம், தமாலம், தேக்குமுதலிய வனங்கள் சூழ்ந்துள்ளனவாகியும், அந்த வன மத்திகளில் உப்பரிகைகளாலும், அவற்றிடையே மரகதம்போலும்பிரகாசிக்கின்ற இலைகள் நெருங்கிய வாழைச்சோலைகளாலும் சூழப்பட்டனவாகியும்,அவற்றிடையே கருநெய்தல்,ஆம்பல்,தாமரை முதலியவைகளால் பிரகாசிக்கின்ற சிரேஷ்டமாகிய தடாகங்களை யுடையனவாகியும், அச்சோலைகளைச்சூழ்ந்து சண்பகம் அசோகு, கடப்பை,வில்வம்,நாகமரமுதலியவைகள் சூழ்ந்துள்ளனவாகியும், இந்த வனமத்தியிலுள்ள வில்வமரத்தடிகளில் ரீங்காரஞ் செய்கின்ற வண்டுகளோடுங் கூடிய பூங்கொத்துகளால் மறைக்கப்பட்டிருக்கின்றசிகரத்தையுடைய ஆலயங்களாலும்,அவைகளில் நிறைந்திருக்கிற உன்னதமாகிய சிவலிங்கங்களாலும் அழகுபெற்றுள்ளனவாகியும், அவ்வாலயங்களைச் சூழ்ந்து பவளத்தினாற்செய்த உன்னதமாகியபவளமாலைகளோடுங் கூடிய உயர்ந்த ஸ்தம்பங்கள் நாட்டியிருக்கின்ற கெம்பீரமாகிய மண்டபங்களையுடைத்தாகியும், அம்மண்டபங்களைச் சூழ்ந்து நானாவிதமா

யிருக்கின்ற பக்ஷிசாதிகளில் ஒவ்வொரு சாதியிலும் எண்ணிறந்த பக்ஷிகள் கூடிக் கூச்சலிடுந்தோறும் கஸ்தூரிமிருகம்,யானை,சரபம், மான்,காட்டெருமைமுதலியஇவைகளாற்சூழப்பட்டனவாகியும், கவரிமான் கலைமான் காட்டுப்பன்றி இவைகளுடைய கூட்டங்கள் நிறைந்திருக்கின்றனவாயும், மயில் கிளிமுதலியவைகளுடைய ஓசைகளாலும், ஆண்குயிலினுடைய ஓசையினாலும் வியாபிக்கப்பட்டதாகியும் சிம்ஹம் கரடி செந்நாய் புலி கோகட்கம் (பசுவின்பேதம்) இவைகள் நிறைந்திருக்கின்றனவாயுமுள்ள மலைகள் எதிரொலியாகக் கூச்சலிடுகின்றனவாயும், இதுவேயுமன்றி கணவக்தரம், மஹாதூரியம் துந்துபிமுதலிய வாத்தியங்களையடிப்பதனாலுண்டாகும்ஓசைகளாலும், மத்தளமுழக்கத்தாலும், சங்கத்துவனியாலும் நிறைந்திருக்கின்ற திக்குகளையுடையதாகியும், வீணை புள்ளாங்குழல் இவைகளுடைய சுவரங்களால் வியாபிக்கப்பட்டதாகியும், கடலாழத்தைக்கணுக்காலளவாகக்கொள்ளத்தக்க ஆழ்ந்த அகழியினால் சூழப்பட்டதாகியும், இவ்வண்ணமான சிறப்புகள் வாய்ந்திருப்பதன்றி, தென்றற்காற்று தன்னால் கொண்டுவரப்பட்ட புஷ்பங்களுடைய மகரந்தங்களோடுங்கூடி, பாற்கடலிலுண்டாகிய அலைகளிலெழும்புகின்ற திவலைகளிற்கலந்து, பச்சிலை விருக்ஷமாகிய வனத்தில் வீசிக் குளிர்ச்சியையடைந்து மனோகரமாகிய குளிர்ச்சியைக்காட்டி, அங்குள்ள சிறந்த கடம்பவனத்தி லுண்டாகின்ற புஷ்பங்களோடுகலந்து அவைகளுடைய மணத்தை வீசி, அதன்பின்னர் சரத்காலத்தி லுண்டாகின்ற சந்திரிகையினால் விகசிக்கின்ற ஆம்பல் மலர்களிலும் ரமணீயமாய் மலர்ந்திருக்கிற செங்கழு நீர் மலர்களிலுமுள்ள வாசனைகளோடுங் கலந்துலாவுகின்ற வனங்களை யுடைத்தாகியும், அவ்வனவிருக்ஷத்தில் கட்டியிருக்கின்ற தேன் கூடுகள் உடைபட் டொழுகாநின்ற தேன்தாரைகளுக்கு இப்பூமியானது தோணியைப்போல் பிரகாசிக்கின்றதாயும், யானையின் மத்தகத்தினின்றும் பெருக்கெடுத்தோடுகின்ற மதசலத்தாற் பூமியில் வீழ்ந்துகிடக்கும் மகரந்தங்களெல்லாம் சேறுபட்டதாகியும், மிருகமதத்தினின்றுந் தோன்றிய வாசனையால் ஆனந்தித்திருக்கிற திக்குகளையுடையதாகியும், மலர்ந்திருக்கிற பெரிய தாமரைகளினின்றுஞ் சிதறியமகரந்தப்பொடிகளால் பூமி ரக்தநிறத்தையுடையதாகியும், தாழை பாதிரி முதலிய மலர்களிலுள்ள மகரந்தங்களிற்படிந்த காற்றுகளுலாவுகின்றதாகியும், உன்னதமான மருதாணிமலர்களின் வாசனைகள்நிறைந்துள்ளதாகியுமுள்ள ஸ்ரீகயிலாய பர்வதத்தில் மகாகோபுரமத்தியிலுள்ள ரத்ன சிம்ஹாசனத்தில் உமாமஹேஸ்வரர் உல்லாசமாய் வீற்றிருப்பர். ஓரிடத்தில் விசாலமான பலகையோடுங்கூடிய மஞ்சத்தில் வீற்றிருப்பர். ஓரிடத்தில் கொய்யாமரங்கணிறைந்திருக்கிற வனத்தில் விநோதமாகவுலாவியிருப்பர். ஓரிடத்தில் உஞ்சலில் வீற்றிருந்து சந்தோஷித்திருப்பர். அற்புதமானஒருப்பரிகையில் வீணையைக்கையில் வைத்திருக்கிற தேவிசமேதராக வீற்றிருப்பர் சூரியனுடைய மிகுந்த கிரணத்தால் தபிக்கப்பட்ட திருமேனியையுடையவராய்ப் பார்வதியாரோடு பனிநீர் தெளிப்பது போலும் நீர்த்திவலையைச் சிந்துகின்ற சந்திரகாந்தமண்டபத்தில் விநோதமாய் வீற்றிருப்பர். இவ்வீ

டங்களன்றிச்சிங்காரவனத்திலும் பரிசுத்தமாயும் பங்கமில்லாததாயும்தோஷமில்லாததாயுமிருக்கின்ற கிருகங்களிலும், மற்றுமுள்ள கிரீடாஸ்தானங்களிலும், குளிர்ச்சியாகிய சந்தனப்பூச்சுடையவராய் விளையாடிக்கொண்டிருப்பர். இவ்விதமான லீலாவிபூதியைச் செய்கின்றபகவான் பூதவாகனரூடராய் நந்தி பிருங்கி முதலிய கணங்களோடு கூடினவராய் மகாகைலாயத்திலிருக்கும் லிங்கமூர்த்தங்களையெல்லாம் பார்ப்பவராக வுலாவுவர். ஓர் சமயம் தேவியுடன் கைலாயத்தில் பிரதான மூர்த்தியாயிருக்கின்ற மகாலிங்கத்தைப் பூசிப்பவராகவிருப்பர். ஓரிடத்தில் சந்தியாகாலத்தில் மிக்க ஆனந்தமுடையவராய் நடனஞ்செய்வர். ஓர்சமயம் விக்னேஸ்வரரையும் சுப்பிரமணியரையும் அடிக்கடிபார்ப்பர்.

இவ்வண்ணங் கைலாசத்தில் விளையாடிக்கொண்டிருக்கிற அந்த உமாமகேஸ்வரர்களுடைய விசித்திரமான லீலையை வாக்கினால் எவன் சொல்லவல்லவன். ஓர் சமயம் பாற்கடலின் மத்தியி லிருக்கின்ற ஆஸ்தானமண்டபத்தில் இருவரும் வீற்றிருந்து சிலலீலைகளைப் புரிந்ததும், பின்னர் மகாதேவி ஆனந்த மூர்த்தியாயிருக்கின்ற மஹாதேவரைப் பார்த்து வினவியதுமாகிய அற்புதத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஓர் கால் திருப்பாற்கடல் நடுவில் வசந்தகாலம் சுக்லபக்ஷம் அந்திப்போதில் மலர்ந்திருக்கிறமல்லிகைக்கொடிகளுடைய சமூகங்களால் அலங்காரம்பெற்றிருக்கின்ற கிருகத்தில் பரப்பியிருக்கும் அம்ஸதூளிகாமஞ்சத்தில் வெண்ணிறத்தோடுங் கறுநிறத்தோடு மிருக்கின்ற பாடலி குருக்கத்தி மந்தாரை முதலிய மலர்களிலுள்ளமகரந்தங்களிற் படிந்து குளிர்ந்தமந்தமாருதம்வீச எண்ணிறந்த புஷ்பசமூகங்களால் மெத்தெனப் பகவதியாரோடு எழுந்தருளியிருக்கின்றபகவனார்அந்தக்கிருகத்தில் படர்ந்திருக்கின்றமல்லிகைமலர்களினின்றும்பெருகாநின்றதேன்றுளிகளால்நனைந்தவராயும்,அம்மல்லிகைமலர்களிலுள்ளவண்டுகளுடைய சுககரமாகிய ரீங்காரத்துவனியினால் அளவிறந்த சந்தோஷத்தையடைந்தவராயு மிருந்தனர். தேவியாரும் குயில்களுடைய மதுரமான ஒலிகளைக்கேட்டு அக்கோகிலங்களோடு விளையாடவேண்டுமென்கிற இச்சையுடையவராயும், பரிமளத்தினாற் சேர்ந்திருக்கின்ற வண்டுக்கூட்டங்களால் நிறைந்துள்ள மல்லிகைக்கொடிகளின்மீது தங்கியிருக்கும் பக்ஷிகள் பரக்கின்றகாலத்துண்டாகும் காற்றினால் உதிருகின்ற மதுரமாகிய மன்மத பாண மென்னும் மல்லி மலரை யணிந்தவராயும், நெற்றியில்ரமணீயமாகிய கஸ்தூரி திலகத்தினாலழகுபெற்ற நெற்றியையுடையவராயும், களங்கமென்பது சிறிதுமில்லாத பேரழகோடுங் கூடிய முகத்தையுடையவராயும், வாசனைகளுடைய விசேஷத்தினால் நிறையப்பெற்ற சிந்தூரரேகைகளைத்தரிக்கப் பெற்றவராயும், ரமணீயமாய் வகிர்ந்தெடுத்தகூந்தலையுடையவராயு மிருந்தனர். அத்தேவியாரைத் திரிபுரசங்காரியாகிய பரமேஸ்வரர் தன்னிச்சைவழியா யிமைக்கின்ற நேத்திரங்களால் இமைகொட்டாமல்சந்தோஷத்தோடும்லீலாவினோதமாய்ப்பார்த்துத் தமதுதிருக்கரத்தாற் றடவினர். தேவியாரும்மூன்றுலோகங்களுக்குங் கர்த்

தராயும், தன்னெண்ணத்தால் யாவும்ரக்ஷிக்கின்றவராயும்,விடத்தாற்பிரகா சிக்கின்ற கண்டத்தையுடையவராயும், சர்ப்பாபரணாலங்கிருதராயுமிருக்கி ன்ற பெருமானாராயும், காலத்துக்குட்பட்ட சகல உலககாரியங்களையு டையவராகியும், அதன் பொருட்டுச் செய்யும் சிருட்டி முதலிய தொழில் களில் ஆதரணையுடையவராயும், அவைகளிற் செல்லுகின்ற சங்கற்பமு டையவராயுமிருக்கின்ற பரமேஸ்வரரைப்பார்த்து அமிர்தமயமாயிருக்கி ன்ற தமது திருக்கரத்தாற்றடவி விண்ணப்பஞ் செய்யத் தொடங்கினார்.

ஹே பர்க்கா! சர்வசகத்தையும் சிருஷ்டிக்கின்றவராயும், பாபங்களை யெல்லாம் நிவிர்த்திசெய்கின்றவராயும், சம்சாரபந்தத்தை நிவிர்த்தி செய் கின்றவராயும், விளங்கும் திரிநேத்திரதாரியாகிய பரமேஸ்வரரே! என் னிடத்தில் தேவரீரது கருணையிருக்குமேயானால் கலியிற் பிறக்கின்றவர்க ளுடைய ஆச்சரியமான கிருத்தியத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமெ ன்றனர். பரமேஸ்வரர் தேவியார் வார்த்தையைக்கேட்டுச் சந்தோஷித்தவ ராய் மலர்ந்த முகாரவிந்தத்தையுடையவராய்த்தனது சங்கல்பமாத்திரத்தி லுண்டாகிய சகத்தினுடைய வியாபாரத்தைச் சொல்லத் தொடங்கினார். பர்வதங்களிலும் மண்டபங்களிலும் மஞ்சங்களிலும் தமதிச்சைப்படி ரமித்திருக்கிற தேவிமுகத்தைப்பார்த்து ஹேதேவி! உன்கருணையாகிய பாரத்தைப் பரிக்கின்றவர்களுக்கு ஆனந்த முண்டாம்வண்ணம் வினாவி னாய். நீ மூன்று புவனங்களுக்கும் தாயாகவும் மலையரையன் மகளாகவும் என் மனத்துக்கு ஆனந்தத்தைவிளைவிக்கின்றவளாகவும் மகாலாவண்ணிய விசேஷ விசிஷ்டமுடையவளாகவுமிருக்கின்ற உனக்குச் சமானமானவரில் லை.ஆகையால் உன்னைத்தவிர வேறொருவரை மகாபுண்ணியகரமாகிய இதைக்கேட்பதற்கு நானெண்ணவுமில்லை. ஆகையால் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

நான்காவது அத்தியாயம்.

கைலாசவர்ணனம் - முற்றிற்று.

உ

ஸ்ரீசாம்பசிவாயநம:.

ஐந்தாவது அத்தியாயம்.

கிருதயுகதனம்.

தாமரைமலர் போலும் அழகுவாய்ந்த நேத்திரமுடைய ஓபார்வதி! நீ அறியாததொன்றுமில்லை. பரப்பிரமசொரூபிணியாய்விளங்கும் சத்திஎது வோ அந்தப்பராசத்தியும் நீயே, காலசக்கிரத்தை நடத்துகின்றவளும் நீயே, மகாசித்தியும் நீயே, சுவாஹாஎன்கிற சத்தியும் நீயே, சுவதாஎன்கிற சத்தியும் நீயே, பிரமனிடத்தில் கலைமகளாய்ச் சிருட்டிக்குஞ் சத்தியாய்

யிருக்கின்றவளும் நீயே, விஷ்ணுவினிடத்தில் கமலாசனியாகிய லக்ஷ்மியாயிருந்து எல்லாவுலகங்களையும் ரக்ஷிக்குஞ் சத்தியாயிருக்கின்றவளும் நீயே, உருத்திரமூர்த்தியினிடத்தில் பராசத்தியாயிருந்து சங்காரஞ்செய்கின்றசத்தியும் நீயேயென்று புராணிகர்களாலேசொல்லப்படுகின்றாய். இவ்வாறு சிருட்டிசத்தியாயும், ரக்ஷகசத்தியாயும், சங்காரசத்தியாயு மிருந்துசிருட்டிக்கப்பட்டும் ரக்ஷிக்கப்பட்டும் சங்கரிக்கப்பட்டும் வருகின்ற பதார்த்தம் எதுவோ அந்தவுலகமாகிய அது என்னிடத்தி லடைகின்றதென் றறிவாய்.

இன்னமும் நீ சூரியனிடத்தில் தகனசத்தியாயும், வாயுவினிடத்தி சலனசத்தியாயும், சோமனிடத்தில் காந்திசத்தியாயும், இந்திரனிடத்தில் பிரபுத்வசத்தியாயும், எமதர்மராஜனிடத்தில் தண்டிக்கிறசத்தியாயும், குபேரனிடத்தில் நவவிதமாயிருக்கின்ற தனசத்தியாயும், நைருதியினிடத்தில் அசுரசத்தியாயும், வருணனிடத்தில் பாசசத்தியாயும், பூமியினிடத்தில் தரிக்கிற சத்தியாயும், நதியினிடத்தில் நிர்மலசத்தியாயும், மாத்ருமண்டலத்தில் சர்வசத்தியாயு மிருக்கின்றனை. உன்னால் அமூர்த்திமானாகிய நானும் மூர்த்திமானென்றும் சத்திமானென்றும் இப்புவனத்தில் கீர்டித்துக்கொண்டிருக்கிறேன். ஓ மஹாதேவி! சத்தியாகிய நீயன்றி எதுவுமில்லை; உலகமெல்லா முன் சொரூபமே. ஆயினும் இப்பொழுது எடுத்துச்சொல்லத்தக்க உன்சொரூப மொன்றுண்டு. அது என்னையெனின், காலரூபமாகும், அதனைச் சொல்லுகின்றேன் சாவதானமாய்க்கேட்பாயாக.

நானிதுவரையில் அற்புதமாகிய சில ரகசியங்களைத் தெரிவிக்கவில்லை இப்போது தெரிவிக்கின்றேன். நான் தருமசொரூபமாயுள்ளேன். அத்தருமத்தை வகித்திருப்பது விருஷபமாகவும், அதனுடைய நான்கு பாதங்களும் கிருத திரேத துவாபர கலியுகங்களாகவும், குளம்புகளோடு கூடிய பாதசந்திகள் யுகசந்திகளாகவும், அறியற்பாலது. ஓ தேவி! அந்த யுகங்களாகிய காலங்களைக் கால்களாற் காட்டும் காலசக்ரப் பிரவர்த்தகமுடைய தரும விருஷபமானது என்னுடைய ஆக்ஞாவசத்தால் அந்தந்த யுகங்களில் தன்காலை நிற்றல் எடுத்தல் படுத்தலாகச்செய்யும் வேறுபாட்டினால் தருமமிவ்வளவில் நடக்கிறதென்றுகாட்டும். என்னாணையன்றி நிற்றல் முதலியவற்றைக் காட்டாது.

அந்த விருஷபத்திற்கு முன்கூறிய யுகங்களாகிய நான்குபாதங்களில் கிருதயுகமும் திரேதாயுகமும் முன்னிரண்டு பாதங்களாகவும், துவாபர கலியுகங்களைப் பின்னிரண்டு பாதங்களாகவும் அறிந்துகொள்வாய். கைலாயத்தில் என்னெதிரில் நிற்கும் அந்த விருஷபம் யுகதருமங்களைக் காட்டுமுறைமை எங்ஙனமெனின் * கிருதயுகத்தில் ஸ்ரீ கயிலாயத்தில் நான்கு

---

* கிருதயுகத்தில் நான்கு கால்களோடு நிற்கும். திரேதாயுகத்தில் ஒருகாலைமடக்கி மூன்றுகாலோடு நிற்கும். துவாபரயுகத்தில் இரண்டுகாலை மடக்கி இரண்டுகாலோடு நிற்கும், கலியுகத்தில் மூன்றுகாலைமடக்கி ஒரு

பாதத்தோடு நிற்கும். அக்காரணத்தால் அந்தணர்கள் விருத்தியாய் ஒழுக்கங்களிற் றவராதிருப்பர். அதனால் அந்தக்கிருதயுகம் பிராம்ஹம் என்று பெயர்பெறும். வருணாச்சிரம தருமங்களில் நிற்பவருக்கும் யாகாதிகளைச் செய்கின்றவர்களுக்கும் பூர்ணபல னுண்டாகும்.

ஹே அம்பிகே! தேவர்கள் மாநுடர்களாகிய அந்தணர்கள் தவசிகள் மற்றுமுள்ள நல்லோர்கள் ஆகிய இவர்களுக்கு உலகத்தில் தரும தான முதலியவற்றை எவ்வண்ணஞ்செய்யவிதித்திருக்கின்றதோ அவ்வண்ணமே அவர்கள் செய்வார்கள். யாகங்களைச்செய்வதிலும்,வேதாத்தியயனங்களைச் செய்வதிலும் அததற்குரியார் முயற்சியாயிருப்பர். குரோதம் மாச்சரிய முதலியவற்றை விடுவதில் வைராக்கிய முடையவராயிருப்பர், அக்னிரிதி என்கிற மந்திர முதலியவற்றால் பஸ்மத்தா லுத்தூளனமும் புண்ணியமாகிய திரிபுண்டரதாரணமும், செய்துகொள்வதிலும், ருத்திராக்ஷங்களைத் தரிப்பதிலும், சிவலிங்கார்ச்சனை செய்வதிலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் ஸ்ரீ ருத்திர முதலிய சிவமந்திரங்களைச் செபிப்பதிலுங் கூசுதலில்லாமல் ஆசையுடையவர்களாயிருப்பர். அன்றியும் தவசிகளாகிய மஹாருஷிகள் கோபத்தினால் சபிக்குந்தொழிலைவிட்டிருப்பர். அந்த யுகத்திலிருக்கும் மஹாருஷிகள் யாரென்றால் - மரீசி - ஆங்கீரசர் - அத்திரி - வசிட்டர்-காசிபர் - பரத்துவாசர் - சம்வர்த்தகர் - பிரகஸ்பதி - என்று சொல்லப்பட்டவர்களாகும்.

தருமமே நிலையுள்ளது, புண்ணியமே தேடத்தக்கது, கீர்த்தியே அடையத்தக்கதென் றறியவல்ல சூரியவம்சத்தில் வரப்போகிற க்ஷத்திரியர்கள் யாவரெனின்,—அரிச்சந்திரன்-மருத்தன்-மாந்தாதா-சகரன்-அநாரண்ணியன் மிருகன் பப்ரு-அயுதாயு-சிபி என்றுசொல்லப்பட்டவர்களாகும். இவர்கள்தான் அந்த யுகத்தில் பூமியில் பரிபாலனஞ் செய்துகொண்டிருப்பர். அப்பொழுது இப்பூமியானது விசேஷபயிர்களைக்கொடுப்பதாயும்,பரஜ்ஜன்னியுஎன்கிற மேகாதி தேவதையினால் காலங்களில் மழை பொழிவதாயும்,

---

காலோடு நிற்கும். இந்த விருஷபம் நிற்குமளவாகவே தருமமும் நான்கு மூன்று இரண்டு ஒன்றாக நடக்குமெனவும். அந்தத்தருமம் நடக்குமளவாகவே அந்தணரிடத்தில் வருணாச்சிரம தருமமுதலிய ஒழுக்கங்களும் அந்தந்த யுகங்களில் நான்கு மூன்று இரண்டொன்றென்னுமளவாக நிற்குமெனவும் அவ்வந்தணரிடத்தில் குறைபட்டு வருதலாகிய ஒழுக்கமுதலியவைகளெலலாம் ஏனைய க்ஷத்திரியர், முதலாயினாரிடத்து அந்தந்த யுகங்களில் எற்றமாக நிற்குமெனவும், அவை எற்றமாக விருப்பதால் கிருதயுகத்தில் அந்தணர்கள் மேன்மையாளராகவும் அப்படியே ஏனைய மூன்று யுகங்களில் முறையே க்ஷத்திரியர்முதலிய மூவரும் மேன்மையாளராக இருப்பரெனவும், யுகங்களும் பிராம்ஹம் க்ஷாத்ரம் வைசியம் சூத்திரமெனப் பெயர்பெறுமெனவுங் கொள்க. இவற்றை அந்தந்த யுகதருமம் கூறுமிடத்துக் காணலாம்,

எப்போதும் நதிகள் பெருக்கெடுத்து வருவனவாயுமிருக்கும். அரிச்சந்திரன்முதலிய அரசர்களும் ஏனைய அரசர்களும், அஸ்வமேதத்தில் மிகவும் அன்புள்ளவர்களாகவும், விசேஷதானங்களை யுடையவர்களாகவும், பலிஷ்டர்களாகவும், அக்ரோணி சேனைகளுக்கு நாயகர்களாகவும், சிவபக்தியுடையவர்களாகவும், விபூதி ருத்திராக்ஷங்களைத் தரிக்கின்றவர்களாகவும், எப்பொழுதும் சிவலிங்கார்ச்சனை செய்கின்றவர்களாகவு மிருப்பர். அந்த க்ஷத்திரியர்களில் ஒருவனாகிய அனரண்ணியனென்கிற அரசன் பரிபாலனஞ் செய்துவரும்போது பூமியிற் காடில்லாமலும் சோரபயமில்லாமலுமிருக்கும். இவனையன்றி ஏனைய அரசர்களும் யக்ஞத்தில்பிரியமுள்ளவர்களாகவும் யாவரிடத்தும் பிரியமானவார்த்தை சொல்லுகின்றவர்களாகவும் கொடுக்கின்ற தாதாக்களாகவும், சர்வஜனங்களையும் ஆதரிக்கின்றவர்களாகவும், சத்துருக்களைச் செயிக்கின்றவர்களாகவும் இருப்பர். வைசியர்கள் கோரக்ஷணை ரசவாணிச்சியம் முதலிய வியாபாரத் தொழிலுடையவர்களாகவும் சூத்திரர்கள் மூன்றுவருணத்தவர்களுக்கும் ஏவல் செய்கின்றவர்களாகவு மிருப்பர். நான்கு வருணஸ்திரீகளும் விபசாரமில்லாமல் சத்தியமுடையவர்களாகவே இருப்பரன்றிப் பொய்சொல்லிவாழார்கள். எல்லோரும் தருமத்திலன்புடையவராகவும், வேதோக்தமாகிய தருமத்தால் மிகவும் பிரகாசிக்கின்றவராகவும், மந்திர சித்திகளால் பிரகாசிக்கின்றவராகவும், எல்லாவருணாசிரமிகளும் அவரவர்கருமானுஷ்டானங்களிலேயே யிருப்பவராகவுமிருப்பர். இவ்வாறு கிருதயுகத்தில் புண்ணிய சமூகங்கள் மேன்மேலுண்டாகும். அவைகளைச் செய்வோர்க்கு அவைகட்குரிய பிரயோசனங்களும் அப்போதைக்கப்போது பிரத்யக்ஷமாகும். அவர்களுக்கு வேதத்தில் விதித்தவிதிபோல் ஆயுளும் வளரும். யாவரும் என்னுடைய பூஜையைச் செய்கின்றவர்களாகவே யிருப்பாராதலால் அவர்களுக்கு விதித்திருக்கும் ஆயுளுக்குமேல் அகண்டஆயுளுமுண்டாகும். யாவரும் செல்வவான்களாகவேயிருப்பாரன்றி ஒருவரேனும் வறுமையாளரா யிருக்கமாட்டார். தவசிகள் அதிகமாயிருப்பர்; அவமாகிய பாவத்தையுடையவர் அணுகமாட்டார். இது நிச்சயம். ஹே தேவீ! இதுவரையில் உனக்குக் கிருதயுகதருமத்தை ஒருவாறு சொல்லிவந்தேனென்று சிவபெருமானார் திருவாய் மலர்ந்தனர்.

ஐந்தாவது அத்தியாயம்

கிருதயுகதருமகதனம் - முற்றிற்று.

ஸ்ரீசாம்பசிவாயநம:.

ஆறவது அத்தியாயம்.

திரேதாயுகதருமகதனம்.

ஹே தேவி! கிருதயுகத்தில் நான்கு பாதங்களோடுநின்ற என்னுடைய தருமவிருஷபம் திரேதாயுகத்தில் அக்கைலாசத்தில் ஒருபாதத்தை மடக்கிக்கொண்டு மூன்றுபாதத்தோடு நிற்கும். அதனல் அந்த யுகத்திற் பிறக்கும் பிரம க்ஷத்திரிய வைசியசூத்திரர் ஸ்திரீகள் சங்கரசாதிகள் முதலிய யாவரிடத்தும் சமமாகக்கலந்திருக்குஞ் சத்வகுணம் ரஜோகுணத்தோடுகலந்திருக்கும். அதனல் பிராமணர்கள் யக்ஞம் செய்வதாகிய சத்வகுணவிருத்தியோடிருப்பதொழிந்து தானம்வாங்குதல், க்ருஷி (பயிர்வேலை) கோரக்ஷசேவை, இவைகளையும் உடையவர்களா யிருப்பார்கள். எக்ஞமானது பலாபேக்ஷயுக்தமான ஆசையுடன் விருத்தியடைந்திருக்கும். பப்ரு ஜமதக்னி, வசிட்டர் பராசரர், காத்தியாயனர், பரசுராமர் விஸ்வாமித்திரர் முதலிய மஹருஷிகளெல்லாம் வேதானுஷ்டானத்தில் ஆசக்தியுடையவர்களாய் நன்னடக்கையிற்றவராதவராகி யிருப்பார்கள். க்ஷத்திரியர்களும் ஏனையவருணத்தவரும் தருமசிந்தையுடையவர்களாயும், வருணாச்சிரமங்களுக்குரிய அநுஷ்டானத்தைக் கைவிடாதவர்களாயு மிருப்பார்கள். தவமியற்றுவாராயின் அதற்குரியபலனை அது கொடுக்கும். அதுபோலவே யக்ஞஞ் செய்வோருக்கு அதற்குரியபலமாகிய சுவர்க்கத்தைக் கொடுக்கும். விபூதி யுத்தூளனத்திலும் திரிபுண்டரதாரணத்திலும் ருத்திராக்ஷதாரணத்திலும் ருத்ரசூக்தஜபத்திலும் ஆசையுள்ளவர்களாய் எல்லாவந்தணரும் அணிந்து ஜெபித்துவருவார்கள். க்ஷத்திரியரும் என்னுடைய மந்திர ஜபத்திலும் சிவார்ச்சனையிலும் சித்திபெற்றவராயிருப்பர். அவருட் சிலரைக்கூறுகின்றேன். காமாரியாகிய என்னுடைய சிரேஷ்டமாகிய சஹஸ்ர நாமத்தை ஸ்ரீராமர் ஜபித்து அசுரர்களை ஜயித்துப் பின்னர் சேதுவில் என்சொரூபமாகிய லிங்கமூர்த்தியை யராதித்துப் பாபத்தினின்றும் விடுபட்டு என்னை யுத்தேசித்து அசுவமேதமுஞ்செய்வான். இப்படியே யாவரும் சிவலிங்கபூசையிலும் பஞ்சாக்ஷர ஜபத்திலும் ஆசையுள்ளவர்களா யிருப்பார்கள்.

யயாதி-நகுஷன்-ரந்திதேவன்-த்ருணபிந்து-பகீரதன்-திலீபன்-முதலியோரெல்லாம் பஸ்ம ருத்திராக்ஷ தாரிகளாகவும், சிவபூஜா ஸ்ரேஷ்டராகவு மிருப்பதோடு உலகத்திலும் நன்றாய்க் கொடுக்கின்றவர்களாகவும், யாவரையும் தங்களுயிர்போல் பாலிக்கின்றவர்களாகவும், பூமண்டலத்திற்கு அலங்காரபுருஷராகவும், எக்ஞஞ் செய்கின்றவர்களாகவு மிருப்பர் சந்திரவம்சத்தில் ஜனிக்கும் ராஜாக்கள் சிவக்ஷேத்திரத்தில் பிரியமுள்ள

வர்களாகவும், பக்திமான்களாகவும், அடியார்களுக்கு வேண்டிய தக்ஷிணை களைக்கொடுக்கின்றவர்களாகவு மிருப்பர். இப்பூமண்டலம் அவர்கள் பரிபாலனத்தி லிருக்கும்போது ஔஷதிகள் மிகுந்த பலன்களைக்கொடுக்கும். பர்ஜின்னியதேவதையும் அந்தந்தக்காலங்களில் வருஷங்களை வருஷிக்கச்செய்யும். அதனால்பாவரும் தருமமார்க்கத்தினாலேயே ஜீவிப்பார்கள். வைசியர்கள் வியாபாரத்தில் சமர்த்தர்களாகவும், புண்ணியமார்க்கத்தி லாசையுள்ளவர்களாகவும், பாவத்தொழிலில் பிரவேசிக்காதவர்களாகவும், சத்கர்மாநுஷ்டானர்களாகவும் மதிக்கத்தக்கவர்களாகவுமிருப்பார்கள். எல்லாச் சூத்திரர்களும் இம்மூன்று வருணத்தவரிடத்திலும் எப்போதும் ஏவல் செய்கின்றவர்களாக விருப்பர்.

எல்லா ஸ்திரீகளும் மதிக்கத்தக்க பதிவிரதா தருமத்தை யுடையவர்களாகவும், பரிசுத்தமான போஜன முடையவர்களாகவு மிருப்பாராதலால் கிருகஸ்தாச்சிரமிகளெல்லாம் பரமேஸ்வரருடைய பாதாரவிந்த சேவையில் சம்பூர்ணமான நோக்கமுள்ளவர்களாகவும், தருமவிருத்தியுடையவர்களாகவும், நிர்மலமான மனமுடையவர்களாகவுமிருப்பர். சந்நியாச ஆச்சிரமிகள் சிவசம்பந்தமானதவமுடையவர்களாகவும், பஸ்மருத்திராக்ஷதாரிகளாகவும், சிவாராதனத்தில் ஆசையுள்ளவர்களாகவும், மரணதுக்கத்துக் கபிமுகமாகவுள்ளவர்களாகவும், தயைகூர்ந்தமனமுடையவர்களாகவுமிருப்பார்கள். அவர்களுக்கு ஆயுளும் தவமும் தருமமும் விருத்தியடைந்திருக்கும். ஏனைய ஆச்சிரமிகளெல்லாம் தத்தமக்குரியதருமஜீவனத்தையுடையவர்களாகவும், சிவமேகடவுளென்கிற எண்ணமுடையவர்களாகவும், சிவபூசையில் அன்புள்ளவர்களாகவுமிருப்பர். இவ்வுலகத்தவர் கொடுக்கும் அவிர்ப்பாகங்களைப் புசிக்கின்ற தேவர்களும் எப்போதும் சிவபூஜையுடையவர்களாகவும், பரமேஸ்வரருடையபாதாரவிந்தத்தைத் தியானம்பண்ணுகின்றவர்களாகவும், எக்ஞத்தினால் ஜீவிக்கின்றவர் களாகவுமிருப்பர். அசுரர்களும் சிவாராதனையில் அன்புள்ளவர்களாகவும் என்னால் வேண்டிய வரங்களைப் பெற்றவர்களாகவும், யுத்தத்தில் பிரியமுள்ளவர்களாகவுமிருப்பர். அவர்களுக்கு நாம் ஏன் அனுக்கிரகஞ்செய்வதென்றால் தேவர்களுக்கு யுகதருமமில்லையாகலான் அவர்கள் எந்த யுகத்திலாவது அகங்காரத்தை யடைவாராயின் அவர்களை அப்பொழுதப்பொழுது அந்த அசுரராலடக்கிவருவதற்கேயாம். கிருதயுகத்தில் சுரர்களுடைய கர்வத்தை யடக்கும் பொருட்டு இரணியகசிபும் இரணியாக்ஷனும் எம்மால் உண்டாக்கப்பட்டார்கள். அப்படியே திரேதாயுகத்தில் ராவணனும் பலியும் பிரகலாதனும் நமுச்சியும் ஜம்பனுமாகிய அசுரர்கள் தேவர்களுடைய அகங்காரத்தை யடக்கும் பொருட்டுச் சிருட்டிக்கப்பட்டார்கள். அவர்கள் என்னுடைய ஆராதனையில் அன்புள்ளவர்களாய் ரஜோகுணதமோகுணங்களில் ஆதிக்யமுடையவர்களாய் தேவர்களினுமிகுந்த வீரதேசசை யுடையவர்களாய் என்னுடைய பூஜாபலத்தினால் தேவர்களையடக்கியாளுகின்றவர்களாயிருப்பார்கள். அவ்வாறு அசுரர்கள் தேவர்க ளகங்காரத்தையட

க்கித் தாங்களகங்காரமடைந்திருக்கிறபொழுது அவ்வசுரர்களுடைய அக ங்காரத்தையடக்கும்பொருட்டும் தருமத்தை நிலைநிறுத்தற் பொருட்டும் விஷ்ணுவுக்கு என்பாதாரவிந்தத்தில் பக்தியைக்கொடுத்து என்னை ஆரா திக்கும்படிச்செய்து அசுரசங்காரநிமித்தம் சக்கரப்படையுமளித்து அசுரர் களையழித்து தேவர்களைரக்ஷிக்கும்படிச் செய்துவருவோம். ஹே அம் பிகே! அந்தத் திரேதாயுகத்தில் க்ஷத்திரியர் விருத்தியடைவரர்கள். திரே தாயுகம் பிராஹ்மமெனப்பெயர்பெற்றதுபோல் திரேதாயுகமானது க்ஷாத் திரமெனப்பெயர்பெறும். முன்கூறியவாறு காருகபத்தியமுதலிய மூன்ற க்கினிகளிடத்திலும் அன்புள்ளவர்களாகவும் யாகசீலர்களாகவு மிருந்த போதிலும் சாத்வீககுணமானது ரஜோகுணத்தோடு கலந்திருக்கும் தரும த்தால் ரஜோகுணசம்பந்தமான வியாபாரத்தில் ஆசக்திபுடையவர்களாக வும் அவை சித்தியாதற்பொருட்டு வேதானுஷ்டானத்தில் அன்புள்ளவர் களாகவும், வேதமந்திரங்களைச் செபிக்கின்றவர்களாகவும், அதனால் வருத் தமில்லாதவர்களாகவு மிருப்பர். இவ்வாறு திரேதாயுகத்தில் எந்தநாடும் எந்தநகரமும் சோகமில்லாமலிருக்கும்.

ஆறவது அத்தியாயம்.

திரேதாயுக தருமகதனம்-முற்றிற்று.

உ

சிவாப்யாந்நம:.

ஏழாவது அத்தியாயம்.

துவாபரயுகதருமகதனம்.

ஹே பார்வதி! இதுவரையில் திரேதாயுக தருமங்களை எடுத்துக்கூறி னோம். இனித் துவாபரயுகதருமங்களைக் கேட்பாயாக. துவாபரயுகத்தில் முன் சொல்லிய தரும விருஷபமானது தனது முன்னங்கால்களிரண்டை யுந் தூக்கிக்கொண்டும் பின்னங்காலிரண்டையும் ஊன்றிக்கொண்டுமிருக் கும். உலகில் சத்வகுணமடங்கியும் ரஜோகுணமேலிட்டுமிருக்கும். அத னல் எல்லாப்பிராணிகளுக்கும் ரஜோகுணம் மேலிட்டிருக்கும். அந்தணர் கள் அங்ஙனமிருந்தபோதிலும் பஸ்மருத்திராக்ஷதாரணத்தையும், சிவார் ச்சனையையும்விட்டிருக்கமாட்டார்கள். ருத்திராத்யாயத்தின் அர்த்தத்தை நன்குயறிந்தவர்களாய் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தி லாசையுள்ளவர்களாய்ச் சாத் வீகவிருத்தியோடிருப்பர். கர்க்கர், பராசரர், ததுமியர், ததீசி, கண்ணுவர், கவு தமர், தூர்வாசர், தத்தாத்திரேயர் என்று கூறப்பட்ட முனிவர்களனைவரும் பஸ்மருத்திராக்ஷதாரிகளாகவும், பரமேஸ்வரனை ஆராதிக்கின்றவர்களாக வும், சிவலிங்கார்ச்சனை செய்கின்றவர்களாகவு மிருப்பரேயன்றி வேறுபுண் டரங்களையாவதுவேறுகடவுளர்களுடைய அருச்சனையாவதுசெய்யார். இரு

கஸ்தம் வானப்பிரஸ்தம்சந்நியாசம் முதலிய ஆச்சிரமங்களிலிருப்பவர்கள் தத்தமக்குரிய வொழுக்க முடையவர்களாகவும் புண்ய சீலராகவு மிருந்த போதிலும் ரஜோகுண முடையவர்களாகவே யிருப்பார்கள். க்ஷத்திரியர்க ளாகிய சங்கன்லிகிதன் கயன், உத வ ன் ருரு, சதாயு, புருஜிகபரதன் முத லியோரெல்லாம் தரும நீதியிற் றவராதவர்களாயும், யக்ஞ சீலராயும், தா னத்தில் மிகவுஞ் சிறந்தவர்களாயும், சுகமாய் வாழ்ந்திருப்பர். ரஜோகுண மேலிட்டிருக்குமென்று சொல்லியிருக்கின்றபடியால் அரசர்கள் எல்லா நகரங்களிலும் ஆசையுடையவர்களாய் அவைகளை யாளவேண்டுமென்கிற முயற்சி யுடையவர்களாயு மிருப்பார்கள்.

யாதவராகிய வாசுதேவன் பலராமன் முதலாயினோரும், திரிதரா ஷ்டன் குமாரர்களாகிய துரியோதனன் முதலாயினோரும், பாண்டவர்க ளும் சுராசுரர்களுடைய அம்சங்களாய்ப் பிறந்து ரஜோதமோகுணவிருத் தியுடையவர்களாய் யுத்தத்தில் ஆசக்தியடைந்து ஒருவருக்கொருவர்ஹிம் சைவிளைவித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு நானும் தமோகுணவிருத்தி மேலிடும்படியாகவே செய்வேன். வைசியர்கள் பலவிதமானகிருஷியுடைய வர்களாக யிருப்பார்கள். சூத்திரசாதிகள் முன்யுகத்திலிருந்ததுபோலவே இந்த மூன்று வருணத்தவரிடத்தும் செய்யத்தகும் பணிவிடையில் ஆச க்தியுள்ளவர்களாக விருப்பார்கள். வைசியர்களும் சூத்திரர்களும் தத் தமக்குரிய விருத்திகளிலிருப்பவரா யிருப்பினும் அவர்களும் ஸ்திரீசாதி களும் சாங்கரசாதிகளுமாகியயாவரும் சாம்பவர்களாகவும் தபஸ்விகளாக வும் வருணாச்சிரமங்களுக்குரிய தருமங்களில் அன்புள்ளவர்களாகவுமிரு ப்பர்.

அந்தத்தமோகுண விசிட்டத்தினால் சந்திரவம்சத்தவர்களாகியவியாச ருடைய பேரப்பிள்ளைகளென்று சொல்லப்பட்ட பாண்டவர்களும், கௌர வர்களும், பாய்ச்சிகையுருட்டும் சூதாட்டத்திற்றலைப்பட்டுப் பாண்டவர்கள் தோல்வியடைந்து அரசாக்ஷியைவிட்டுவனவாசிகளாய்க் கந்தமூலபலாதிக ளருந்தி சீவித்திருந்து பின்னர் சிவபூஜாவிசேஷத்தால் அந்தப்பாண்டவர் கள் மகாவீரர்களாகிய துரியோதனாதியரோடு யுத்தஞ்செய்து அவர்களைக் கொன்று ராஜ்யபட்டாபிஷிக்தர்களாய் ராஜரீகத்தை நடத்தி யாக சீலர்க ளாகவும், யாவரிடத்தும் பிரியவார்த்தையுடையவர்களாகவும், அஸ்வமேத த்துக் கதிதேவதையாகிய பரமேஸ்வரனாகிய எம்மை யக்ஞத்தினால் ஆரா திப்பவர்களாகவும் இருப்பர்.

ஹே அம்பிகே ! யாதவனாகியகிருஷ்ணன் உபமன்யுமுனிவருடைய அனுக்கிரகத்தினால் என்னைச் சிவலிங்கத்தில் ஆராதித்து விசேஷசித்தியை யடைந்து பலிச்சக்கரவர்த்தியினுடைய குமாரனாயும் ஆயிரந்தோள்களையு டையவனாகியுமுள்ள பாணாசுரனையும், முரன், கம்சன் என்று சொல்லப் பட்டவர்களையும், அசுரஸ்ரேஷ்டனாகிய நரகாசுரனையுஞ்செயித்துத் துவார கையிலும் மதுரையிலும் வசித்திருப்பன். துரோணகுமாரனாகிய அஸ்வத்

தாமன் என்னுடைய பூஜாவிசேஷத்தால் என்னால்கொடுக்கப்பட்ட சத்தியைக்கொண்டு யுத்தத்தில் சத்துருக்களைச் செயித்தும் அநேகசித்தியையடைந்துதேவலோகத்திலும் இந்த லோகத்திலுஞ்சஞ்சரிப்பவனாயிருப்பான். ஜனமேஜயன் அஸ்வமேதத்தினால்என்னை ஆராதித்துத்தக்ஷகனுடைய விஷத்தினால் தன்தந்தை மரணமடைந்தானென்பதையறிந்து சர்ப்பயாகஞ்செய்து தக்ஷனைக்கொல்ல அழைக்குஞ் சமயத்தில் அஸ்திகருஷியினுடைய சகாயத்தினால் அவனைவிடுத்துப்பின்னர் அரசாண்டிருப்பவனாவான். இவர்கள்செய்தி யிங்ஙனமிருக்க,எல்லாஸ்திரீகளும் பதிவிரதைகளாயும் பர்த்தாவினுடைய ஏவற் பணிவிடைகளில் ஆசையுள்ளவர்களாகவும் இருப்பர் யாவரும் சிவபூசையைச்செய்வர்.

அதனால் காலங்களில் மழைபெய்யும் பூமியில் விளையவேண்டியவையெல்லாம் குறைவின்றிவிளையும். மானுடர்கள் ஒரு சமயம் யுத்தத்தில் ஆசையுள்ளவர்களாகவும், ஒருசமயம் கலகத்தை விட்டு ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத சிநேகமுடையவர்களாகவும், ஒருசமயம் யோகத்தோடுகூடினவர்களாகவும், யாகங்களால் தேவதைகளை யாராதிப்பவர்களாகவுமிருப்பர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குலங்களில்சிரேஷ்டர்களாகவிருந்து அவ்ரவருக்குரிய மனோரததருமத்தில் அபிவிர்த்தியடைந்து தருமத்தில் சிறந்தவர்களாகவும், புண்ணியபாவங்களை எண்ணிச் சேவிக்கின்றவர்களாகவுமிருப்பர். மகருஷிகளெல்லாம் வனங்களில் அளவிறந்த தவத்தினால் இந்திரியாதிகளைச்சோஷிக்கச்செய்வார்கள். அந்தணர்கள் பயிர்த்தொழிலிலும், வர்த்தகத்தொழிலிலும் பொய்சொல்லுவதிலும், பிரவர்த்தியாதவர்களாயும்,நியமத்திற் றவராதவர்களாயுமிருப்பர். அகண்டதரிசிகளாகியதேவர்கள் யாவருக்கும் அநுகூலர்களாகவேயிருப்பார்கள். யாகசீலர்கள் யக்ஞங்களில் தங்கள் சக்தியை யநுசரித்தவர்களாகவேயிருப்பார்கள் சிலர்விஷயங்களில் காமவாசனையுள்ளவர்களாகவேயிருப்பர். சிலர் இல்லாதவர்களாகவேயிருப்பர். இவ்வண்ணம் இரண்டுவிதமாக ஏன் சொன்னேமென்றால் தருமவிருஷப மானது துவாபரத்தில் இரண்டு பாதத்தோடுநிற்கிறதென்று முன்னே சொல்லியிருக்கின்றேமாகையால் காலசக்ர ப்ரவிர்த்தியும் அதற்குத்தக்கபடியேதான் நடக்குமென்றறிவாய். அன்றியும் யுகசந்திகளில் அநேகவருஷங்கள் இரட்டிப்பாயிருக்கும், அதனால் அக்காலங்களிலுண்டாகுங் குணமும் பூர்வயுகசம்பந்தமாகவே யிருக்கும்.

கிருதயுகம் * பத்துலக்ஷம் வருஷமும், திரேதாயுகம் ஐந்துலக்ஷம் வருஷமும், துவாபரயுகமும் மூன்றுலக்ஷவருஷமும், கலியுகம் இரண்டு லக்ஷ வருஷமுமுடையன. துவாபரயுகம் வைசியயுகமென்றுசொல்லப்படும். அந்தயுகத்தில் வைசியர்கள் விருத்தியடைவார்கள். இவ்வண்ணம் யுகங்களுடைய மாறுதலாகிய அநேகங்களால் கல்பமென்று சொல்லப்படும். அந்தக் கல்பங்கள் அநேகங்கூடியது பிரமனுக்கு ஒருபகல். இவ்வெண்ணின்படி அப்பிரமனுடைய ஆயுள் முடிவு விஷ்ணுவிற் கோர்பகல். இந்த எண்ணின்

படி அளவர்கும் விஷ்ணுவினுடைய ஆயுள்முடிவு ருத்திரனுக்கு ஓர் பகலெ ன்று தெரிந்துகொள்வாய். நான்மாத்திரம் உன்னுடைய சொரூபமாகிய காலங்கடந்தவனு யிருக்கிறேன். அநேகயுகங்களுடைய அளவும், பிரமா விஷ்ணு ருத்திரர் இந்திரன் தேவர்கள் சப்த ரிஷிகள் மநுக்கள் இவர்களு டைய முடிவும் என்னுடைய(நிமிஷோன்மேஷம்)இமைகொட்டுங்காலத்தி னுட்பட்டதாகும். எனவே, இந்தச்சகத்து சங்காரப்பட்டு மீளவும் உற்பத் தியாதலாகிய காலவளவு பரமசிவனுர் கண்மூடிக் கண்திறத்தலாகிய அள வினை யுடைத்தென்பதாம்.

ஏழாவது அத்தியாயம்.

துவாபரயுகதருமகதனம் - முற்றிற்று.

உ

சிவாப்யாந்நம:

எட்டாவது அத்தியாயம்.

கலியுகதருமகதனம்.

ஹே தேவீ! தோஷகரமாகிய கலியின் சொரூபத்தைச்சொல்லுகிறேன் கேட்பாயாக. ஸ்ரீ கைலாயத்தில் தருமவிருஷபமானது கலியில் ஒருபாத த்தினிற்கும். அக்கலியில் இவ்வுலகில்முஞ்சன், போஜன் முதலிய பதினுறு சோழர்களும், பஸ்மருத்திராக்ஷ தாரிகளாய் மகா பராக்கிரமசாலிகளாய் சிவபக்த சிரேஷ்டர்களாய் சோழநாடெங்கும் சிவாலயப்பிரதிஷ்டைசெய் பவர்களா யிருப்பர். காவேரிநதியினுற் சிறப்படைந்தோங்கும் அச்சோழ நாட்டி லுள்ளாரெல்லாந் தமிழ்ப்பாஷையில் வல்லவர்களாயிருப்பர். பாண் டிநாடாகிய மதுரையில் ஐந்நூறு பாண்டியர்கள்பிறப்பார்கள். அவர்களுள் மலையத்துவஜபாண்டியனுக்கு நீ மகளாய்ப்போவாய். அம்மதுரையில் மகா லிங்கமூர்த்தியாய் சுந்தரேசரென்னும் நாமத்தோடு நாமும், மீனுக்ஷியென் னும் நாமத்தோடு நீயுமிருந்து யாவருக்கும் அநுக்கிரகஞ்செய்து வருவோ ம். சோழபாண்டியர்களேயல்லாமல் சேரராஜாக்களுமுண்டாவார்கள். சே ர சோழ பாண்டிய நாடென்று அவர்கள் பெயரானே அவர்நாடுகள் வழங் கும். அந்நாட்டி லுள்ளவர்களெல்லாம் சிவபக்தர்களாகவே யிருப்பார்கள். இவர்களில் பாண்டியர்கள் கலிபிறந்து சிலகாலஞ்சென்றபின்னர் ஆயிரவ ருஷம் யாவரையும் சைவநெறியிற் பிறழவொட்டாமலும் தாங்களும் பிற ழாமலும் அரசாக்ஷிபுரிந்து வருவார்கள். பின்னர் ஆயிரவருஷம் பாண்டிய ர்களும் சோழர்களும் அரசாக்ஷிபுரியுங்கால் பலிஷ்டராகிய விக்ரமன்,சாலி வாகன னென்பவர்களால் அபஜயப்பட்டுச்சைவநெறியினும் வருணுச்சிரம நெறியினுந் தவறுதலுடையராயுஞ் சூத்திரசங்கரமங்களுடையராயுங் கா லங்கழித்துவருவார்கள். பின்னர் தெலுங்கர்களுள் ஆறுபேரும் அரசாக்ஷி

செனுத்தவுண்டாவார்கள். அதன்பின்னர் ஆரியாவர்த்தத்திலும், காசியிலும், குருக்ஷேத்திரத்திலும் அவிவேகிகளாகிய துலுக்கர்கள் விசேஷமா யுண்டாவார்கள். ஐந்நூறு வருடத்துக்குமேல் பிராமணர்கள் தரித்திரர்களாகவும், அல்பபுத்தி யுடையவர்களாகவும், அரசர்கள் சூத்திரர்களைக் கலந்தவர்களாகவும், திருடர்களுக்குச் சமான மானவர்களாகவும், அதர்மிஷ்டர்களாகவு மாவார்கள். ஏனையோரெல்லாம் துலுக்காசாரத்தை யுடையவர்களாவார்கள்.

இனிச் சிவபக்தர்களுடைய அவதாரங்களைச்சொல்லுகிறேன். அசைவநெறியை உடையாரைத் தண்டித்துச் சிவமே பரம்பொருளென்றுணர்த்தும் சைவநெறி முன்போலெங்குந் தழைத்தோங்க அரதத்தனென்னும் ஓர் சாம்பவனும், சாந்தோக்ய வம்சோத்பவனும், என்னுடைய அம்சபூதனும், பிராஹ்மணசிரேஷ்டனும், ஆசாரநிஷ்டனும், சோமயாஜியும், என்னுடைய சிறந்தபத்தனுமான அப்பையதீக்ஷிதனென்னும் ஓர்சாம்பவனும் அவதரித்துச் சேரசோழபாண்டிய நாடுகளில் மறைந்துபோயிருக்கும் சிவபாரம்யமான சைவசாஸ்திரங்களைப்பிரகாசப்படுத்துவர். பின்வரும் பக்தகோடிகளும் அந்தச் சைவசாஸ்திரங்களைக் கொண்டு சிவப்பிரகாசராய் அந்தச் சாஸ்திரங்களை விர்த்திசெய்துவருவார்கள்.

இங்ஙனங் கூறிவந்த இவர்களுக்கெல்லாந் தலைமையாயுள்ள அறுபத்துமூவரென்னும் எண்படைத்து என்னுடைய பத்திமார்க்கத்தை வெளிப்படுத்தும் பக்தர்கள் பலசாதிகளிலும் அவதரித்துப் "பக்தி" என்பது இவ்வளவினையுடைய தென்பது யாவருமறிய அதற்குப் பிரமாணமாயிருப்பார்கள். அவர்களில் ஸ்ரீஞானசம்பந்தனென்றும், வாகீசனென்றும், சுந்தரமூர்த்தியென்றும், பெயருள்ள மூவரும் எனக்கு முக்கியமானவர்கள். அவர்களுடைய சரித்திரங்களைப் பின்னால் கூறுகின்றேன்.

அகஸ்திய னென்கிற முனியும், அம்முனி புங்கவனைப்போன்ற சைவருஷிகளும் தபோபலத்தினால் சிவபக்தர்களாய் மகிமையோடு விளங்குவார்கள். ஹே தேவி! அப்பெரியோர்கள் காவேரிதீர்த்தத்திலுள்ள லிங்கமூர்த்திகளுடைய அற்புதமாகிய மகிமையை அகஸ்தியபகவானா லுண்டாக்கப்பட்ட திராவிடபாஷையினால் தோத்திரஞ்செய்வார்கள். அந்தத்திராவிடஸ்தோத்திரம் எனக்கு மிகவும் பிரீதிகரமாயிருக்கும். இவர்கள் செய்தியிங்ஙனமிருக்க, இப்பூமண்டலத்தில் சோரவம்சத்திற் சனிக்கும் பாபிஷ்டர்களாகிய அரசர்கள் பிராமணத்துரோகிகளாயும், சிவாலயங்களைக் கெடுக்கின்றவர்களாயும், பஸ்மருத்ராக்ஷதாரணம் சிவலிங்கார்ச்சன முதலியனவை களில்லாதவர்களாயும், தமோகுண நிஷ்டர்களாயும், என்னைத்தெரிந்துகொள்ளும் சிவஞான மில்லாதவர்களாயும், சிஷ்டாசார மிருக்கின்றவர்போற்காட்டி துஷ்டாசாரத்திலே நிஷ்டர்களாயும், சிவநிந்தை செய்வதிலும், சிவலிங்கார்ச்சனை செய்யாமலிருப்பதிலுஞ் சந்துஷ்டர்களாயு முள்ள சிலதுஷ்டர்க ளுண்டாவார்கள். இந்தத் துஷ்டர்களேயன்றிச் சக்கிராங்கிதஞ்செய்து கொள்ளுகின்றவர்களாயும், நெற்றியில் ஊர்த்துவ புண்டர

முள்ளவர்களாயுஞ் சிலரிருப்பார்கள். சிலர் தர்மிஷ்டர்களாயிருந்தும் நெறியில்லாதவர்களாயும், நெறியில்லாதிருந்தும் சிவபூஜை நடத்துகின்றவர்களாயும், நெற்றியில் விபூதிதரித்தவர்களாயும், வேதாந்த விசாரமுடையவர்களாயும், சத்திபூஜை குருபூஜை முதலியவைகளில் ஆசக்தி யுள்ளவர்களாயுமிருப்பார்கள். அவ்வாறிருந்தபோதிலும் வீடுகடோறும் போஜனஞ்செய்ய வேண்டுமென்னும் பிரியமுள்ளவர்களாகப் பித்துப்பிடித்தவர்போ லுலாவித்திரியுஞ்சிலபிராமணர்களும்சிஷ்டசாரத்திற்பிரியமுள்ளவர்களைக்கெடுக்கின்றதுற்புத்தியும்,அற்பமாகிய மிலேச்சாசாரத்திற்பிரியமும்,சத்தியமார்க்கத்தில்அப்பிரமாணியமும்,அசத்தியமார்க்கத்தில் பாஷண்டத்வமுமுடைய அநேகவரசர்க ளுண்டாவார்கள். இவர்களேயன்றி ரக்தவர்ணமான முகமுடையவர்களாயும், நீலவர்ணமான பலவாபரணங்களைத் தரித்தவர்களாயும், வாத்தியமென்றெண்ணத்தக்க கண்டத்தொனி யுடையவர்களாயும் கற்களைக் கையிலேந்தியிருப்பவர்களாயும், தேவர்களையுஞ் செயிக்கத்தக்க சரீரபலமுடையவர்களாயுமுள்ள ஊணசாதிய ருண்டாவார்கள். ஏனையரெல்லாம் பிரஷ்டர்களாகவும், ஒழுக்கமுடையோரை நிந்திக்கின்றவர்களாகவும், பெரியோரைவணங்காதவர்களாகவும், தரித்திரத்தில் மூழ்கினவர்களாகவும், தெய்வ சம்மந்தமான தவந் தியானம் ஒழுக்கமுதலியவற்றாலுண்டாகும் முகவிலாசமாகிய தேஜசில்லாதவர்களாகவும், அசத்தியமுள்ளவர்களாகவும், பாபபுத்தியுடையவர்களாய் நித்யகர்மாநுஷ்டானத்திற் பிரியமற்றதூர்த்தநடையுடையவர்களாகவும், பரமேஸ்வரருடைய பாதகமலப்பொகுட்டை நெருங்கி அதிலுள்ளமதுவையுண்ணும் அறிவில்லாமல் தூரத்திலிருந்து வட்டமிட்டுலவிச் செல்கின்ற வண்டுகளைப்போல் எதற்குங் குய்யுக்திகளையேசொல்லிக்கொண்டு சுகானுபவத்தை யிழந்துபோகத்தக்க புத்தியுடையவர்களாகவு மிருப்பர்.

அன்றியும், உடம்பைச் சுடுகின்ற முத்திரை யுடையவர்களாகவும், த்தில் முதலையைப்போலும் விசித்திரமான சின்னங்களைப் படைத்தவர்களாகவு மிருக்கத்தக்க மாநுடர்களே மேன்மேலுமுண்டாவார்கள். இப்படிப்பட்டவர்களால் இவ்வுலகங்கெடும். இவர்களை இந்திரனுங் கண்டஞ்சுவான். இந்த மகாபாபிகள் - கலியின் கொடுமையைப்பார்த்து வியாகூலமடைந்தவனும் முகவிலாசமொழிந்து உக்கிரத்தோ டிருக்கின்ற யமதருமனுடைய கோரப்பல்லடியி லகப்பட்டு அவனுக் காகாரமாயிருப்பவரேயன்றிக் காலகாலராய்ச்,சூலபாணியராய்,சந்திரசேகரராய் விளங்கும் பரமேஸ்வரராகிய சங்கரருடையதிருவடிக்கு ஆளாக யிருப்பவரல்லர். அரன்றிருவடிக்காளாகாத அரட்டர்களெல்லாம் அதிகரித்திருப்பாராதலால் பூமியும் வீரமில்லாமலிருக்கும். அதனால் பூமியிற்பிறக்கிற மாநுடாதி சரீரங்களெல்லாம் பெருத்திருந்தாலும் சிறுத்திருந்தாலும் வீரியமில்லாதனவாகவே யிருக்குமன்றி வீரியத்தோ டிராவென்க.

எட்டாவது அத்தியாயம்.

கலியுக தருமகதனம் - முற்றிற்று.

ஸ்ரீசாம்பசிவாயநம:.

ஒன்பதாவது அத்தியாயம்.

இதுவுமது.

ஓதேவி! நான் மறுபடியும் கலியுகத்திலுண்டாகுங் குணதருமங்களை உனக்குச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

நாநாவிதமாகிய துராசாரத்தில் ஆசையுள்ளவர்களாயும், புசிக்கத் தகாதனவாகிய வுணவுகளைப் புசிக்கின்றவர்களாயும், கள்ளிலும் சாராயத்திலும் ஆசையுள்ளவர்களாயும், பாபத்தொழிலில் பிரியமுள்ளவர்களாயும், விபூதி தூளனம் திரிபுண்டரதாரணம் ருத்திராக்ஷபூஷணம் இவைகளையணியாத சரீரமுடையவர்களாயும், சிவலிங்கார்ச்சனையில் பிரியமில்லாதவர்களாயும், விஷ்ணுபூஜையில் பிரியமுள்ளவர்களாயும், சிவபூஜை செய்தாலும் சிவலிங்கத்தைச் சாளக்கிராமத்தோடு சமமாகவைத்துப் பூசிப்பவர்களாயும், நெற்றியிலும் மற்ற அவயவங்களிலும் மண்ணினால் ஊர்த்துவபுண்டரத்தைத் தரிப்பவர்களாயும், சக்கிராங்கிதம் பண்ணிக்கொண்டவர்களாயும், சிவவிரதங்களை விட்டவர்களாயும், சிவோத்கரஷங்களைக் கேட்கவுஞ் சகியாதவர்களாயும், விஷ்ணுபாஷண்டர்களாயும், என்னுடையஆலயத்தில் வராதவர்களாயும், என்னுடைய நிந்தையில் ஆசையுள்ளவர்களாயும், வருணாச்சிரமதருமங்களை இழந்தவர்களாயும், மலத்திலிருக்கின்றபுழுப்போல் வியாகுலமுடையவர்களாயும், பவுஷ்யோத்தரநூலிற் கூறியுள்ளபடி வேதாத்தியயனமில்லாதவர்களாயும், ‡ திரேதாக்னியில்லாதவர்களாயும், கஷ்டத்தில் புத்தியுள்ளவர்களாயும், சத்கரும முடையவர்களைப் போற்காட்டித்துஷ்டதருமங்களையுடையவர்களாயும்துரதிருஷ்டி(அறியக்கூடாத அஞ்ஞானதிருஷ்டி)யினால் சிவபூஜை யில்லாதவர்களாயும், கடவுளாகவுள்ள ஒருவனைக் கடவுளாகக் கொள்ளாது பலரைக்கடவுளாகக் கொள்ளலாகிய விபசாரஞ்செய்கின்றவர்களாயும், சோரர்களாயும், குரூரர்களாயும், சான்றோர்கள் பழிக்கத்தக்க ஜீவனத்தால் வயறுவளர்க்கின்றவர்களாயும், தருமானுஷ்டானங்களை வேஷமாத்திரமா யுடையவர்களாயும், பாவஞ்செய்வதில் மோக முள்ளவர்களாயும், பஞ்சாக்ஷரத்தைச் செபித்தலையும், ஸ்ரீ ருத்திர அத்தியாயத்தை யோதுவதையும் விட்டவர்களாயும், என்னுடைய க்ஷேத்திரத்தில் வசிப்பதற்குப் பிரியமில்லாதவர்களாயும், அன்னியக்ஷேத்திரத்தில் வசிப்பவர்களாயும், சோமவாரம் மத்தியானத்தில் இஷ்டம்போல் போஜனஞ்செய்வதிலும், ஆடைமுதலியவற்றால் அலங்காரஞ்செய்து கொள்வதிலும் ஆசையுள்ளவர்களாயும், பிரதோஷகாலத்தில் பூஜைசெய்யாதவர்களாயும், எப்போதும் சாயங்காலத்தில்

‡ தக்ஷிணாக்னி, காருகபத்தியம், ஆகவநீயம்.

சிவபூஜை நடத்தாதவர்களாயும், கிருஷ்ணஷ்டமியில் சந்திரசேகரருடைய பூஜையிலும், சிவத்தியானத்திலும் பிரியமில்லாதவர்களாயும், பூசிப்பதற்கு வரித்துக்கொள்ளும் பிராணிகளில் சிவபாவனையில்லாதவர்களாயும், என்னுடைய க்ஷேத்திரத்தை அன்னியக்ஷேத்திரத்தோடு சமமாகநினைப்பவர்களாயும், இதுபோலவே என்னுடைய நாமத்தோடு வேறுகடவுளருடைய நாமங்களைச் சமமாகச்சொல்லுகின்றவர்களாயும், கோஹத்தி பிரமஹத்தி முதலிய ஹத்திகளைச்செய்கின்ற துஷ்டர்களாயும், அந்நியத் திரவியங்களையபகரிக்கின்றவர்களாயும்,சிவத்திரவியமுதலியவற்றைஅபகரித்தல்முதலிய துரோகம்பண்ணுகிறவர்களாயும், நல்வழியிலிருப்போரைத் தூஷிப்பதில் பிரியமுள்ளவர்களாயும், பாவத்தொழிலால் ஜீவனஞ்செய்கின்றவர்களாயும், பிராமணர்கள் திரவியத்தில் பேராசையுள்ளவர்களாய் அன்னியருடைய அன்னத்தையே புசிப்பவர்களாயும், பசுவின்பால் விற்றுச் சீவிப்பவர்களாயும், அரிசிவிற்றுச் சீவிப்பவர்களாயும், ராஜாக்களைத் துரோகம் பண்ணுகிறவர்களாயும், மாம்சபக்ஷணையில் ஆவல்கொண்டு திரிகிறவர்களாயும், இதர ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவர்களாயும்,தமது ஸ்திரீகளிடத்தில்பிரியமில்லாதவர்களாயும், அல்பபோஜனஞ் செய்கின்றவர்களாயுமிருப்பார்கள்.

அரசர்கள் குடிகளைச் சுகமாய் ரக்ஷிக்காதவர்களாயும், அவர்களுடையதிரவியத்தை அபகரிக்கின்றவர்களாயும்,யுத்தத்தில்வீரதருமமில்லாதவர்களாயும், தன்பொருட்டு அன்னிய வுயிர்களைக் கொல்லுகின்றவர்களாயும், நல்லவிருக்ஷங்களை வெட்டுகின்றவர்களாயும், தடாகங்களை மூடுகின்றவர்களாயும், நதி கிணறு முதலியவற்றை யழிக்கின்றவர்களாயும், சிவாலயத்தையிடிக்கின்றவர்களாயும், இவ்வாறான அநேகபாவங்களை யுடையவர்களாயும், பேராசையுடையவர்களாயும், அதிகயாசகத்தை யுடையவர்களாயும், தரித்திரர்களாயும், வியாதியினல் பீடிக்கப்பட்டவர்களாயும் மூர்க்கர்களாயும், சகோதரர்களாயுள்ளவர்களில் சிலர் சந்தானமுள்ளவர்களாயும், சிலர் சந்தானமில்லாதவர்களாயு மிருப்பார்கள்.

வைசியர்கள் நிறைகோலாயுள்ள துலாக்கோலைச் சமன்செய்து காட்டுவதுபோற் காட்டிவஞ்சித்துத் தாசிகளைப்போற் சீவிப்பவர்களாயும், சூத்திரர்கள் மிகுந்தசெல்வத்துடன் விருத்தியடைகின்றவர்களாயும், தருமவாதம் பண்ணுகின்றவர்களாயும்,அந்தச்சூத்திரர்களுக்குப் பிராமணர்திரவிய ஆசையினல் நாணமில்லாமல் பணிவிடை செய்கிறவர்களாயும், அவர்களாற் சொல்லப்பட்ட தருமங்களைக் கேட்பதில் ஆசையுள்ளவர்களாயும், அநேக பிராஹ்மண சந்நியாசிகள் மந்தபுத்தியுள்ளவர்களாயும், காஷாயத்தினல் அலங்கரிக்கப்பட்ட சரீரத்தையுடையவர்களாயும், வர்ணச்சிரமங்களை விட்டவர்களாயும், பிராஹ்மண்ணிய மில்லாதவர்களாயும், எப்போதும் நாணத்தைவிட்டவர்களாயும், விவகாரத்தில் விதண்டாவாதஞ் செய்கின்றவர்களாயும், பாஷண்டர்களாயும், சங்கீதத்தி லாசையுள்ளவர்களாயும், வேசியைப்போல் பரிகசிக்கத்தக்கவர்களாயும், குலஹீனர்களாயும்,

குதர்க்கவாதத்தில் சமர்த்தர்களாயும், கன்னிகைகளினாலே ஜீவனஞ் செய்கின்றவர்களாயும், மந்திரவாதிகளாகிய அநேகர் ரசவாதத்தொழிலில் சமர்த்தர்களாயும், வைத்தியசாஸ்திரங்களில் பண்டிதர்களாயும், சிகிச்சை செய்து அளவில்லாமல் பணங்களைப் பிடுங்குகின்றவர்களாயும், அநேகர் சோதிட சாஸ்திரத்தில் வல்லவர்களாயும், சூதாடுகிறவர்களாயும், விதவைகளும் பாலியஸ்திரீகளும் சம்சாரத்தில் விபசாரிகளாயும், தீர்த்தயாத்திரைக்குப் போதல்போலும், க்ஷேத்திரமாயுள்ள பர்வதங்களுக்குப் போதல் போலும், போக்குகள்காட்டி அவ்விடங்களுக்குப்போய் அங்குத்தாங்கள் விரும்பிய யௌவனபுருஷருடன்கூடி ஒருவருக்கொருவர் கலந்து இஷ்டத்தோடிருப்பவர்களாயும், அன்னவிக்ரயஞ் செய்கிறவர்களாயும்,கேசத்தினால் ஜீவிப்பவர்களாயும் இருப்பர்.

துலுக்கர்கள் வேலம்பாசி தாமரை இவைகள் படர்ந்து பார்ப்பதற்குச் சுகமாயிருக்கின்ற புண்ணிய தீர்த்தங்களைக்கெடுத்து, அப்புண்ணியதீர்த்தக்கரையிலிருக்கின்ற க்ஷேத்திரங்களையு மிடித்துச் சிவலிங்கத்தையுமொழித்துத் தங்களிஷ்டப்படிச்செய்வார்கள். பிராமணர்கள் தரித்திரர்களாய் வறுமைக்குணமேலிட்டவர்களா யிருப்பார்கள். இன்னுமும் தங்களைப் புத்திமான்களாய் எண்ணிக் கொண்டிருக்கின்றவர் சரீரபோஷணஞ் செய்வதும் ஸ்திரீசங்கமஞ்செய்வதுமாகிய இரண்டுமே சுகத்தைக்கொடுப்பதென்றுநினைத்துக்குலதருமத்தையும் சாஸ்திரவிசாரங்களையுங் கைவிட்டு மானஹீனர்களாய் திரவிய கர்வத்தினாற்றிரிவார்கள். சாஸ்திரார்த்தந் தெரிந்தவன் கலிதோஷமுள்ளவர்களாயிருக்கின்றவர்களைப்பார்த்து அந்தத்தோஷங்களைச்சொல்லாமல் அவர்களுக்கு யுக்தமான சுகவிஷயங்களையே பிரசங்கிப்பானாயின் அவன்தான் தருமந்தெரிந்த பண்டிதனென்று சொல்வார்கள். சிலர் அல்பமாகிய போகத்திலேயே ஆசையுள்ளவர்களாய் நூல்களிலெடுத்துக் கூறாத தோல்சம்பந்தமான ஆடைகளைத்தரிக்கின்றவர்களாயும் ஒவ்வொருகாரியத்திலும் பாவசம்பந்தமான காரியங்களையே செய்கின்றவர்களாயும், அங்கஹீனர்களாயும், குறைந்த ஆயுளை யுடையவர்களாயும், புண்ணியதினங்களையும், க்ஷேத்திரங்களையும், எண்ணாமல் கூர்மையாகிய ஆயுதங்களினால் மிருகசாதிகளைக்கொன்று மாமிசங்களைப் புசிக்கின்றவர்களாயும், சிலர் எல்லாத்தொழிலிலும் சமர்த்தர்களாயும், இவ்வுலகத்திற்கு வேண்டிய க்ஷேமகரமாகிய மந்திரத்தில் ஆசையுள்ளவர்களாயும், அளவிடக்கூடாத சமுத்திரத்தைக்காட்டிலும் பெருமிதமான படாடோபத்தோடுந் திரிகின்றவர்களாயும், சிலர் மிலேச்சஆசாரமுடையவர்களாய் நாம்மிகவும் ஆசாரமுடையவர்களென்று நினைத்துச் சந்தோஷத்துட னிருக்கின்றவர்களாயும், சத்பாத்திரத்தில் தானங்கொடாதவர்களாயும், நமக்குஎல்லாந்தெரியுமென்கிற மமதையுடையவர்களாயும், மிகச்சிறிய திரவியத்தைப் படைத்த சிலர் பெருந்திரவியம்படைத்த ஸ்ரீமான்களாகவெண்ணி மதமடைகின்றவர்களாயுமிருப்பார். சிலர் பாவங்களையோசியாமல் சமையலிடங்களில் பிராமணனைவிட்டுச் சமையல் செய்விக்கிறவர்களாயும்,நாய்கள்முன்

னிருக்கிறபற்களினுற்கடித்துச்சாப்பிடுவதுபோல்மாம்சங்களைப்புசிப்பவர்களாயும்,பூண்டு வெண்காய முதலியவைகளைப் புசிப்பவர்களாயும்,ஸ்திரீகள் துஷ்ட எண்ணமுடையவர்களாய்க் குதர்க்கத்தில்சமர்த்தர்களாயுமிருப்பர்.

திருநீறிடுதற்குறிய நெற்றியிலும் மற்றவிடங்களிலும் பச்சைகுத்திக் கொள்ளுகிறவர்கள் ஜன்மாந்திரத்தில் மலசலத்தோடுங் கூடிய மகாதுக்கமான நரகத்தில் வீழ்வார்கள். மிகுந்த சிவநிந்தனை செய்கின்றவர்கள் யமதண்டனைக்குரியவர்களாய் ஞானசூனியர்களாய் அந்ததமசு என்னும் நரகத்தை யடைவார்கள். அந்நரகத்தில் எல்லாவுறுப்புகளையும் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கிற ஆமையைப்போல் அங்கங்களை யுள்ளடக்கிக்கொண்டு வீரர்களாலடிக்கப்பட்டு உலாவுவர். பாவபுத்தியினுல் நெற்றியில் விபூதிதரிப்பதைவிட்டு மண்ணைத்தரித்தும், ருத்திராக்ஷத்தைப் பூணுவதொழிந்து தப்தமுத்திரைகளைப்பூண்டும், ருத்திராச்சனம், ருத்திரசெபம், பஞ்சாக்ஷரஜெபம் முதலியசிஷ்டாசாரமாகிய சத்கர்மாநுஷ்டானங்களைச் செய்யாமலும் கருணாமூர்த்தியாகியபரமேஸ்வரரையாராதியாமலும் திரிகின்ற பிரஷ்டர்களாகிய மாநுடர்கள் பாபாத்மாக்களாய்க் கலியுகந்தோறும் பன்றி கழுதை முதலான யோனிகளிற் பிறந்து பிறந்து அமேத்ய சம்பந்தமுள்ளவர்களாயும், குஷ்டம்பிடித்த சரீரமுள்ளவர்களாயும், மிகுந்த வறுமையுள்ளவர்களாயும், வீடுதோறுந்திரிந்துழன்றும் அங்கநிறைவின்றி மனோவியாதி தேகவியாதிமுதலியவற்ருலுண்டாகும் துன்பங்களோடும் ஆசையினுல் திக்குகடோறுஞ்சென்று வயிற்றைப்போஷிக்கு நிமித்தமாகப்பூமியில் கொடுங்கோல் செலுத்துகின்ற அரசரிடத்தில் ஊழியஞ் செய்பவர்களாயுமிருப்பர். லக்ஷிமி விலாசத்தினு லுண்டாகிய செல்வச் செருக்கினுல் பத்திமார்க்கத்தைவிட்டுப் பரமேஸ்வரரை அரைநிமிஷமேனும்பூசிக்கவிரும்பார்கள். உலகத்தி லுள்ளமற்றையர்கள் தங்கள் பந்துக்களிடத்திலும்,ஊழியக்காரரிடத்திலும், நாய்போலக் குரைக்கின்றவர்களாகவும், ஸ்திரீகளுடைய ஆபரணங்களை யபகரிக்கின்றவர்களாகவும்,மாதா பிதா குருமுதலிய இவர்களிடத்திற் பொய்சொல்லுகின்றவர்களாகவும்,கோ,பிராமணர், தன்னினத்தவர் இவர்களைப் போஷியாதவர்களாகவும். ஆயுளைக்ஷயம்பண்ணிக்கொள்ளுகிறவர்களாகவும், ஸ்திரீவிஷயத்தி லாடுபோ லாசையுள்ளவர்களாகவும், உளுந்தைப்போல் நிறமுடையவர்களாகவுமிருப்பார்கள். அன்றியும்பாலிய ஸ்திரீகளை யபகரிக்கின்றவர்களாகவும், பயப்படுத்துகின்றவர்களாகவும், அவர் பொருளைச்சோரத்தனமாய்க் கொண்டுபோகத்தக்கவர்களாகவு மிருப்பர். அன்றி அந்தஸ்திரீகளின்பொருட்டுப்பசுக்களைத் திருடுகின்றவர்களாவும், சைனிய சமூகங்களில் திரவியங்களையபகரிப்பவர்களாகவும், சூதாடுகிறதே உத்தியோகமாக வுடையவர்களாகவும், சுராபானஞ் செய்கிறவர்களாகவும், மிகவுங் கள்ளத்தனமுடையவர்களாகவும், சிவதூஷணைபண்ணுகிறவர்களாகவும், சூரியமூர்த்தியைத் தூஷிக்கின்ற பரமதுஷ்டர்களாகவுமிருப்பார்கள்.

ஒன்பதாவது அந்தியாயம் முற்றிற்று.

சிவாப்பியாந்நம:

பர்தாவது அத்தியாயம்.

இதுவுமது.

ஓ தேவி ! இன்னமுங் கலியின்கொடுமைகளைக் கூறுகின்றேன் கேட்பாயாக, ஒவ்வோர்சமயத்தில் காற்றுமழையுண்டாய் அதனுல் முன்சொல்லிவந்தபாபாத்மாக்கள் நாசத்தையடைவார்கள். அந்தணர்களுக்கு அநேக வியாதிகளுற்பவிக்கும். பிதாவிருக்கிறபோதே புத்திரர்களுக்கு அகாலமரணமுண்டாகும். குரூரர்களாயும். குரூரதேவதைகளை உபாசிக்கின்றவர்களாயும், கருடனைப்பூசிக்கின்றவர்களாயும், வேஷதாரியாகிய சாக்தர்களாயும், வாத்யமூலமாகவே சீவிக்கின்றவர்களாயும், சக்கிராங்கிதமென்றுபெயரிட்டுச்சரீரத்தைச்சுட்டுக்கொள்ளுகிறவர்களாயும், அநேகர் மார்பில் சிவலிங்கதாரணஞ் செய்துகொள்ளுகின்றவர்களாயும், தருமத்துக்குரியராக வருகின்றவர் தருமசொத்துகளை விக்கிரயஞ்செய்கின்றவர்களாயும், புசிக்கத்தகாத பக்ஷியங்களைப்புசிக்கின்றவர்களாயுமிருப்பர், சூத்திரர்கள் பாஷண்டர்களோடு சிநேகித்திருப்பவர்களாயுமிருப்பர். வைசியர்சோதிடமுதலியவைகளாலும் கணிகையர் வைத்தியமூலங்களாலும் சீவிப்பார்கள். மடாதிபதிகளாயுள்ள அநேக சன்னியாசிகள் தனத்தி லாசையுள்ளவர்களாய் எருதுகளைவாங்கிக் கலப்பைகட்டி நிலங்களை யுழவுசெய்யும்படிச் செய்வார்கள். சூத்திரர்கள்பிராமணரை எதன் பொருட்டாயினும் பிரமாணங் கேட்பாராயின் அதற்கு வேதங்களை உரத்துச்சொல்லுவார்கள். சிஷ்யர்களாயிருக்கின்றவர்கள் குருவாய்விடுவார்கள். குருஸ்தானமா யிருக்கின்றவர்கள் சிஷ்யர்களாய்விடுவார்கள், தாய் தந்தையர்களைப் போஷிக்காதவர்களாய் மனைவியையும், அவர்களைச்சார்ந்த பந்துக்களையும், போஷிப்பார்கள். பால் ஆசையினுல் இளங்கன்றுக்குப் பாலூட்டாமல் பசுக்களைப் பால் கறப்பார்கள். மூடர்கள் சிரார்த்தகாலத்தில் சிரார்த்தத் திரவியங்களெல்லாம் பிறருக்காய்விடுமே என்னும் லோபகுணத்தால் மாமனுரையாவது மருமகனையாவது வைத்துத் திருப்திசெய்வார்கள். தான்செய்யுந்தருமம் பிரசித்தியாகும்பொருட்டு அன்னியர்செய்யும் தருமங்களைக் கெடுப்பார்கள். ஆலயங்களிற் செய்யவேண்டிய உற்சவாதிகட்குக் காலநிர்ணயங்களையும் விதிவிலக்குகளையும் சூத்திரர்கள் நைஷ்டிகமுடைய சாம்பவர்களாய்ச் சொல்லப்போகிருர்கள். இல்லறத்தி லிருக்கின்ற குலமக்கள் யாசிக்கின்றவர்களுக்கும் அதிதிகளுக்கும் அன்னங்கொடுக்கார். வனவாசிகளாயுங் கிராமவாசிகளாயுமுள்ள சூத்திரர்பலர் காமத்தில் பிரீதியுள்ளவர்களாய்ப்புஷ்பத்திலும், நல்லவாசனைத்திரவியங்களிலும், ஆபரணங்களிலும் ஆசையுடையவர்களாயும், சர்வகாமத்திலும் விர்த்தியுடையவர்களாயும், அதற்கேற்றநகம் உரோமம் சடை முதலிய வேடங்களை யுடையவர்களாயும், மஹாதபஸ்விகளாயும், தென்புலத்தார் தெய்வம் என்றெண்ணப்பட்ட பஞ்சயக்ஞங்களை விட்டவர்களாயும்,பாஷண்டர்களாயும் பஞ்சமாபாதகஞ்செய்து

ஜீவிப்பவர்களாயும், புண்ணியதீர்த்த ஸ்நானஞ் செய்பவர்களாயுமிருப்பர். இந்த மிச்சிரமமாகிய தருமமுடையவர்கள் உன்மத்தர்களாயும், விகடர்களாயும், மிண்டர்களாயும், குரூபிகளாயும், கையில்லாதவர்களாயும், குருடர்களாயும், செவிடர்களாயும், பிரமைபிடித்தவர்களாயும், முடவர்களாயும், அங்கஹீனர்களாயும், அதிக அங்கமுடையவர்களாயும், இளைத்தவர்களாயும், பெருத்தவர்களாயும், வயறுமாத்திரம்பெருத்தவர்களாயு மிருப்பார்கள். இவர்கள் செய்தி யிங்ஙனமிருக்க, அநேகஸ்திரீகள் அற்ப புருஷர்களிடத்தில் ஆசையுள்ளவர்களாகவிருப்பார்கள்.

ஹே தேவி! கலியில் சூத்திரர்களுக்குச் சந்தோஷமும், அந்தணர்களுக்கு நாசமும், பசுக்களுக்கு க்ஷீணமு முண்டாகும், தடாகமுதலியவை நீர்நிறைந்திருப்பனவாயும், அதன் கரைகளிலுள்ள விருக்ஷங்கள் பலன்கொடுப்பதில் குறையுள்ளனவாயும், ஓஷதிகளும் தான்யங்களும் சாரமில்லாதனவாயுமிருக்கும். தரித்திரருக்கு எவ்வளவுதிரவியம் செலவு செய்தாலும் அவர்தரித்திரராகவேயிருப்பார்கள். கொடையாளிகள் சிலராயிருப்பார்கள். எவனாவது அன்னந் தீர்த்தந்தானங்கொடுப்பானானால்அவன் விசேஷதானம் பண்ணவனாக நினைத்துக்கொள்வான். எள், எண்ணெய், பழங்கள், பழரசங்கள் முதலியவற்றை யாவரும்விற்பார்கள். அந்தணர்கள் கம்பளி விற்கிறவர்களாகவும், நட்டுவத்தனஞ் செய்பவர்களாகவும், ஓமாக்கினியில்லாதவர்களாகவும், ஏனைய வைதிககருமத்தை விட்டவர்களாகவும் பாவத்தையேசெய்கின்றவர்களாகவும், தருமத்திலாசையுள்ளதாதாக்களைத் தூஷிப்பவர்களாகவும், பிரேதங்களைச்சுமந்து சீவிக்கின்றவர்களாகவும், மதுமாம்சங்களைப் புசிக்கின்றவர்களாகவும், நண்டுகள் வசிப்பதுபோல் சிறிய நிர்ப்பந்தமான இடங்களில் வசிப்பவர்களாகவும் இருப்பர். ஒவ்வோரிடத்தில் சைவர்கள் சிலரிருப்பார்கள், அவர்களைக்காணும் அசைவர்கள் அவர்களைக் குடியனைப்போலடிப்பார்கள். பிராமணர்கள் சூத்திரஸ்திரீகளிடத்திலும், சூத்திரர்கள் பிராமணஸ்திரீகளிடத்திலும் ஆசையுள்ளவர்களாகவிருப்பார்கள். சர்வதேவதா சொரூபராகிய மகாதேவரை அருச்சிக்கின்றசாம்பவன் எவனுமுண்டாகமாட்டான். மானுடர்கள் விபூதி ருத்திராக்ஷமுடையவர்களைப் பார்த்து அசூயையுடையவர்களாயும், மண்ணாலும் சந்தனத்தாலும் ஊர்த்துவபுண்டரமணியும் வைணவர்களாயும், சாராயம் மாம்சம் முதலியவற்றிற் பிரியமுள்ளவராயுழலுஞ் சாக்தர்களாயும், சாபரமந்திரத்தை யுபாசிக்கும் மாந்திரிகராயு மிருப்பார்கள். அநேகர் கன்னிகையைத் திரவியநிமித்தம் விவாகஞ் செய்துகொடுத்து அத் திரவியத்தினால் சீவிப்பார்கள். முதன் மூன்றுவருணத்தவரும் நான்காம்வருணத்தவருக்குச் சுகஞ்செய்கின்றவர்களாகவும், பஞ்சுவிற்கின்றவர்களாகவும், காக்கையைப்போ லலைகின்றவர்களாகவும் டம்பம் அலங்காரம் இவைகளையுடையவர்களாகவும், கோபம் அசூயை இவைகளை மேற்கொண்டவர்களாகவும், தயை தாக்ஷிணிய மில்லாதவர்களாகவும், உள்ளும் புறம்பும் சுத்தியில்லாதவர்களாகவும், யாவரும் மிருகதருமம்போல் நடக்கத்தக்கவர்

களாகவுமிருப்பார்கள். இன்னமும் விசேஷமாய்ச் சொல்லுவதனாலென்! கலியி லெல்லாத்தருமங்களையும் விட்டுவிடுவார்கள். சிலர் ஜாதகங் குணிப்பதில்ஞானமுள்ளவர்களாகவும், சிலர் வியாபாரத் தொழில்செய்வதில் ஞானமுள்ளவர்களாகவும், சிலர்வைத்தியஞ்செய்வதில் ஞானமுள்ளவர்களாகவும் சிலர் வசியம் ஆகர்ஷண முதலியனசெய்வதில் ஞான முள்ளவர்களாகவும், சிலர் யானை குதிரை கோவேறுகழுதை எருது முதலியவைகளை வியாபாரஞ்செய்வதில் சமர்த்தர்களாகவும், ஆசாரியர்களென்று பெயருடைய சிலர் பொருளைவிரும்பி நீசர்களுக்கும் குலவான்களுக்கும் சமமாகத் தீக்ஷை நடத்துகின்றவர்களாகவு மிருப்பார்கள். அவர்களிடத்தில் தீக்ஷைபெற்றுக் கொண்டவர்களும் கடூரசித்தமுடையவர்களாகவும், சிவபூஜையில் மனம் வையாதவர்களாகவும் கலிதோஷசம்பந்திகளாகவு மிருப்பார்கள்.

கலியிற் பிறக்கப்போகிற துராத்மாக்கள் உலகில் திரவியகாமமுடையவர்களாய் மனதைத் தாபப்படுத்தி இரவும்பகலும் பித்துபிடித்தவர்போலுழல்கின்றவர்களாயும், பெண்காமத்தால் மன்மதனால் பீடிக்கப்பட்ட சித்தமுடையவர்களாயும், ஒருவிதத்திலும் நிலைபெறாது பலவிதமான சிந்தாகுலத்தை யுடையவர்களாயும், பிராம்ஹணநிந்தனை செய்வதில் மிகுந்த பிரீதியுள்ளவர்களாயும் வசிப்பார்கள். இவர்களெல்லாம் நரகமாகிய கடலில் ஆழ்ந்து எப்போதுங் கரையேறாதவர்களா யிருப்பார். அரசர்களோவென்றால் கிணற்றில் வசிக்குந் தவளையைப்போல் பிரசித்தியில்லாமல்வாழ்கின்றவர்களாயும், இவ்வுலகில் யாகத்தில் யூபஸ்தம்பம்நாட்டாமல் பாவமிகுதியினால் யமபுரத்தில் யூபஸ்தம்பத்தை நாட்டுகின்றவர்களாயும், பாவகாரியங்களுக்கே சரிக்கத்தக்க சரீரத்தையுடையவர்களாயும், அதிர்ப்தி என்கிற வச்சிராயுதத்தைநாட்டி அதனாலுண்டாகும் தாபத்தை எப்பொழுது மடைகின்றவர்களாயும், மல சமானமான அசுத்தமுடையவர்களாயும், நாணமற்றவர்களாயும், சிவலிங்கார்ச்சனை யில்லாதவர்களாயு மிருப்பார்கள். அந்தணர் என்னுடைய விஸ்வாசரூபமாயும் ஸ்ரீ ருத்திரசாகையினால் அலங்கரிக்கப்பெற்றதாயுமுள்ள வேத சமூகத்தை விசுவசிக்காதவர்களாயும், சன்மவிரதமாய்க் கொள்ளத்தக்க சிவலிங்கார்ச்சனையை விட்டவர்களாயும், துர்வாதத்தில் ஆசையுள்ளவர்களாயும், பிறவிதோறும் சம்சாரபந்தத்தை விட்டுநீங்காதவர்களாயும், அகங்காரத்தை மேற்கொண்டு பாவஞ்செய்வதில் வீரமுடையவர்களாயும், வேசரிக்குச் சமானமானவர்களாயுமுழன்று அந்தியத்தில் நரகத்தையடைவார்கள். ஏனையோர் மலஜலங்களாணிறையப்பெற்றிருக்கிற பன்றியோனிகளிலும், அதனினு மிழிந்தயோனிகளிலும் பிறந்துழல்கின்றவர்களா யிருப்பர். ஒருவரேனும் பரமேஸ்வரவுபாசனையைச் செய்யமாட்டார்கள்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீசாம்பசிவாயநம:

பதினோராவது அத்தியாயம்.

இதுவுமது.

கலியுகப்பிரபாவத்தைப் பரமேஸ்வரர் திருவாய்மலர்ந்தருளக்கேட்ட பரமேஸ்வரி ஹே சம்போ! மகாதேவா! கலியினுடையதருமப்பிரபாவத்தை நன்ருய்க்கேட்டேன், கிருத திரேத துவாபரயுகங்களிலேயே உம்முடைய பக்திவருகிறது கஷ்டமானதென்று அந்தயுகதருமங்களைக் கூறிவரும்போது சந்தேகித்தநான் கலியில் பத்திஎவ்விதமாய் வருமென்று நினைப்பேன்? ஹே மகேஸ்வரரே! கலியில் வரப்போகிற அந்தணர்முதலிய நான்கு சாதியரும், ஸ்திரீஜாதிகளுமாகிய யாவரும் இரண்டுகாலுடைய ஆடுகளைப் போல் யாதொரு ஞானமுமில்லாமற் றிரிவார்களென்றே நினைக்கின்றேன். இவர்களுக்குப் பக்தி, ஞானம் எப்போதாவது தோன்றுமா ? தோன்றும் வகை ஏதேனும் வைத்திருக்கின்றீரா? இருந்தால் அவசியம் தயைகூர்ந்து சொல்லியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர்,

மகா கைலாயத்தையே ஆஸ்தானமாகவுடைய பகவானுகிய மகேஸ்வரர் புன்சிரிப்புடையவராய்த் தேவியைப்பார்த்து உலகமாதாவாகிய ஹே தேவி! நீ பயப்படவேண்டாம் நன்மையிருக்கிறது. கலியில் * பெரியவைத்தியனுய் நானிருக்கிறேனுகையால் என்னிடத்திலுண்டாகவேண்டிய பக்தியும் சிலர்க்குப் பூர்வபுண்ணியவிசேஷங்களாலுண்டாகும். அதனுலவர்கள் என்னை நல்லபாவனையோடு பாவித்து ஊக்கமுள்ளவர்களாய்ப் பூசித்துச் சம்சாரமாகிய கடலைக்கடப்பார்கள். முன் மூன்றுயுகங்களிலும் தேவர் முனிவர் முதலானோர் எப்படி சிவபூஜையைக் கைவிடார்களென்று சொன்னோமோ அவர்களப்படியே கலியிலும்விடாதிருப்பார்கள். ஆயினும், ஹே அம்பிகே! முன்யுகங்களிற் பெரும்பாலும் யாவருந்தவமுடையவர்களாகவிருந்ததுபோலிருக்கமாட்டார். பிரமனுதியருக்கு முண்டாகாத என்னுடையபக்தியையுடைய அறியுடையவர்கள் கலியில் ஒருகணப்போதேனும் பிறந்துவாழ நினையார். கலியுகம் அவ்வளவு கொடுமையாயிருந்தபோதிலும் அந்தயுகத்தில் நன்மைபலிப்பதாகிய அதிசயகுணங்களுள அவற்றைச் சொல்லுகிறேன்.

---

* கலியில் பெரிய வைத்தியனுயுள்ளேனென்றதனுல் பிணியாளனுக்குப் பிணிமேலிட்ட காலத்தில் வைத்தியனுயுள்ளான் வந்து அப்பிணியாளனிடத்து இரக்கமுடையவனுய் நீ பயப்படவேண்டாம் நானிவிர்த்தி செய்கிறேனென்று அவனுக்குத் தைரியமுண்டாக்கி அவனிடத்தில் ஓர் சுத்தமும்பாராது அவனைத்தொட்டும் அவுடதஆகாரமுதலியவைகளையுண்பித்தும் அவன் வியாதியைப்போக்கி அவனைச் சந்தோஷித்தனுயுலாவச் செய்து கண்டுகளிப்பதுபோல் கலியில் உயிர்களுக்கு விளையும் பாவபேதங்களை எல்லாம் சிவனுர்தாமேவந்து போக்கி வாழவைப்பரென்க.

கலியானது நல்லவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பதாயினும் அதனிடத்தில் கிருத்தியம். அகிருத்தியம். குணம். அகுணம். என்கின்ற ஒன்றொன்றையும் விருத்தியாக்கலாகிய நன்மையான குணமொன்று விசேடமாயிருக்கின்றது. அதனால் என்னைத் தியானித்தல், அன்போடு பூசித்தல் செபஞ்செய்தலாகிய சத்குணசம்பந்தமாகிய சத்கிருத்தியங்களைச் செய்வாராயின் அவர்களுக்கு முன்னையுகங்களி லுண்டாகும் பலனுக்குமேலாக மூன்றுபங் குண்டாகும். இதனால் கலியுகத்தை விசேஷமாக நினைத்தல் வேண்டும். ஹேதேவி ! நா னந்தக்கலியில் அநுக்கிரகஞ்செய்யும்வகை எவ்வண்ணமெனின், மூடர்கள் என்னை நூறுபங்கு நிந்தித்து ஒருஸ்தோத்திரஞ்செய்வாராயின் அவர்களிடத்தில் நான் சந்தோஷத்தை யடைவேனேயன்றி ஒருகுற்றமு நினையேன். எப்போதும் என்னுடைய நாமஸ்மரணை செய்வாராயின் ஞானிகளுக்குங் கொடுத்தற்கரிய ஞானானந்தத்தைக்கொடுப்பேன்.

ஹேபார்வதி ! கலியிலுண்டாகும் நன்மைகளை இன்னமுஞ்சொல்லக் கேள்; எவனாயினும் அரைக்கணமேனும் எனது நாமாமிருத பானத்தினால் திருப்தியடைந்த மனமுடையவனாயிருப்பானாயின் அவனை முக்திகாந்தைக்கு நாயகனாகச்செய்வேன். எவன் என்னுடைய பூசை தியானம் நாமஸ்மரணைமுதலியவற்றி லிருக்கின்றானோ அவன் கலிதோஷத்தினால் நிறைந்தவனாயிருந்தபோதிலும் அவன்றானெனக்குச் சதாசாரமுடையசிஷ்டன். அவன் கலியுகத்திற் பிறந்தவனன்று, கிருதயுகமுதலிய மூன்றுயுகங்களிலும் பிறந்துபிறந்து அநேக ஆயிரவருஷந் தவங்களைச்செய்து அந்தப்புண்ணிய விசேஷடத்தினால் இப்போது கலியிற்பிறந்து அந்த யுகங்களிற்செய்த புண்ணியங்களுக்கெல்லாம் அடையவேண்டிய பலனை அதிகமாக அடையவேண்டிவந்து பிறந்தவனென்று நினைத்தல்வேண்டும். இவ்வுலகில் எந்தமானுடனாவது பூர்வபுண்ணிய விசேஷத்தினால் சிவபூசையில் ஆசையுள்ளவனாயும், பஸ்மதாரியாயுமிருப்பானேயானால் அவனைக் கலியிற்பிறந்து சம்சார பந்தத்தில் மூழ்கிக்கிடக்கும் அஞ்ஞானிகளை அப்பந்தத்தினின்று நீக்கி ரக்ஷித்துச் சுகானந்தத்தைவிளைவிக்கவந்த மகாபுருஷனென்று நினைத்தல்வேண்டும். ஒருவன் பர்வதாகாரமாகிய கலிதோஷத்தில் மூழ்கி னவனாயிருந்தபோதிலும் என்பாதாரவிந்தத் தியானத்தி லாசைமாத்திர முள்ளவனாயிருப்பானானால் அவனே சிவபக்தன். அவனே முக்தாத்மா. ஹேபார்வதி! கலியுகத்தில் சகலபுண்ணிய தீர்த்தஸ்நானங்களாலும், சகலயக்ஞங்களாலும், சகலதானங்களாலும், சகலபெரியோருடைய ஆச்சிரமவாசத்தாலும், சகலவிரதானுஷ்டானங்களாலும் வரும்பயனென்னை. மனமானது சந்திரசேகருடைய பாதாரவிந்தத்தியானத்தில் சந்தோஷத்தையடைந்திருக்கவும், காயமானது சிவலிங்கார்ச்சனையில் முயன்றுகொண் டிருக்கவும், வாக்கானது சிவநாமங்களை யுச்சரித்துக்கொண்டிருக்கவுஞ் செய்வானாயின் அவன்றான் முக்தனென்று சொல்லப்படுவான். எவன் காலாந்தகருடைய பூஜையிலிருக்கின்றானோ அவனைக் கலிதோஷமானது எவ்வண்ணம் பிடிக்கும்.

...புர மாவட்ட நூலக ஆணைக்குழு
கிளை நூலகம்.
2547

ஹே பார்வதி ! கலியில் சிரேஷ்டமாகிய பக்தியானது சம்சாரமென்கிற கடலைத் தாண்டுவதற்குத் தோணியாயுள்ளது. இலிங்கார்ச்சனையானது புண்ணியசாதனமாயும், நல்லமார்க்கத்தைக்காட்டுவதாயும், ஜன்மஜன்மாந்தரங்களிற் செய்தபாவங்களைப் போக்கடிப்பதாயும், கலிதோஷங்களை நாசம்பண்ணுவதாயும், சுகங்களையெல்லாந் தேடிவைப்பதாயும், சகலதுக்கங்களையும் போக்கடிப்பதாயு முள்ளதென்று வேதங்கள்கூறுகின்றன. ஐம்புலவிஷயங்களில் மூழ்கிக்கிடக்கிற மானுடர்கள் இக்கலியில் பரமேஸ்வரனாகிய என்னுடைய பாதாரவிந்தத்தில்மாத்திரம் அன்புள்ளவர்களா யிருப்பாராயின் அவர்கள் அளவிறந்தபுண்ணியபலன்களை யடையத்தக்க தபோபலத்தை யுடையவர்களாவார்கள். பரந்துகிடக்கும் சம்சாரமாகிய கடலில் தாண்டுவதற்குக் கூடாமையாகத் தோன்றும் பெருந்துக்கத்தைத் தாண்டிவிடுவார்கள். தேவர்களும் முனிவர்களும் கிருதயுகமுதலிய மூன்றுயுகங்களில் செய்தற்குக் கூடாமையாகிய அரியதவத்தைச்செய்து அதன்பலனைக் காலாந்தரத்திற் சாவகாசமா யடைவார்கள். கலியிலோ வென்றால் என்னுடைய திருவடியில் ஒருக்ஷணகாலம் சித்தத்தைவைத்த மாத்திரத்தில் நாளையென்ப தில்லாமல் அந்தக்ஷணமே மோக்ஷலாபத்தை யடைவார்கள்.

நான்சொல்லியவாறு தேவர் மானுடர்முதலாயினோரும் வைப்பராயின் முத்திபெறுவர். ஆகையினால் கலியைநிந்தித்தல்கூடாது. அநேகம்பெரியோர்கள் கலியில் எப்போது சன்மமுண்டாகப்போகிறதென்றும், உண்டானால் பரமேஸ்வரருடைய அருச்சனைப்பயனை யெளிதிலடையலா மென்றும் அபேக்ஷிக்கின்றனர். யாராவது கலியில்நியமமாக என்னுடைய லிங்காராதனத்தி லன்புள்ளவராயும், நெற்றியிற்பிரகாசிக்கின்ற திரிபுண்டரதாரணமுடையவராயும், ருத்திராக்ஷமாலிகை யுடையவராயும், ஸ்ரீருத்திரத்தை அத்தியயனம் பண்ணுகின்றவராயும், பஞ்சாக்ஷரத்தை எண்ணிட்டுச்செபிக்கின்றவராயு மிருப்பார்களேயானால் அவர்கள் ருஷிகளென்றழைக்கப்படுவார். அவர்களுக்குத்தான் முத்திஎன்பதுசித்தம். சிவாத்பரதரம் நாஸ்தி என்கிற திடமுடையவன் கலியிற்சொல்லப்பட்ட பாவவழியாற்றோன்றும் சரை ரோகம் அவமரண முதலியவற்றை யடையமாட்டான். அழிவெய்தும் சுகபோகத்தை யுடைய வுலகங்களை யடையமாட்டான். அவனிம்மையில் புத்திரமித்திர களத்திரங்கள், தாய் தந்தையர் முதலாயினரைப் போஷிக்கின்றவனாயிருப்பன். சந்திரசூடருடைய பாதாரவிந்தத்தில் ஒருகணப்பொழுதாவது மனதைச்செலுத்துமொருவன் மிருத்யுபயத்தையும் கலிபயத்தையு மடையமாட்டான். கிருதயுகமுதலிய மூன்றுயுகத்திலும் அநேகவருஷகாலம் சிவபூஜைமுதலிய அநேகவிதமான தவங்களையொருவன் செய்தவனாயிருந்தபோதிலும் அவன் கலியுகத்தில் ஒருதினம் லிங்காராதனையும், சிவத்தியானமும் செய்கின்றவனுடையு முத்தத்துவத்தையும், என்னுடைய இஷ்டத்தையும் அடைகிறதில்லை. கலியிற்பிறந்தாலும் ஆசையா யடையத்தக்க என்னை லிங்கரூபத்தில் க்ஷணகாலமாவது

ஒருவன் பூஜிப்பானாயின் அவன் அநேகபாவத்தொழிலால் விளைந்தபாவங்களையெல்லாம் போக்கடித்துக் கொண்டவனும், தன்யனும், பூஜ்யனும், எனக்குப்பிரியாத நண்பனுமாகிறான். ஒருவன் திரியாயுஷமென்கிற மந்திரத்தினால் செபிக்கப்பட்ட விபூதியினால் பரிசுத்தமடைந்த சரீரத்தையுடையவனாவானேயானால் அவன் சர்வபாபங்களினின்றும் விடுபட்டு இம்மையில் சகல சம்பத்துடையவனாய் வாழ்ந்து அந்தியகாலத்தில்தாவரசங்கமங்களுடைய இருளைப்போக்கும் சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற விமானத்தின் மேலேறித் தேவசமூகங்கள் கூடியிருக்குந் தேவசபையை யடைவான். சிவலிங்கார்ச்சனையைச் செய்வராயின் அவர்கள் ஒப்பிடக்கூடாத மஹாபாதகானுபவங்களைத் தாண்டிச் சுகானுபவத்தைச் சந்தோஷமா யநுபவிப்பார்கள். ஹே பார்வதி! தர்ப்பகூர்ச்சத்தி லென்னை ஒருவ னாவாகித்துவிதிப்படி பூசனைசெய்வானாயின் அவ்வாராதனைப்பலத்தினால் அகண்டமான புண்ணியங்களுடையவனும் கலியிற்பிறந்த தோஷமுள்ளவனாயிருந்தபோதிலும் அத்தோஷத்தினின்றும் நீங்கினவனும் கருப்பவாசத்தையு மென்று மறியாமற்போவான். அவன் சுவர்க்கத்தை விரும்பினாலும் மோக்ஷத்தைவிரும்பினாலும் அடைவான். அவனெந்தலோகத்திலிருந்தாலுமிருக்கலாம். அவனுக்குப் பந்தமில்லை. விஷத்துக்குச்சமானமானவிஷயங்களில் பிரவர்த்தித்திருக்கிற மனதையுடையவர்களுக்குள் ஒருவன்திரிநேத்திரதாரியாகிய என்னுடைய நாமத்தில் பிரவர்த்தித்திருக்கிற சித்தத்தைப்படைப்பானாயின் அவன்விஷயங்களிலுழலும் சித்தமுடையவனன்று சிவத்தியானத்திலுழலும் பரிசுத்தமான இருதயமுடையவனென்றும், எப்பொழுதும் அசுத்தமுடையவ னன்றேன்றும்,தன்யனென்றுஞ் சொல்லப்படுவான்.

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீசாம்பசிவாயநம:

பன்னிரண்டாவது அத்தியாயம்.

இதுவுமது.

மஹாதேவியானவள் கலியினுடைய நற்குணங்களை ஆச்சரியமாகக்கேட்டுக்கிருபாகரனாகிய கால காலரை நமஸ்கரித்து அஞ்சலியோடுநின்று சங்கரரைப்பார்த்து ஹே தேவ தேவ! மகாதேவ! சிருஷ்டிதிதி சங்காரங்களால் உலகைப் பரிபாலிக்கின்றவரே! உன்னுடைய உருவங்களாகச் சொல்லப்பட்ட பிரம விஷ்ணு ருத்திர இந்திராதியராலும், சகத்தை ரக்ஷிக்கின்றவரே! சந்திரனைச்சிரசில் தரித்திருக்கின்ற சந்திரசேகரரே! கங்காதரரே! ஹேமகேஸ்வரா! மகாதேவா! நானொரு சிறிய விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன். ஹே பூதேசா! ஹே பசுபாசவிமோசகா!

அதற்கு விடைதரல்வேண்டும். ஓ மகாதேவா! கலியந்தத்தில் மாநுடர்கள் என்ன ஆகாரமுடையவர்களாவார்கள்? எந்தவிதமான நடக்கையுடையவர்களாயிருப்பார்கள்! அவற்றையும் ஹே சங்கரா! யுகாந்தத்தில் மிகச் சிறியராகவும் சுகமென்பதறியாத மனமுடையராகவு மிருப்பரல்லவா? அவர்களுடைய விசேஷங்களையும் விவரமாய்ச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, விஸ்வநாதரும் விஸ்வாதிதரும் அன்பருக் கன்பருமாகியமகேஸ்வரர் புன்சிரிப்புடையவராய்த்தேவியாருக்குக் கலியந்தத்தில் பிராணிகளுடைய நிலைமையையும் பிரளயத்தினுடைய க்ஷீணத்தையும் மீளவுமுற்பத்தியாதலையு மெடுத்துக் கூறினாரென்று ஸ்கந்தர் ஜைகிஷவ்யமுனிவருக்குக் கூறத்தொடங்கினர்.

மகேஸ்வரர் தேவியாருக்கு அற்புதமாகிய விஷயத்தை எவ்வண்ணம் அநுக்கிரகஞ் செய்தனரோ அவ்வண்ணஞ் சொல்லுகிறேன். நிர்மலசித்தராகக்கேளும். கலியில் ருஷிகளோடும் சிவகணங்களோடும் தேவகணங்களோடும் பரமேஸ்வரர் செய்யப்போகிறமகிமைகளனேகமுள. அவற்றையும், கலியந்தத்தில் நடக்கும் பிரளயத்தையும், பின்சொல்லுகிறேன். இப்பொழுது கலியந்தத்தில் மாநுடர்களுக்குண்டாகுந்துர்ப்புத்தியைச் சொல்லுகிறேன் கேளும். பாவமிகுதியினா லென்னுடைய ஆலயத்தை யிடிப்பவர்களாயும், பிராமணத் திரவியத்தையபகரிப்பதில் அன்புள்ளவர்களாயும், பிராமணஸ்திரீகளையனுபவிக்க வேண்டுமென்னு மிச்சையுடையவர்களாயும், நமஸ்கரிக்கவேண்டிய ஸ்திரீகளிடத்தில் காமவிகாரங் கொண்டவர்களாயு மிருப்பார்கள். இவர்களெல்லாம் நரகத்தில் தள்ளப் படுவார்கள். கலிதோறும் புருஷர்களும் ஸ்திரீகளும் சோரத்தனமானவெண்ணமுடையவராயும், பரமேஸ்வர பக்தியில்லாதவராயும், திரிபுண்டரதாரணமில்லாதவராயும், மண்ணை நெற்றியில் தரிப்பவராயும், தப்தமுத்திரை தரிப்பவராயும், ருத்திராக்ஷ மணியாதவராயும், சிவலிங்காராதனையில் வெறுப்புள்ளவராயு மிருப்பார்கள்.

இவ்வாறான பாபாசார முடைய பிராணிகளெல்லாம் துஷ்டராஜாக்களுடைய கொடுங்கோலினால் மிகுந்த கஷ்டத்தை யனுபவிக்கின்றவர்களாயும், தனதானிய மில்லாதவர்களாயும், திரவியாபேக்ஷையினால் மனைவிமக்கள் பந்துஜனங்கள் முதலாயினாரைவிட்டுத் திக்குகடோறும் ஸ்திரபுத்தியில்லாமல் சுற்றிக்கொண் டிருப்பவர்களாயும், சிவத்துரோகிகளாயும், மாபனை எனுமிச்சை இவைகளால் செய்யப்பட்ட மாலைகளை யுடையவர்களாயும், நாமிருப்போமென்கிற வெண்ணமில்லாமல் இறப்போமென்கிற வெண்ணத்தினால் நீங்காத தாபத்தை யடைந்திருக்கிற மனதையுடையவர்களாயும், எப்போதுந் துக்கத்தினால் வியாகூலமுடையவர்களாயும், இருந்தானென்கிறசொல்லில்லாமல் நேற்றையதினம் பிறந்தான் இன்றையதினமிறந்தானென்கிறசொல்லையே சொல்லிக்கொண்டு அவைகட்குரிய விசேஷங்களையேசெய்கின்றவர்களாயும் அல்பபோகமுடையவர்களாயுமிருப்பர்.

சிவசின்னங்களாகிய பஸ்மருத்ராக்ஷதாரணங்களில் வேறுபட்டமுக முடையவர்களாயும், சிவஸ்மரணைசெய்வதில் தாப்பாளிட்ட கதவைப் போலுந் திறக்கக்கூடாத வாயையுடையவர்களாயும், பஞ்சாக்ஷரத்திலும் ஸ்ரீருத்திரமுதலிய மந்திரங்களிலும் க்ஷேத்திரவாசத்திலும்அன்பில்லாதவ ராயுமிருப்பர். இவரெல்லாம் பூமிக்கோர்பாரமாயும் பாபத்துக்கோர் கிரு கமாயுமிருக்கத்தக்கவராவர். சிவாலயத்திலுள்ளதிரவியங்களை அபகரிக்கின் றவர்களாயும், திபதைலத்தைத்திருடுகின்றவர்களாயும், உற்சவதரிசனங்க ளில் ஆசையற்றவர்களாயும், சிவபக்தியை நிந்திக்கின்றவர்களாயும், பாப புத்தியையுள்ளவர்களாயும், நரகவாசத்திலேயே ஆசையுள்ளவர்களாயுமிரு ந்துமுடிவில் விளக்குப்பூச்சியைப்போல் நரகத்தில் வீழ்ந்துவிடுவார்கள்.

அன்றியும் சந்நியாசவாச்சிரமத்தையுடையவர்களாயிருந்துந் துன்பப் படுவதற்கேதுவானவிஷயங்களிலேயே ஆசையுடையவர்களாயும், பிரமத்து ரோகிகளாயும், லிங்கதாரணமுடையவர்களாயும், சக்கிரதாரணமுடையவர் களாயும், யக்ஞவிதிகளில் விரத்தியுடையவர்களாயும், வேதோக்தமானம ந்திரங்களில் அன்பில்லாதவர்களாயும், சிவத்துரோகிகளாயுமிருப்பர்.

அன்றியும் நாடோறும் யாசித்துப்பிழைப்பதிலும், கூலிக்குச் சமை யல்செய்து பிழைப்பதிலும் பிரியமுடையவராயும், வீண்வார்த்தைகளை ஓயாமற்பேசுகின்றவராயும், புண்ணியபாவங்களைச் சமமாகநினைத்து ஆசா ரங்களைவிட்டு உண்ணக்கூடாத கட்டுச்சாதங்களையுண்பவராயும், வேதார்த் தத்துக்கு அபார்த்தம் செய்கின்றவர்களாயும், தேனில்வீழ்ந்தவண்டுபோல் பிராந்தியினால் ஒருணர்வுமில்லாமற் றிரிகின்றவராயும், கிருகஸ்தனும் சன் னியாசியும் வனவாசியும் கிராமத்தி லிருப்பவனுமாகியயாவருந் திரவி யத்திலே ஆசையுள்ளவர்களாயும், காமியமந்திரத்தி லாசையுள்ளவர்க ளாயும், சிவபூஜை காமியத்தைக்கொடாதென்று அதிலாசையற்றவராயும், சொக்கட்டானாடுவதி லெப்பொழுதும் சித்தவிருத்தியுடையவர்களாயும், அடிக்கடி சூதாடுவதிலும் மதுபானஞ்செய்வதிலும் அன்புள்ளவராயும், தயையில்லாதமனமுள்ளவராயு மிருப்பார்கள்.

அன்றியும் பாவியர்கள் சமையல்செய்யத் தெரிந்தவர்களாயும், எல் லாத்தொழிலுஞ் செய்யத்தெரிந்தவர்களாயும், வஸ்திரத்தினால் அலங்கரித் துக்கொள்ளும் அலங்கார விதங்கள் தெரிந்தவர்களாயும், சிலர் பூமி யைத்திருத்தும் வகைதெரிந்தவர்களாயு மிருப்பர். சிலர் கஷ்டமானவி யாபாரத்தினால் வாட்டமுடையவராயும், அநேகர் எதைச்செய்தும் திரவி யங்கைகூடுவதில்லாமல் சுகயீனர்களாயுமிருப்பர். அன்றியும் மழை இல்லை யில்லை என்கிறசொல்லையே யாவருஞ்சொல்லுகின்றவர்களாயும், தயிர்வெ ல்லம் முதலியவற்றை விக்ரயஞ் செய்கிறவர்களாயும், உயிர்களிடத்தில் தயையில்லாதவர்களாயுமிருப்பர். பிராமணர்களோவென்றால் வேசரிக் கொப்பானவர்களாயும், எந்தக்குலவிருத்தியி லிருந்தபோதிலும் முக்தியை

யடைவோமென்கிற வெண்ணமுடையவராய் நீசவிருத்தியிலேயே பிரியங்கொண்டு திரிகின்றவராயும், விபூதிருத்திராக்ஷம், பஞ்சாக்ஷரம், ஸ்ரீருத்திரம், ஸ்ரீருத்திர அர்த்தவிசாரம், சிவபூஜை முதலிய வற்றில் நோக்கமின்றித் திரிகின்றவராயும், பிராரத்தத்தினால் அடையப்பட்ட பாவ கர்மங்களால் புத்திப்பிரமை யுடையவர்களாயும், சாமாணியமான புண்ணிய கர்மங்களால் துக்கசவுக்கியங்களுள்ளவராயும், பலவித யோனிகளிற் பட்டுழலுந் தியகுண முடையவராயும், பிறரால் பூபாரங்களென்று நிந்திக்கப்பட்டாலும் தாங்கள் தங்களைச் சுகிகளைப்போ லெண்ணியிருக்கத்தக்கவர்களாயுமிருப்பர். அங்கவங்க துங்க மகராஷ்டிர சௌராஷ்டிர விதர்ப்ப நர்மதாதீரமுதலிய புண்ணியதேசங்களிலுள்ள அரசர்களும் கலிதோஷத்தினால் பலசாதிகளிற்பிறந்து தமக்குக்கிடைத்த ஓரற்பசுகத்தில் எல்லாச்சுகமுமுடையவர்போ லெண்ணித் தேவர்களையும் பிராமணர்களையும் நிந்தித்து அதனால் தினே தினே திரவிய மிழந்துபோகத் தக்கவராயும், புலியைப்போற் சீறுகின்ற தமோகுண முடையவராயும், தீமையான துர்ப்புத்தியினால் தங்களுக்குப் பிராண ஹானியுண்டாவதுந் தெரியாமல் அதனையே மேற்கொண் டிருப்பவராயும், யக்ஞ முதலானவைகளைச் செய்விக்க வேண்டுமென்பதை மறந்து பிறருக்குத் துரோகஞ்சொய்யுந் துரோகச்செயலையே மேற்கொண்டவராயும், குரூபிகளாயும், நானாவிதமாகிய அவயவ லக்ஷணஹீனராயும், துஷ்டர்களாயும், அடக்கலமென்று புகுவாரைக் கெடுக்கவேண்டுமென்னு மெண்ண முடையவராயும், துக்கம் பசி இவைகளால் பீடிக்கப்பட்டவர்களாயும், அந்தியத்தில் யமதண்டனைக்குப் பாத்திரர்களாயும், எப்போதும் பாவசம்பந்த முள்ளவர்களாயும், அதனால் நன்னெறிக் கேதுவாகும் மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளாமல் கலிதோஷமாகிய வச்சிராயுதத்தினா லடிபட்டு இரக்கமென்ப தில்லாமல் ஒருவரையொருவர் அடித்துத் திரிபவராயும், குறைந்த வயதுடையவராயு மிருப்பர். கங்கை முதலாகிய நதிகளிலும், குருக்ஷேத்திரம், புஷ்கரம், ஆரியாவர்த்தம், காஞ்சி, கோசலதேசம், சோழதேசம், பாண்டியதேசமுதலிய தேசங்களிலுள்ள பிராமணர்களுக்குந் தர்மானுஷ்டானம் நடவாது. காவேரிதீரத்திலிருக்கின்ற லிங்கமூர்த்திகளுடைய சிரசில் ஒரு வில்வமாவது வைத்து ஒருக்ஷண காலமாவது பூஜை நடவாது. இவ்வாறு பாபமிகுந்த பூமியில் குறைந்த வயதுடைய மானுடர் வசிக்கின்ற தென்றிசையில் சத்புருஷர்கள் வசிக்கின்ற ஸ்தானமொன் றிருக்கிறது. அது தாம்பரபரணி தீரமாகும். அத்தீர்த்தத்தில் சாருகுபக்ஷணஞ் செய்கிற முனிவர்களும் மற்றுமுள்ள ஆச்சிரமிகளும் அவ்விடத்தையடைவார்கள். காற்றினால் கலங்கியிருக்கின்ற சமுத்திரத்தினின்று முண்டாகும் பெரிய அலைகள்போலும் வீசப்பட்டதாகிய அந்நதியின் பெருமை எத்தன்மைத்தெனின், மேகமானது நீர்முகக்கக் கடலிற் போகுமாயின் காற்றினாற் கலங்கி மேலெழுந்து வீசுகின்ற பெரிய அலைகளினால் மொத்துண்டும், வடவா முகாக்கினியினுடைய சுவாலையினாற் சுடுண்டும் வருந்தி எங்குப் போவோமென்று மீளும்பொழுது அதிவேகமாய்ச் செல்லுகின்ற அந்நதியைக்கண்டு இது கடலினும் பெரி

தெனவெண்ணி அந்நீரைப்பருகி அங்கும் எங்கும் நீரைப்பொழிந்து வெள்ளமாக்கிவிடும். பெய்யுங்காலத்தி லுண்டாகும் மின்னல்கள் இருளென்பதைக் காணவொட்டாமலோட்டும். அந்நதியேயன்றி காவேரியென்று ஓர் நதியிருக்கிறது. அது எத்தன்மைத்தெனின் சிவபெருமானுருடைய பாதாரவிந்த பூசையில் மனமில்லாதவராய் சம்சார சாகரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற ஆன்ம கோடிகளுக்குச் சிவானந்தத்தைக் கொடுப்பதாகிய மோக்ஷத்தைக்கொடுக்கும் மகாலிங்கமூர்த்தி வீற்றிருக்கும் மத்தியார்ச்சுனத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யாதவரா யுழலுமாந்தர்கள் ஸ்நானஞ்செய்வாராயின் அவர்களை மலபாசத்தினின்றும் விடுவித்துச் சிவனுரைக்கண்டு மகிழ்ந்து வணங்கும்படிச் செய்விக்கும் மகிமையுடையது.

இதுவுமன்றிக் கங்கை, யமுனை, பிரயாகை என்று சொல்லப்படும் நதிகளிருக்கின்றன. அவைகளின் பெருமை எத்தன்மைத்தெனின் கும்பகோணத்தில் மாகமாச மக நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்து கும்பேஸ்வரரை நமஸ்கரிக்காமல் கேவலம் அற்பமான அஞ்ஞானத்துக் குள்ளாய் சிவ புண்ணியங்களைத்தேடும் அறிவுசிறிதுமின்றி அறிவுடையார் போலுலாவும் அறிவிலிகள் எக்காரணத்தினாலாவது மாசிமாதத்தில் அந்த கங்கை முதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்யப் பெறுவராயின் அவர்களுக்குச் சனன மரணத்துக்கத்தினின்றும் விடுவிக்குஞ் சிவபுண்ணியத்தால்வரும் நல்லகதியைக்கொடுக்கும். ஓ பார்வதி! இன்னமும் அந்த நதியின் பெருமையை நானென்னவென்று சொல்லுவேன்.

கங்காதீரமாகிய காசியில் விசுவநாதரே சகல ஆன்மாக்களுக்கும் பிரணவசகிதமாய் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுபதேசித்து அவர்களை இந்தச் சம்சாரபந்தத்தினின்றும் நிவிர்த்தித்துச் சாரூப முத்தியைக் கொடுக்கின்றுரென்றால் அதனினுஞ் சிறந்த தலமெது. அது சிவக்ஷேத்திரங்களுக்குள் சிறந்த முத்திக்ஷேத்திரமாய்க் கைலாசத்துக்குச் சமானமாய் விளங்கத்தக்கது. அன்றியும், கிருதயுகத்தில் நைமிசவனமும், திரேதாயுகத்தில் புஷ்கரக்ஷேத்திரமும், துவாபரயுகத்தில் குருக்ஷேத்திரமும், கலியுகத்தில் கங்காதீரமாகிய காசிக்ஷேத்திரமும் முத்திக்குரிய சாதனக்ஷேத்திரங்களென்று சொல்லப்படும். இங்ஙனமான க்ஷேத்திரங்களையும், க்ஷேத்திர வாசங்களையும், சிவபக்தியையும் இகழ்ந்துகூறும் துர்வாதத்தையும், அத்துர்வாதத்தை மறுத்துரைப்பாரை வாயெடாவண்ணந் தடைசெய்தற்குரிய துர்யுக்திகளையும் எடுத்துக்கூறும் துராலோசனையிற் சிறந்த கடினமனமுடையவரையும், அவரிணக்கத்தால் நல்லவர்களுக் கிடையூற்றையே விளைவிக்கும் பாமரர்களையும், இவர்களல்லாத வேடர்கள், துலுக்கர்கள், ஊணர்கள், மற்றுமுள்ள நீசர்கள் முதலிய யாவரையும் அழிக்கும்பொருட்டு விஷ்ணுமூர்த்தி கையிலேந்தும் வாளையும் தரும சொரூபமாகிய கிளியையும் திருக்கரத்திற் றுங்கினவராய் மிக்க பராக்கிரமத்தோடுங்கூடிச் சங்கரித்து விடுவர். அக்காலத்தில் கேரளதேசத்தில் அரசர்களுக்கும் நெய்

கிடைப்பது அரிதாயிருக்கும். தயிர் முதலியவைகளை நினைப்பதற்குங்கூடாது. ஓர் சமயம் மோர் கிடைக்குமாகுல் இந்திரபதங் கிடைத்தது போலாகும், அறுசுவையோடு கூடிய வுணவுகளிற் பிரியமுடையவர்கள் ஓரிடத்திலும் நிலைபெற்றிரார். இவ்வண்ணம் அங்குள்ளவர்கள் சீவிப்பார்கள்.

கலிபந்தத்தில் நீசர்களாகிய துலுக்கர்களும், கள்வர்களும், நாஸ்திகர்களும், கூட்டமாகச் சேர்ந்துவிடுவார்கள். அக்காலத்தில் எவனாவது அளவிறந்த பாபத்தினின்றும் விடுபடவேண்டுமென் றிச்சிப்பானாயின் அவன் துலாமாசத்தில் காவேரியில் ஸ்நானஞ்செய்தல்வேண்டும். செய்வானாயின் அவன் அப்பாபங்களினின்றும் விடுபடுவான். இதுவன்றித் தென்சமுத்திரத்துக்குப்போய் கன்னியாகுமரி என்னுந் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வானாயின் அவன் கங்கையில் ஸ்நானஞ்செய்ததுபோல், சகல பாபங்களினின்றும் விடுபடுவான் என்று ஸ்ரீகைலாயத்திலுள்ள ஓர் மஹாமண்டபத்தில் வீற்றிருந்த சிவபெருமானார் கேட்பதற்குக் கெம்பீரமாயும் மதுரமாயும் எடுத்துச் சொல்லிவந்த வாக்கியாமிர்தத்தைத் தேவியார் கேட்டுப் புளகாங்கிதமடைந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பக்தியுடன் நமஸ்கரித்துத் திரிலோக நாயகராய் விளங்குந் தமது நாயகராகிய மஹாதேவரைச் சந்தோஷத்துடன் பார்த்துக்கொண்டே நின்றனளென்று ஸ்கந்த மூர்த்தி ஜைகிஷ்வ்ய முனிவருக் கருளினர்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

கலியுகதருமகதனம் முற்றிற்று.

உ

ஸ்ரீசாம்பசிவாய நம:

பதின்மூன்றாம் அத்தியாயம்.

மகாப்பிரளயகதனம்.

ஓ ஜைகிஷவ்ய முனிவரே! மஹாதேவ ரெதிரே நின்ற எம்மம்மை, மீளவும் ஈசானரைநோக்கி ஓ தேவதேவேசா, விஷ்ணுவினால் பூஜிக்கப்பட்ட பாதங்களையுடையவரே!! பிரபஞ்ச நாயகரே பிரமதகணங்களுக்கு நாயகரே! மன்மத தகனரே! ஹேசங்கரா! ஹே சம்போ! இதுகாறும் கலியந்தத்திலுண்டாகுந் துர்ப்புத்தி விசேடங்களை நன்றாய்க்கேட்டுணர்ந்தேன். இனிக் கலியந்தத்திலுண்டாகும் பிரளயத்தை எடுத்துச்சொல்லவேண்டும். அதுவன்றிப் பிரமப்பிரளயமென்பது எது? காலத்தின்கதி எத்தன்மையது? தேவரீருடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கின்றேன். அடியாளுடைய விண்ணப்பத்தை யங்கீகரித்து என்பாலுள்ள விஸ்வாசத்தால் சொல்லியருளல்வேண்டுமென்றுப் பிரார்த்திக்க அஷ்டமூர்த்தியாகிய பகவான் திறி

து யோசித்துப்புன்னகைசெய்து சொல்லத்தொடங்கினர் என்று ஜயிகிஷ்வ்ய முனிவருக்கு ஸ்கந்தமூர்த்தி சொல்ல அதனைச் சூதபகவான் முனிவர்களுக்குக் கூறத்தொடங்கினர்.

ஓ சவுனகாதியர்களே! ஸ்கந்தமூர்த்திஜைகிஷ்வய முனிவரைநோக்கி என்னுடைய அப்பனர் அம்மையாரைப்பார்த்து ஓ தேவி! பிரளயகாரணத்தைச் சொல்லுகிறேன். என்னையெனின் பிரமனுக்கு வயதுநூறு. அந்த நூறு என்கிற அளவானது ஒரு கற்பத்துக்குக் கூறும் அளவை முதலானவைகளால் யாவருக்கும் வயது நிச்சயிக்கப்படும். ஆகலான் ஒரு கற்பம் என்பது ஆயிரம் சதுர்யுகம், அந்தக்கணக்கின்படி பிரமனுக்கு ஆயுள் முடிந்தால் விஷ்ணுவுக் கோர்பகலாகும். அந்தவிஷ்ணுவுக்கு ஆயுள் முடிந்தால் ருத்திரருக்கு ஓர் பகலாகும். அந்தருத்திரருடைய அந்தமே ஈஸ்வரருக்கு ஓர் பகலாகும். அவருடைய அந்தமே சதாசிவருக்கு ஒரு நாளாகும். இவர்கள் என்னுடைய பஞ்சகிருத்தியங்களை என்னுடைய அம்சபூதர்களாய்ச்செய்து அந்தத்தில் என்னிடத்திலேயே லயத்தையடைகிறார்கள். இவர்கள்தோன்றும் பொழுதுசத்யோஜாதம் வாமதேவம் அகோரம்தற்புருஷம் ஈசானம் என்கிற என்முகத்தினின்றுந்தோன்றுபவர்களாதலால் இவர்களை என்னுடைய மூர்த்திகளென்றுங்கூறுவர். ஈசானனுகிய நானே காலங்கடந்தவனும் உருவமில்லாதவனுயுமிருக்கின்றவன். இத்தன்மையனுகிய நான் உன்னல் திரிநேத்திரமுதலிய அங்கங்களோடுகூடிய மூர்த்திமானுயும் இவ்வங்கங்களைக்காணக்கூடாத லிங்கரூபியாயு மிருப்பவனுய் கைலாசபர்வதவாசியாய்க் கணங்களோடும் உன்னேடும் விளையாடிக்கொண்டிருக்கிறேன் இதுவுமன்றி, இன்னவிடத்தி லிருக்கலாம் இருக்கக்கூடாதென்கிற சங்கையற்றுச் சகலப்பிராணிகளுடைய குணங்களையும் ஆச்சிரயித்துமிருக்கின்றேன். சர்வ வேதாந்த சாரங்களுடைய அர்த்தப்பொருளாயு மிருக்கின்றேன். புருஷரூபியாயு மிருக்கின்றேன். ஹே மஹேஸ்வரீ! நான் அகண்டமாகிய ஆனந்தரூபனுகவும், சத்யரூபனுகவும், சிற்சொரூபனுகவும், ஏகமென்று சொல்லும் பிரமசத்தத்துக்கும் மகேஸ்வரனென்னும் நாமத்துக்கும் பொருளாயிருக்கின்றவனுகவுமிருக்கின்றேன். இன்னமும் நித்தியானந்தனுயும் நிர்மலனுயும் அத்வைதனுயு மிருக்கின்றேன். என்னைவிட்டொருபொருளுமில்லை. சர்வத்துக்கும் ஈஸ்வரன் நானே. ஓ ஈஸ்வரீ! பரமானந்தமென்று சொல்லப்படுவதும் ரசரூபமென்று சொல்லப்படுவதும் நானே. யோகிகளால் தியானிக்கத்தக்கவனும் நானே. எவரிடத்தும் எவ்விடத்து மிருக்கின்றவென்னை யாது காரணத்தினுலோ ஆன்மாக்கள்வாக்கினுலாவது மனதினுலாவது என்னைப்பெருமல் விடுகின்றார்கள். நான் ரூபமில்லாதவனு யிருந்தும் யாவருந் தியானம்பண்ணு நிமித்தமே ரூபவானுயிருக்கிறேன். மானுடன் என்னுடைய ரூபத்தைத் தியானம் பண்ணுவானுயின் மோக்ஷ மடைவான்.

என்னுடைய லிங்கபூஜையானது நிர்க்குணபூஜையென்று சொல்லப்படும். அந்தப்பூஜையைச் செய்தால் சகலதேவரையும் பூசித்ததுபோலப்

கும். ஓ விஸ்வேஸ்வரீ! இந்த லிங்கரூபமானது நிஷ்களரூபமென்றும், நீல் கண்ட திரியம்பகங்களோடுகூடி உமாசகாயமாய் விளங்கும் மூர்த்தமானது சகளமென்றுஞ் சொல்லப்படும். இந்த இரண்டுரூபமாயிருக்கின்ற என்னை யாவராயினும் அறிவரோவென்முல் அறியமாட்டார். சாங்கிய யோகம் பண்ணுகிறவர்களும் பிரமிக்கின்முர்க ளென்முல் மற்றயர்கள் எவ்வா றறியவல்ல ராவர்.

ஒருவராலும் அறியக்கூடாத எனனுடைய சொரூபத்தை யறிவதற்குப் பஸ்ம ருத்திராக்ஷதாரணமும், பஞ்சாக்ஷர செபமும், சிவலிங்கார்ச்சனையும், சாதனமாயுள்ளவை. அவைகளைப் போலவே என்னுடைய க்ஷேத்திரவாசமும், நாமஸ்மரணமும், அவிமுக்தத்தில்மரணமும், அடியார்பூஜையும், பிரதோஷ சோமவார முதலியகாலங்களில் அந்திப்பூஜையும் இவைகளெல்லாம் என்னையறிவதற்குச் சாதனமாயுள்ளவை என்று வேதாகமங்களால்நிச்சயித்திருக்கின்றன. இனிப் பிரளயத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக. ஓதேவீ! கற்பமுடிவில் யாவரும்இந்திரனாலும் விஷ்ணுவினாலும் ரக்ஷிக்கபடாதவர்களாய் மிகவும் இம்சையடைந்து மிலேச்சர்களாகியசத்துருக்களால் பாதைப்பட்டு ஆட்டுக்குச்சமானமான முகங்களையும்பெற்று ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு நாசத்தையடைவார்கள். அந்தச்சமயத்தில் நாசஞ்செய் நாசஞ்செய் என்கிற சத்தத்தோடு மிருத்யு பாதையுமுண்டாகும். அதுவுமன்றி விகசித்திருக்கின்ற செந்தாமரை வர்ணமாகவும் நீலவர்ணமாகவும், பச்சிலைவர்ணமாகவும், வெள்ளையும் நீலமுங்கலந்தவர்னமாகவு முள்ள முத்துக்களைப் பொழிகின்ற மகாமேகங்கள் ஆகாய முற்றும் பரவி மின்னல்களாகிய வொளிவீசி சூரியகாந்தியைப்போக்கி அஸ்தமிக்கும் பருவத்தைக்காட்டும்.

ஹேதேவீ! அந்த அந்திப்போதில் சந்திரசேகரனாகிய நானொருவனே சஞ்சரிப்பேன். அக்காலத்தில் இவ்வுலகம் நாசமடையும், எவ்வாறெனின் சுங்கான் கற்களை வாரியடிக்குங் காற்றுகளுண்டாகும், நதம் நதிகளுக்குத் தலைமையாகிய சமுத்திரம் அலைகளோடுபரவும். அதன்பிறகு வருணனால் தூண்டப்பட்ட மேகங்களைச் சூரியர்கள் தகிக்கச்செய்வர். திக்குகளெல்லாந் தாபத்தை யடையும், பூமியைச்சுமக்கின்ற அஷ்டகஜங்கள் பாபிஷ்டர்களுடைய பாரத்தினால் கம்பஞ்செய்யும். மகாசமுத்திரங்களும் பர்வத சமூகங்களும் காற்றுகளினால் சிதறி ஒன்றேடொன்று மோதும். இவ்வாறு உலகமெல்லாம் அழியுங்காலத்தில் கைலாயமொன்றுதான் ஒ ரழிவு மெய்தாதோங்கிநிற்கும். நானே மேககாந்திக்குச் சமானமான காந்தியையுடையவனும்,மேக கர்ச்சனையிலுஞ் சிறந்த பயங்கரமாகிய கர்ச்சனையைச் செய்து மிகுந்த சந்தோஷத்தோடுங் கூடினவனும், மிகவும் மேலோங்கியிருக்கின்ற பர்வதசிகரங்களில் மோதுகின்ற மேகங்களினின்று முண்டாகிற சமுத்திரம் போன்ற தாரைகளை யாவருக்கும் அச்சத்தை விளைவிக்குஞ் செந்நிறமுடைய சடையிற் றுங்குகின்றவனுயுமிருப்பேன். பின்னர் வேதவாக்கியங்களால் துதிக்கப்பட்ட நான் அவ்வேதத்தில் விதித்திருக்கு

ம்வண்ணம் மேகங்களை வருஷிக்கச்செய்து மின்னல்களை யுண்டாக்கி அவ் வெள்ளப்பெருக்கால் சமுத்திரத்திலுள்ள ஜெந்துக்களை யழித்துவிடுவேன் பின்னர் மேலெழுந்தோங்கிய பெரிய அலைக்கூட்டங்களாலும் அமோகமாகி ய மேகங்களைச் சிதறவடிக்குங் காற்றுப்பெருக்காலும், பூகம்பமுண்டாக்கிச் சமுத்திரம் பர்வதம் பூமி என்பவையில்லாமல் யாவுமொன்றாய்க் கலந்து சேரும் வண்ணஞ் செய்வேன். அப்பொழுது பூமியிலுள்ள தீர்த்தங்க ளெல்லாஞ் சூரியகிரண சமூகங்களால் சுவறிப்போகும். பர்வதமுதலியவை களும் சாம்பலாய்ப்போகும். இவ்வாறாகும் பிரளய காலத்தில் பட்டணங் களேது மானுடர்களேது மிருகங்களேது ஒன்றுங்கிடையா, இந்தப் பூமி யின் கரையை யுடைத்து மாறி மாறி அதிகோரமாய்ச் சுழன்று வருகின்ற அலைகளினுடைய சமூகங்களைப் பரவச்செய்து பேரிரைச்சலோடுங் கூடிய பெரிய அவ்வலைகளினாலே கலங்கியிருக்கின்ற சமுத்திரங்களை ஏழுலோக பரியந்தமும் பரவும் படிப்போக்கி எல்லாப் பர்வதங்களையும் தேவசஞ்சார மான பிரதேசங்களையும் அதிவேகமாக அழித்துவிடுவேன். ஓ தேவீ! அப் பொழுது அச்சமுத்திர மத்தியி லிருக்கிற வடவாமுகாக்கினியி னுடைய புகையோடு கூடிய சுவாலைதோன்றி பர்வதசமூகங்களையும், தேவாசுரர்க ளையும், தகித்துக்கொளுத்திச் சாம்பராக்கிவிடும். அச்சாம்பரெல்லாஞ் சமு த்திரத்திற் கலந்து சேருய்விடும் இதுதான் பிரமப்பிரளயமென்று சொ ல்லப்படும்.

பர்வதங்கள் தேசங்கள் முதலிய எதுவு மில்லாமல் சகலமு நாசத் தையடைந்து கலக்கமுற் றிருக்கிற அவ்விடத்திற் சூலதாரியாகிய நான் பிர மனைச் சுட்டெரித்த திருநீறு சண்ணித்து அதுவீசுங்காந்தியையுடைய திரு மேனியனாய், நீலநிறமுடைய பச்சிலைக்குச் சமானமான கண்டத்தையுடை யவனாய், அந்தப் பிரமப்பிரளயத்திலுண்டாகிய பெரிய அலைகளினுடைய கோலாகலத்திற் கலந்தவனாய் அந்தச்சங்காரமாகிய இரவெல்லாம் வசிப் பேன். அவ்விரவில் நக்ஷத்திரம் சோமன் சூரியன் யமன் திக்பதிகள்மற்று முள்ள ஆகாயவாசிகள் பூமி பிரமன் முதலிய தேவாசுரர்கள் பிராணிகள் ஆகிய சேதனு சேதனங்களொன்று மிருக்கமாட்டா. அப்பொழுது திரு மால் அலையோடுகூடிய அவ்வெள்ளத்தில் மிதந்துக்கொண்டு பால லீ லாலோலனாயிருப்பான். அவனை நான் விழுங்கி ஹே சிவே! புயத்தளவு நீண்ட சூலாயுதத்தைத் தாங்கி அம்மகாப் பிரளயத்தில் பெருங்கோஷஞ் செய்து ஆனந்த நிருத்தஞ்செய்வேனென்று சிவபெருமானார் தேவியாருக் கெடுத்துரைத்தனரென்று ஸ்கந்தர் ஜைகிஷவ்யமுநிவருக்குக் கூறினார்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

மகாப்பிரளயகதனம் முற்றிற்று.

ஸ்ரீசாம்பசிவாயநம:

பதினொன்காம் அத்தியாயம்

பிரஹ்ம ருத்திர சிருஷ்டி.

ஸ்கந்தமூர்த்தி ஜைகிஷவ்யமுநிவரைநோக்கி ஓ முநிபுங்கவரே! எனது அம்மையாராகிய தேவியார் இறைவனாரைப் பணிந்து கைகூப்பி நின்று ஹே சிவா! பிரமனுடைய அந்தத்தில் வரும் கலியுகாந்தத்திற் காணப்படும் பிரமப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் சலமயமா யிருப்பதாயும், அச்சமயத்தில் தேவரீர் பிரமதேவனை நீறாக்கித் திருமேனியி லணிகிறதாயும், அவ்வெள்ளத்தில் பாலனாய் மிதந்துகொண்டிருக்கிற நாராயணனை விழுங்குவதாயும் சொல்லியருளினீரன்றோ. பிரமனெப்படி நீறுவான்! மீண்டும் நீறாய்ப்போன பிரமனும், விழுங்கப்பட்ட விண்டுவும் சிருஷ்டிகாலந்தோறும் எப்படித் தோன்றுவார்கள். ஏனையவுலகங்களும் எவ்வாறு தோன்றும்? ஹே ஜகதீசா! இவ்விஷயத்தில் எனக்குச் சந்தேகந்திரச் சொல்லி யருளல்வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய, இறைவனார் அத்தேவியைப்பார்த்துச் சொல்லியவாறு உமக்கு அந்த ஆதி ரகசியமாயுள்ள அற்புதவிஷயத்தை நன்றாய் விளங்குமாறு விரித்துச் சொல்லுகிறேன். சகலதாபங்களையும் போக்கவல்ல அதனை சாவதானமாய்க்கேளும். நான் உமக்குச் சொல்லுவதுபோல் நீர் பிறருக்குச்சொல்லலாகாது. இது உமக்குள்ளே ரகசியமாயிருக்கத்தக்கது.

இனிப் பிரமன் நீறா யிறைவன்றிருமேனியிற் போய்ச்சேரும்வகையைக்கூறுகின்றேன். முன்கூறியபடி பிரமப்பிரளயம் வரும்பொழுது பிரமனால் சிருட்டிக்கப்பட்ட நவப்பிரமாக்களும், தேவாசுரர் கந்தர்வ கின்னரர்களும், மநு மாநுட நாகர்களும், அப்சரஸ்திரீகளும், கருடரும், சமுத்திரங்களும், த்வீபங்களும், நதிநதங்களும், வன பர்வதங்களும், புவனதேசங்களுமாகிய சராசரங்களெல்லாம் பிரமனுடைய கருப்பத்திலடங்கும். அப்பொழுது சிருட்டித்தொழிலைவிட்டு இந்திரியங்களை யடக்கித் துவாதசாந்தநோக்கமுடையவனாய்த் தன்னை சிவத்தினிடத்தும், சிவத்தைத் தன்னிடத்துங் கண்டு அதுவாயிருத்தலாகிய சிவயோகத்தில் ஒருகற்பமிருப்பான் அப்பொழுது பகலில்லை இரவில்லை ஒளியில்லை இருளில்லை. பின்னர் அச்சிவயோக முதிர்ச்சியினால் தபாக்னி வெளிப்பட்டு அவனை நீறாக்கிவிடுகின்றது. அதனைப்பிராமியமென்று சொல்லப்படும். அந்தசாம்பலைத்தான் ஈசானராகிய சிவபெருமானார் திருமேனியி லுத்தூளனமாகப் பூசி ஆனந்த நிர்த்தனஞ் செய்தருளுவர்.

ஓ முநிவரே! இவ்வாறு கற்பங்கடோறும் பிரமர்கள் பஸ்மமாய் என்னுடைய சரீரத்தில் உத்தூளனமாய்ப் பூசப்பட்டு ரோமசமூகங்களிற் படிந்திருப்பார்கள். புனருற்பவமாகிய சிருஷ்டிகாலந்தோறும் வேதாங்

கங்களாகிய சாஸ்திரங்களாறும் தோன்றும்போது அந்த ரோமத்தினின் றும் பிரமர்களுண்டாவார்கள். ஓ தவசீலரே ! ஒரு கற்பத்திற் னடந்த சிருஷ்டிக்கிரமத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக.

ஆதி சிருஷ்டியிற் றோன்றிய பிரமனுக்குப் பூர்வத்தில் எவ்வாறு சிவனார் ஆக்ஞை செய்திருக்கின்றாரோ அவ்வாறே அந்த ஆக்ஞையைக் கடவாமல் சிருஷ்டி செய்யத்தொடங்குங் காலத்தில் லோகாலோகங்கள் பூதங்கள் மநுக்கள் ருஷிவர்க்கங்கள் இந்திரன் உபப்பிரம்மாக்கள் பிரஜைகள் நதி நதங்கள் புரங்கள் வனங்கள் மலைகள் சாகரங்கள் வருணதருமங்கள் வருணாச்சிரமங்கள் தர்மா தருமங்கள் தேவாசுரர்கள் அரசர்கள்முதலாகச் சொல்லப்பட்ட சராசராத்மகமாகிய சகலப் பிரபஞ்சங்களையும் முன் யுகத்திலெப்படி யுண்டாக்கப்பட் டிருந்தனவோ அவ்வாறே யுண்டாக்கும் வல்லபத்தை யுடையவனும் யாவையும் படைத்து அந்தச்சிருஷ்டித்தொழில் மென்மேல் வளரும் பொருட்டு உருத்திரரைத் தியானித்தனன். அப்போது காலாக்கினி ருத்திரர் அவனுடைய பிரம ரந்திரத்தைப் பேதித்து அவனெதிரில் சூலஹஸ்தராய், திகம்பரராய், சந்திரசேகரராய், சர்ப்ப பூணராய், பஸ்மோத் தூளிதராய், திரிபுண்ட தாரணராய் வியாக்கிர சர்மதாரியாய் ஆனந்தக் கூத்தாடினர்.

இவ்வாறு தன்னெதிரில் கூத்தாடுகின்ற சூலபாணியைத் தரிசித்து எழுந்திருந்து அவர் சமீபத்திற் சென்று நமஸ்கரித்து ஓ காலாக்கினி ருத்திரரே ! திரிநேத்திர முடையவரே! என்று பலவாறுகத்தோத்திரஞ்செய்து ஓ ருத்திர மூர்த்தியே! யான் பரமேஸ்வரருடைய ஆக்ஞையால் பிரேரிக்கப்பட்டவனாய் எல்லா வுலகங்களையும் சிருஷ்டிசெய்யும் பாரத்தைவகித்திருக்கிறேன், ஓ பகவானே! நான் சிருஷ்டி செய்யும் வகையை நன்றுயறியாதவனா யிருக்கிறேன், ஆகையால் என்பால் கருணைவைத்து அநேக சீவர்களைச் சிருஷ்டிக்கும் வகையைக் காட்டுவீர.யின் பின்னர் அடியேன்படைக்கும்வகையை நன்றுயறிந்துகொள்வேனென்று பிரார்த்திக்க சிவபெருமானுடைய நேத்ரோற்பவராகிய காலாக்னிருத்திரர் அலக்ஷ்ய பாவத்தைக் காட்டும் புந்நகைசெய்து நானாவிதமான அலங்காரத்தோடு கூடினவர்களாயும், கெம்பீரமான நேத்திரமுடையவர்களாயும், பாணம் கத்தி பாசமுதலிய ஆயுதங்களை யுடையவர்களாயும், மேககர்ச்சனைபோலும் தொனியுடையவர்களாயு முள்ள அநேகருத்திரர்களை யோாகணத்திற் சிருட்டித்தனர். அவர்களைப் பிரமன்பார்த்துப்பயந்தவனாய் உருத்திரரைநோக்கி ஓ காலக்னிருத்திரரே உலகமெல்லாம் உருத்திரகோடிகள் மயமாயிற்றே யன்றி வேறொருவரையுங் காணேன். இவ்விதமான சிருட்டிவேண்டாம். உருத்திர சொருபங்களும்வேண்டாம். சனனமரணத்தோடுங்கூடியபிராணிகளைச்சிருட்டி செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, காலாக்னிருத்திரர் மூன்றுலகங்களிலேயு முள்ள அநேக விடங்களிற்றன்னாற்படைக்கப்பட்ட உருத்திர கோடிகளைத்தாபித்துப் பிரமனை நோக்கி நான் மரணத்துக்குட்பட்ட பிராணிகளைச் சிருட்டிக்கமாட்டேன். நான்

எந்தவிதமாய்ச் சிருட்டித்தபோதிலும் அவர்களுக்கு மரணமுண்டாகமாட்டாது, ஆகையால் ஓ பிரமனே! இனி நீயே குலாலனைப்போல் சனன மரணத்தோடுங்கூடிய பிராணிகளைச் சிருஷ்டித்து வருவாயென் றனுக்கிரகஞ் செய்து மறைந்தனர். அதுபோல் பிரமன் தான் சிருஷ்டிசெய்யத் தக்க சனன மரணத்தோடுங்கூடிய ஆன்மகோடிகளைக் கற்பங்கடோறும் பரம்பரையாய்ச் சிருஷ்டித்து வந்தனன்.

இவ்வண்ணம் நடந்துவரும் கற்பங்களில் பிரமவிஷ்ணு ருத்திரர்களாகிய மூவரும் ஒவ்வொருகால விசேடங்களில் ஒவ்வொரு காரணார்த்தமாக ஒருவரிடத்தி லொருவர்தோன்றி இவருக்கு அவர்தந்தை அவருக்கு இவர் தந்தை என்று சொல்லும்படியான அன்னியோன்னிய சம்பந்தமுடையவர்களா யுலகத்தைப் பரிபாலித்து வந்து,பின்னர் உருத்திர சாரூப்பியத்தை யடைவார்கள். ஓர் கற்பத்தில் என்னுடைய வலப்பாகத்திற் பிரமனும், இடப்பாகத்தில் விஷ்ணுவும் நெற்றியில் உருத்திர மூர்த்தியுந் தோன்றுவர். இவ்வாறு மூவருந் தோன்றியபின்னர் பிரமனுக்கு வேதசாஸ்திரங்களெல்லாங் கற்பித்து அவைகளையும் அவன்பாலொப்பிவித்து அவனுக்குச்சிருஷ்டியில் மயக்கமுண்டாகுந்தோறும் ருத்திரமூர்த்தி யவனுடைய நெற்றியிற் றோன்றி அம் மயக்கத்தைப்போக்கித் தெளிவுண்டாகும் வண்ணம் அனுக்கிரகஞ்செய்துவருமாறு கட்டளையிட் டிருக்கிறேன். அதுபோல் பிரமன் வேதமுறை தவறாமலும் உருத்திர மூர்த்தியினுடைய அனுக்கிரகத்தைப் பெற்றும் உலகைப்படைத்து வருவானாயின் அவைகளை நாம் அக்னிநேத்திரத்தாற் சுட்டெரித்து மறுபடியுஞ்சிருட்டிக்கத் தொடங்குவேன். பின்னர் பிரம விஷ்ணு ருத்திரர்களை இந்த மூன்று சகத்தையும் முத்தொழில் செய்து வரும்படி ஆக்ஞைசெய்து வருவேனென்று சிவபெருமானார் தேவியாருக் கருளியதை ஸ்கந்தமூர்த்தி ஜயிகிஷவ்ய முனிவருக்குக் கூறினார்.

பதினான்காம் அத்தியாயம்

பிரம ருத்திர சிருஷ்டி முற்றிற்று.

உ

ஸ்ரீசாம்பசிவாயநம:

பதினைந்தாம் அத்தியாயம்

பிரஹ்ம விஷ்ணு கிருத சிவஸ்துதி கதனம்

ஓ முனிபுங்கவரே! என்னம்மை என் னப்பனாரைப்பார்த்து விஷ்ணுவைக்கர்ப்பத்தில் வைத்திருப்பதாகச் சொல்லியபடியால் அவரை நீர் எவ்வளவுகாலம் கர்ப்பத்தில் வைத்திருப்பீர். அதனைச் சொல்லியருளவேண்டுமென்றுகேட்க மகாதேவர் பார்வதியாரைநோக்கி ஓ கமலலோசனி! விஷ்ணுமூர்த்தி என் கர்ப்பத்தில் ஒரு கற்பகால மிருப்பான். அங்கிருந்தவண்ணமாகவே யோகதிருஷ்டியினால் சமுத்திரங்கள் நதி பர்வதங்கள் த்வீபங்

கள் வனங்கள் தேவாசுரர்கள் மற்றுமுள்ள நவக்கிரகங்கள் நாக கந்தர்வர் சாத்தியர்கள் அஸ்வனிதேவதைகள் பிரம ருத்திரர்கள் ருஷிகள் வேதவே தாந்தங்கள் ஏனையகலைகள் இறந்தகால நிகழ்கால எதிர்காலமுதலிய கால ங்கள் அகசு பக்ஷம் வருஷம் முதலிய யாவுந் தோன்றிப் பிரகாசித்திருப் பதையறிந்து ஆச்சரியமுற்றுத் தானும் வெளியே வரவேண்டு மென்கிற வெண்ணத்தினால் அங்கிருந்தவண்ணமாகவே பஸ்ம ருத்திராக்ஷதாரியாய் அஞ்சலியஸ்தனாய் நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்ய ஹே தேவி! நா னுமவனுக் கனுக்கிரகிக்க வேண்டுமென்கிற கருத்தால் அவ்விஷ்ணுவை அபானவழியாக வெளிப்படுத்தினேன். அவன் கீழ்நோக்கியவழியாய் வெளிப்பட்ட படியால் அதோக்ஷஜனென்று பெயர் பெற்றனன்.

அவன்செய்த தோத்திர மென்னை யெனின், "ஹே சம்போ மஹா உருத்திரமூர்த்தி புரஹர பகவந் அந்தகாலே கபர்த்தின் பூதேசா அம ரபாலகா மகாக்கிராஸா சர்வபக்ஷகா சந்திரசூடா சுவாமிந் தேவ தேவா தயாநிதே சர்வா சர்வேஸ்வரா கருணையினால் என்னைரக்ஷியும், மன்ம தாந்தகா மகேஸ்வரா மஹா தேவா வாமதேவா ஜிதகாமா உமா சகாயா பஞ்சபூதாத்மகா சுருதிசிமா சுகாதிதாமா சோமலாளா உம் மைச்சாமவேதங்களால்தோத்திரஞ்செய்கின்றேன் என்னைரக்ஷியும், ஹே பர்க்கா திரிலோகரக்ஷகா அகண்டமாகிய கருணைக்கடலே காலகா லனே தேவாசுரர்களுக்குக் கதிபதிகளான பிரம விஷ்ணுருத்திரர்களால் சேவிக்கப்பட்டவரே நெற்றிக்கண்ணினாற் காமனை யெரித்தவரே தக்ஷ யஜ்ஞநாசகரே விருஷபாரூடரே பகனுடைய நேத்திரத்தைப் பங்கப்படுத் தினவரே ஹே கைலாசவாசா ஆதியாயுள்ளவரே சிருட்டிக்கு முற்பட்ட வரே என்னை உம்முடைய கடைக்கண்ணாற் பாரும், ஹே சம்போ அக ண்ட பிரவாகத்தோடுங் கூடிய கங்கையைச் சடாபாரத்திற் பூஷணமாக வணிந்தவரே வேதவாக்கியங்களுக்கு எல்லையா யிருக்கின்றவரே பால சந்திரனைச் சிரசிலணிந்திருக்கின்றவரே ஹே பகவானே உம்முடைய கிரு பையினால் அநாதனாயிருக்கின்ற என்னைச் சநாதனாகச் சுகஞ்செய்யும். வே தங்களைக் குதிரைகளாக வுடையவரே பிரமனைச்சாரதியாக வுடையவரே! சந்திரசூரியர்களைச் சக்கரமாகவுடையவரே பூமியை ரதமாகவுடையவரே மேருவை வில்லாகவுடையவரே சந்திர அக்னி விஷ்ணு சொரூபமாகிய பாணத்தினால் முப்புர மெரித்தவரே சர்வத்தையுஞ் செயித்தவரே தேவ சமூகங்களைப் பரிபாலிக்கின்றவரே" உம்முடைய கருணைப்பிரவாக சமூக மாயிருக்கின்ற தேவர்களையும், பிராமணர் களையும், மற்றுமுள்ள உல கங்களையும் உலகத்திலுள்ள பதார்த்தங்களையும், பார்க்கவிருப்பமுடை யவனா யிருக்கிறேன் பூஜ்யராயிருக்கின்ற நீர் கர்ப்பமாகிய இந்தவனத்தி லிருந்து என்னை வெளிப்படுத்தும்.

ஹே அம்பிகே! முரஹரனும் செந்தாமரைக் கண்ணனுமான விஷ்ணு மூர்த்தி பக்திபூர்வகமாய்ச் சித்தத்திற் றியானித்து என்னுடைய பாதபூ ஜையில் சிரத்தையுடையவனாய்த் தோத்திரஞ்செய்த வகை இதுவாகும்.

பின்னர் என்னுடைய கர்ப்பஸ்தானத்திலிருந்துவெளிப்பட்டு அநேகலோகங்களையும் அநேக பிரஜைகளையும் பிரமன் முதலாயினோரையும் அநேகத்வீபங்களையும் நதி பர்வத வனங்களையும் பார்த்து இவைகள் எப்படி யுண்டாயிற்றென்று ஆச்சரிய மடைந்தனனென்று தேவியாருக்கருள் செய்தனர். ஓ ஜைகிஷவ்யமுனிவரே பலசாலியாயும் தேஜஸ்வியாயும் விளங்குகின்ற விஷ்ணுமூர்த்தி சிவகர்ப்பத்திலிருந்துசகலபாவங்களையும் நிவர்த்திசெய்யவல்ல தோத்திரத்தைச் செய்து வெளிப்பட்ட பின்னர் பிரமன் அவரைப்பார்த்து நமஸ்கரித்துத் தான் சிவபெருமானுடைய பாதாரவிந்தத்தி லயித்த மனமும் வணங்கியதலையும் சிவானந்தந் ததும்பும் முகமுமுடையவனாய் வாழைக்கனிபோன்ற மதுரவாக்கினால் ஆனந்த சமூகமாகியதோத்திரத்தை அடியில்வருமாறு செய்யத்தொடங்கினன்.

கருணைப் பிரவாகத்தோடுங் கூடிய வீக்ஷணத்தினால் என்னைப் பார்த்தருள்வாய். குபேரனுக்குச் சிநேகிதராயும், விருஷபாருடராயும், வெள்ளிய விபூதியை யணிந்தவராயும், விஷ்ணுவினால் பூஜிக்கப்பட்டவராயும், உமாதேவியிடத்திற் பிரியமுள்ளவராயும் பிக்ஷார்த்தமாய்க் கபாலபாணியாயும், திரிநேத்திரமுடையவராயும் திரிபுரசங்காரியாயும், நித்திய சுதந்தர...ருக்கின்ற தேவரீரைத் துதிக்கின்றேன். யானைத்தோலைப் போர்த்...யும், பார்வதிபதியாயும், மானைத் தாங்கினவராயும், சர்ப்பங்களைப் ...மாகத் தரித்தவராயும், ஓர் விளையாட்டாக அக்னி நேத்திரசுவா...னால் மன்மதனைத்தகித்தவராயு மிருக்கின்றமகாதேவரே! தேவரீரைத் ...திக்கின்றேன்.

ஹே ஹர, புர ஹர, பவோத்பவா! என்னுடைய குற்றங்களை க்ஷமிக்க வேண்டும். ஹே நீலகண்டா! ஹே சங்கரா! ஹே மோக்ஷகர்த்தா என்னை ரக்ஷியும். ஹே பவா உம்முடைய அநுக்கிரகவைபவத்தைப்பார்க்கவேண்டுமென் றெண்ணிச் சிருட்டியைவிரும்பிய எனக்கு அத்தொழிலைக் கொடுக்க என்னைச் சிறிதுகாலம் தியானத்தி லிருக்கச்செய்யும். ஹேசம்போ ஹே பாலேந்துசூடா உம்முடைய மகிமையைப் பார்க்கும் விஷயத்தில் பிரம விஷ்ணுருத்திரர் என்கிற எங்களுடையமகிமாதிசயம்எம்மாத்திரம். ஓ பிரபஞ்சநாயகரே வேதங்களைச் சுவாசமாகவுடையவரே! சர்வ பக்ஷகரே! நீர் சர்வவியாபி! உம்முடைய சந்நிதானத்தில் நா னென்னவெடுத்துச் சொல்லப்போகிறேனென்று தோத்திரஞ் செய்தனன்.

விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவனுஞ் செய்த தோத்திரத்தைச் சிவனார் கேட்டு மகிழ்ந்து அவ்விருவர் வேண்டுகோளின்படி எல்லா வுலகங்களையுஞ் சிருட்டிக்கவும் ரக்ஷிக்கவும் அநுக்கிரகஞ்செய்ய அதுபோல் இருவருஞ் செய்துவந்தனர். பின்னர் உமாதேவியாருடைய வேண்டுகோளால் அளவிறந்த ஞானத்தோடுங்கூடிய தேவசமூகத்தையும், ஏனையசாஸ்திரங்களையும், சிவார்ச்சனைக்குரிய ஆகமங்களையும் படைத்தருளினர்.

ஓ முனி புங்கவரே! இறைவனார் கைலாசவாசத்தில் நீங்காத பிரியமுடைய உமாதேவியாருக்கு எடுத்துக்கூறுந்தோறும் ஆனந்தம் விளைவதைக்கண்ணுற்று இதனினுஞ் சாரமாகிய அரியவிஷயங்களைச் சொல்லுகிறேனென்று திருவாய்மலர்ந்தருளியதைக் கூறுகிறேன் கேட்பீராக.

சிவபெருமானுடைய பாத பூஜையில் ஆதரவுள்ளவர்கள் யாரோ அவர்கள்தான் இவ்வுலகத்தைக் கடந்திருக்கின்றவர்கள். கிருத திரேதா

கங்களில் உணவைவிட்டு அநேககாலந் தவத்தைச்செய்தாற்றான் அதற்குரிய நன்மையுண்டாகும். துவாபரயுகத்தில் யாகமுதலியவற்றைச்செய்து அவைகட்குரிய யாகதிக்ஷையுடையவர்களுக்குத்தான் அவைகட்குரிய நன்மையுண்டாகும். கலியில் தவம் யஜ்ஞமுதலியதர்மங்கள்செய்யத்தொடங்கினும் நாசமாய்விடும் ஒன்றும்நடவாது. ஆகையால் ஒருஅரைக்ஷணமாவது கங்கையைப்போல் சர்வ பாவங்களையும் போக்கவுல்ல சிவநாமஸ்மரணையையும் சிவபூஜையையுஞ் செய்வாராயின் அவர்கள் அந்த மூன்றுயுகங்களிலும்அடையப்படும் நன்மையினும் மேலானநன்மையை யடைவார்கள். இந்த இரண்டைப்போல் அறநூலிற் சொல்லப்படுந் தானங்கள் யஜ்ஞங்கள் வேதபாராயணங்கள் தீர்த்தயாத்திரைகள் என்ன பிரயோசனத்தைச் செய்யும். எக்காலத்திலாவது யாவராயினுஞ் சிவலிங்க சொரூபத்தைத் தரிசனஞ் செய்வாராயின் அவர்களுக்குச் சர்வபாக்கியங்களு முண்டாகின்றன. சாயங்காலத்தில் தரிசனஞ்செயதால் அளவிறந்த தவத்தைச் செய்த பலனுண்டாகும். கலியுகத்தில் கோபுர சிகரங்களுடைய தரிசனமேனுஞ் சண்டாள ஜன்மமுடையார் கிடைக்கப்பெறுவராயின் அவர் சிவனருளுக்குரியவராவர். அந்தச் சிகரங்களிற்படிந்துவரும் காற்றின்பரிசம் ... முதலிய பாவசன்மங்களும் தாவரங்களு மடையப்பெ...மாயின் அவ...க்குச் சிவலோகவாசமுண்டாகும். உற்சவதரிசனஞ் செய்கின்றவர்க... அளவிறந்தபுண்ணிய முண்டாகும். அவ் வுற்சவதரிசனஞ்செய்வோர் ராயினும் சம்பத்தையடைவார்கள். ஆகையால் கலியில் சிவலிங்கபூ... சிவாலயசேவை திருவிழாதரிசன முதலிய சிவபுண்ணியங்களைச் செய்வ... ராயின் அவர்கள் புண்ணியங்களுக்கெல்லாம் மூலபண்டாரமாயிருப்பர். சிவபுண்ணியமாகிய செல்வத்தின் திறமுணர்ந்த பெரியோர் ராகத் துவேஷாதிகளுக் கிடஞ்செய்யும் நாடு நகரங்களைவிட்டு வனவாசிகளாய் ராகத்துவேஷாதிகளற்ற நல்லறிவினால் சாந்தராய் இருதயவாசியாய்க் கா... ...கராய் உமாகாந்தராய் விளங்கும் எமதுபெருமானை அன்புடனாராதித்துச் சர்வதோஷங்களையும்போக்கித் திடசித்தமுடையவராய் வாழ்வார்கள் என்று சொல்லப்படுவனவாகிய சிவபுண்ணிய விசேஷங்களைத் தேவியாருக்கு மஹாதேவர் அநுக்கிரகஞ் செய்துவரும்போது அத்தேவியார் சிவபெருமானுரை நோக்கி எமது பெருமானே! கலியிற் பிறக்கும் ஆன்மகோடிகளுக்குண்டாகும் பக்தியினுடைய பெருக்கத்தையும், அதனா லவர்களடையப்படுஞ் செல்வங்களையுங், அவர்களுடைய வரலாற்றையுங் கேட்க ஆவலுடையவளா யிருக்கின்றேன் ... யதை ஸ்கந்தமூர்த்தி ஜயிகிஷவ்ய முனிவருக்குரைத்தவாறு சூதபகவான் சௌனகாதியருக்குச் சொல்லத் தொடங்கினர்.

... ...

பதினைந்தாம் அத்தியாயம்.

பிரஹ்மவிஷ்ணு ... துதிகதனம் முற்றிற்று.